


இந்த இதழில்:
ஜெயகாந்தன்
எழுதும் தொடர்கதை

கல்கி

KALKI 21-1-79
75 காசு



FOR TOTAL RELIABILITY IN HIGH TENSILE FASTENERS:
'TVS'
Yes, for years, the name 'TVS' has been synonymous with total reliability in quality high tensile bolts, screws and nuts.
Precision engineered, cold forged and heat treated–the standard and special fasteners are manufactured to meet specific requirements.
What's more, Sundram Fasteners plans production to suit delivery commitments which will optimize your procurement efficiency. The result: a big saving in inventory costs.
Cars, trucks, buses, three-wheelers, scooters, motorcycles, tractors, industrial engines, tillers, diesel locomotives and earth-moving equipment are fitted with TVS fasteners as OE. They are also used in other non-automotive engineering applications.
'TVS' high tensile fasteners conform to Indian, ISO, American, British and DIN standards. Fasteners are also made to customers' specifications.
Available in diameters from 6 mm (¼") to 24 mm (1"), and in lengths from 12 mm (½") to 200 mm (8").
Sundram Fasteners—a single source for all your standard and critical special fasteners needs.
Where fastening is critical 'TVS' the first choice
TVS
Manufactured by:
Sundram Fasteners Limited
PADI, MADRAS 600 050
PHONE: 632701 GRAMS: SUNLOC
TELEX: 041-7549 FASN IN
SAA/SFL/3118

சென்னை டெஸ்ட்:

முதல் நாள் ஹீரோக்கள்





கபில் தேவ்



காளிசரண்

வெங்கட் வீசிய இன்ஸ்விங் அவுட்



பாரி ரன் அவுட்



நமது காரியாலயத்துக்கு விஜயம் செய்து அதிர்ஷ்டப் பரிசுத் திட்டத்தின் கீழ் பரிசு பெறும் கல்கி வாசகர்களைத் தேர்ந்தெடுக்கத் திரு கமலஹாசன் மிகவும் ஆவலாக இருந்தார்.

ஆனால் துரதிருஷ்ட வசமாக ஒரு சிறிய விபத்தில் சிக்கிக் கொண்டார். அவுட்டோர் ஷூட்டிங் போன இடத்தில் குதிரை கால் தடுமாறி விட, இவர் கீழே விழுந்து குதிரை இவர் மேல் விழுந்து விட்டது!

கல்கி வாசகர்களின், கமலுடைய ரசிகர்களின் நல்லெண்ணம்தான் காலில் காயத்தோடு தப்பினார் எனலாம். எலும்பு முறிவுக்குக் காலில் கட்டுப் போட்டுக் கொண்டிருந்த கமல், காலைத் தூக்கித் தூளியில் தொங்க விட்டபடி ஓய்வாகப் படுத்திருந்தார். துரதிருஷ்டத்திலும் ஓர் அதிர்ஷ்டம்: நிறைய ஓய்வு நேரம் இருந்தது அவருக்கு. ஆனால் காரியாலயத்துக்கு வர முடியவில்லையே என்ற வருத்தமும் இருந்தது.

கல்கி வாசகர்களிடையே கமல்!



○ பரிசுக்குரிய நபரைத் தேர்ந்தெடுக்கிறார்

இந்த வருத்தத்தை நீக்கும் விதமாக கல்கி காரியாலயம் அவர் வீட்டுக்குச் சென்றது! பெரிது பெரிதாக மூன்று மூட்டைகளில் கடிதங்களைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு கல்கி காரியாலயத்தினர் கமல் வீட்டுக்குச் சென்றனர். வேறு சில நண்பர்களும் வந்திருந்தனர்.

கமலஹாசன் முன்பு மூன்று மூட்டைகளை அவிழ்த்துக் கடிதங்களைக் குன்றாகக் குவித்த போது அசந்து போய்விட்டார். "ஆறு நாட்களுக்குள் இத்தனை கடிதங்களா?" என்று மலைத்த அவரிடம், "சீக்கிரமே நீங்கள் பூரண குணமடைய வேண்டும்" என்று கல்கி வாசகர்கள் சார்பில் கூறி, இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு மாலை அணிவித்தார் ஆசிரியர்.

கடிதக் குவியலுக்கிடையில் கமலின் கரம் மறைந்தது; துழாவியது; ஒரு கடிதம் அவர் கரத்தில் சிக்கி வெளிப்பட்டது. யார் அந்த அதிர்ஷ்டசாலி என்று பார்க்க ஆவலுடன் காத்திருந்த நாங்கள் உடனே உறையைப் பிரித்தோம்.:

"ஜி. கண்ணன், 116, பெரிய பஜார் தெரு, கும்பகோணம்" என்று விலாசம் தென்பட்டது. திரு கண்ணன் முதல் பரிசாக எச்.எம்.டி. கடிகாரம் பெறுகிறார்.

கடிதக் குவியலை நன்றாகக் கலந்து விட்ட பிறகு மறுபடி கமலஹாசனின் கரம் கடிதக் குவியலுக்கிடையில் மறைந்து துழாவியது. இவ்வாறே அடுத்தடுத்து முதல் மூன்று அதிர்ஷ்டப் பரிசுகளைப் பெற்றவர்களையும் ஆறுதல் பரிசுகளைப் பெற்ற இருநூறு பேர்களையும் தேர்ந்தெடுத்தார் கமல். "கால் ஒடிந்த நிலையிலும் கல்கிக்குக் கைகொடுத் திருக்கிறீர்கள்! மிக்க நன்றி" என்றார் நண்பர் ஒருவர்.

இரண்டாம் பரிசு: மின் இஸ்திரிப் பெட்டி பெறுபவர்: இரா. கணேஷ், D-5, முத்துசாமி கவுண்டர் வீதி, கைகோளன் தோட்டம், ஈரோடு.

மூன்றாம் பரிசு: பேனா பால்பாயிண்ட் செட் பெறுபவர்: திரு எஸ். ராஜமாணிக்கம், 83, ஜெனரல் பஜார் தெரு, தென்னூர், திருச்சி – 17

(ஆறுதல் பரிசு பெறுவோரின் பட்டியல் அடுத்த வாரக் கல்கியில் இடம்பெறும்.)

வந்த காரியம் முடிந்த பிறகு கமலின் இல்லத்தரசி ஸ்ரீமதி வாணி வழங்கிய ருசியான காப்பியை அருந்திக் கொண்டே வாசகர்களின் கருத்துக்கள் சிலவற்றைப் பிரித்துப் படித்துப் பார்த்தோம். கல்கி வாசகர்கள் இலேசுப்பட்டவர்கள் அல்ல என்பது சில கிண்டலான பதில்களிலிருந்து தெரியவந்தது;



○ ஒரு வாசகரின் கருத்தைப் படித்துப் பார்க்கிறார்

மனம் விட்டு ரசித்துச் சிரிக்க உதவியது; ஒரு வாசகர் தாம் வாங்கும் கல்கியை மொத்தம் 19 பேருடன் பகிர்ந்து கொள்வதாக எழுதியிருந்ததைப் படித்து அசந்து போனோம்!

''கல்கியின் விற்பனையை அதிகரிக்க தரமான நாவல்களையும் சிறுகதைகளையும் கட்டுரைகளையும் பிரசுரித்தால் போதாது ஸார்! ஆணும் பெண்ணுமாக ஆறு சினிமா நட்சத்திரங்களின் படங்களை வரிசையாகப் போடுங்கள். அப்புறம், 'இந்த ஆறுபேரில் முதுகில் இரட்டை மச்சங்கள் உள்ளவர்கள் யார்யார்?' என்ற கேள்வியை எழுப்புங்கள். விடை வேறு பக்கத்தில் இருக்க வேண்டும். அங்கே, 'இவர்களில் யாருக்குமே முதுகில் ஒரு மச்சம் கூடக் கிடையாது; அப்படியே இருந்தாலும் அதை நாம் பார்க்க முடியாது!' என்று பதிலளியுங்கள்!'' என்று கமல் ஒரு போடு போட்டார்!

அவரைச் சுற்றி இருந்த நாங்கள் எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கச் சிறிதும் அஞ்சவில்லை. ஏனெனில் தரையில் கமலுக்காக விரித்திருந்த மெத்தை மீதுதானே அமர்ந்திருந்தோம்!

அடுத்து, ''அந்தப் புதிர் விஷயம் இக்கட்டும். இவற்றைப் பாருங்கள்! இந்தப் படங்களை எடுத்தது யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று இன்னொரு புதிர் போட்டார் கமல். ஒரு கத்தை வண்ணப் படங்களை எம்மிடம் தந்தார். ஒவ்வொன்றும் அற்புதமாய் இருந்தது. சில சமுத்திரம் நீர் வீழ்ச்சி வானவில்லின் வண்ணங்களுடன் காட்சிதந்தது. வாணி கமலஹாசனின் படங்கள் அருமையாக நூதனமான கோணங்களில் அமைந்திருந்தன. ''ஆர். என்? நாகராஜ ராவ்''; ''ஸ்டில் சாரதி'' ''ஏ. சுந்தரம்'', என்று பலரும் பல புகழ் பெற்ற புகைப் படக்காரர்களின் பெயர்களைச் சொன்னோம். கடைசியில் கமல், சிரித்துக் கொண்டே, ''இந்தப் படங்கள் எல்லாவற்றையும் நான்தான் எடுத்தேன்; டெவலப் செய்து வண்ண பிரிண்ட் போட்டவர் நாகராஜராவ்'' என்றார்.


''அடேடே! உங்களுக்குப் புகைப்படக்கலையில் இவ்வளவு ஆர்வமா; தேர்ச்சியா?'' என்று நாங்கள் ஏககாலத்தில் கேட்டு விட்டோம்.

அவ்வளவுதான்! பிடித்துக் கொண்டு விட்டார் கமல்! தம்மிடமிருந்த நவீன காமிராவையும் தானியங்கு முறையில் அது அடுத்தடுத்து புகைப்பட மெடுத்துத் தள்ளுவதையும் செயல்படுத்திக் காட்டினார்.

விடை பெறத் தயாரானோம். ''காரியாலயம் திரும்பி மேலே ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கவேண்டும். உங்களுக்கும் ஓய்வு வேண்டும்'' என்று கூறிப் புறப்பட்டோம்.

''மூட்டை மூட்டையாக வாசகர்களின் அபிப்பிராயங்கள் குவிந்துள்ளதே. அவற்றைப் படித்துப் பார்ப்பீர்களோ இல்லையோ?'' என்று வினவினார் கமல்.

''கண்டிப்பாகப் படித்துப் பார்ப்போம்'' என்று கமலுக்கு உறுதி அளித்தோம். அதே உறுதி மொழியைக் கல்கி வாசகர்களுக்கும் அளிப்பதுடன் அவர்களுடைய அமோகமான ஒத்துழைப்புக்கு நன்றியும் தெரிவிக்கிறோம்.


உள்துறை மந்திரி
இவ்வளவு தள்ளி நின்று போட்டோவிலே விழ மாட்டார்!
என்ன, கோபமா பார்க்கறீங்களே?
நான் சரியா தான் இருக்கேன். உங்க கண்ணாடியிலே தான் கோளாறு!
அ.இ.அ.தி.மு.க வின் இந்திரா
வன்முறையை ஒழித்துக்கட்டு
வலது கம்யூனிஸ்ட்
பச்சை குத்துகிறார்கள்!



கல்கி

1979 ஜனவரி 21
காளயுக்தி தை 8

மலர்: 37 இதழ்: 25

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

மெத்தெனமே, உன் பெயர் ஜனதாவா?

ஜனதா அரசைப் பதவியில் வைத்தபோது மக்கள் என்னென்னவோ எதிர்பார்த்தார்கள். எல்லாம் வெறும் பகற்கனவாகி வருகின்றன.

மெத்தெனம் என்பதற்கு இன்னொரு பெயர் ஜனதா என்றே கூறி விடலாம்.

'திரும்பின பக்கமெல்லாம் வேலைநிறுத்தமாக இருக்கிறதே?' என்று கேட்டபோது அன்று மொரார்ஜி சொன்னார்: ''நெருக்கடி நிலைப்பிரகடனம் அமலிலிருந்த காலத்தில் மக்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது விடுதலை பெற்றதில் அவர்கள் உணர்ச்சிகள் பீறிடுகின்றன. அமளி துமளியாக இருக்கிறது. சிறிது காலத்தில் எல்லாம் சரியாகி விடும்.''

சிறிது காலமென்ன, பல காலமாகியும் எதுவும் அடங்கவில்லை; மாறாக அதிகரிக்கவே செய்கிறது.

பாங்கு ஊழியர்கள், அதிகாரிகள் விஷயம் இழுபறியாகவே இருக்கிறது. பொது மக்களும், வர்த்தக — தொழில் நிறுவனங்களும் படும் அவதி கொஞ்ச நஞ்சமல்ல.

மார்ச் மாதம் ரயில்வே ஊழியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் நடக்கும் என பயமுறுத்தியுள்ளார்கள். போனஸ் விஷயம்தான் காரணம். இவர்களுடன் தபால்தந்தி ஊழியர்களும் பாதுகாப்புத் துறையில் உள்ள பல உற்பத்தி நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களும் கரம் கோத்துச் செயல்படுவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது.

எல். ஐ. ஸி. அதிகாரிகளின் — ஊழியர்களின் போராட்டம் தொடர் கதையாக நீடிக்கிறது.

மேற்கு வங்கத்தில் சணல் ஊழியர்களின் வேலைநிறுத்தம் சணலை ஏற்றிச் செல்லும் படகு செலுத்துவோரின் வேலைநிறுத்தம் ஆகியன நடந்த கையோடு பொறி இயல்துறை ஊழியர்களும், பருத்தி மில் ஊழியர்களும் ஸ்ட்ரைக் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

துறைமுக ஊழியர்கள் வேலைநிறுத்தம் நடந்து முடிந்த கையோடு வர்த்தகக் கப்பல் அதிகாரிகள் வேலை நிறுத்தம் செய்தனர். மறுபடி ஸ்ட்ரைக் செய்யப் போவதாக எச்சரித்தும் உள்ளனர். இன்னும் சிறிதும் பெரிதுமாக எத்தனையோ வேலை நிறுந்தங்கள்.

வேலை நிறுத்தங்கள் போதாக்குறைக்கு நாட்டில் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. விழுப்புரத்தில் நாம் கண்டதைவிடப் பயங்கரமான வன்முறைக் கலவரங்கள் பல வட மாநிலங்களில் நடக்கின்றன.

தொழிலதிபர் என். பி. காட்ரேஜ் கத்தியால் குத்தப்பட்டு ஜீவமரணப் போராட்டத்தில் இருக்கிறார். தொழிலாளர் —முதலாளி தகராறு மட்டுமல்ல காரணம்; தொழிற்சங்கங்களிடையே நிலவும் போட்டி பொறாமைகளும் தான் இது போன்ற வன்முறைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. 'அரசு தன் அதி

காரத்தை நிலைநாட்ட முடியுமா?' என்று அதற்குச் சவால் விடப்பட்டிருப்பதாக நேவல் எச். டாடா இந்தச் சம்பவத்தை வர்ணிக்கிறார்.

தமிழ்நாட்டில் முருகையன் மரணத்துக்குக் காரணம் நிலத் தகராறு மட்டுமல்ல, அரசியலும்தான் என்று முக்கியஸ்தர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

பொதுவாகவே தேசத்தில் இப்போது முன்புவிட கொள்ளை, கொலை முதலியன அதிகரித்தே வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையான காரணம் ஒன்று உண்டு. அது, மத்தியில் சக்திவாய்ந்த பலமான ஆட்சி இல்லாதது தான். அரசு பலவீனப்பட்டுப்போயிருக்கிறது என்று தெரிந்தால் தேச நலனில் அக்கறை குறைந்தவர்களின், சுயநலவாதிகளின் துணிச்சல் அதிகரிக்கும். ஆட்சியிலுள்ளவர்கள் தங்களுக்கிடையே உள்ள உட்பூசல்களைத் தீர்த்துக் கொண்டாலல்லவா தொழில் துறைத் தகராறுகள் பலவற்றைத் தீர்த்து வைக்க தன்னம்பிக்கையுடன் முன்வர முடியும்? சமூக விரோத சக்திகளை அடக்கி வைக்கத் துணிச்சலுடன் செயலாற்ற முடியும்? இந்த உண்மையை மறந்து ஜனதா அரசு, தான் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தாலே போதும், எல்லாத் தகராறுகளும் பிரச்னைகளும் நாளா வட்டத்தில் தாமாகவே தீர்ந்து போய்விடும் என்று நம்புவதாகத் தெரிகிறது. இது ஆட்சி நடத்தும் விதமல்ல; கையாலாகாத்தனத்தைக் காண்பித்துக் கொள்ளும் போக்கு.

நெருக்கடி நிலைப்பிரகடனமும் அதிகார துஷ்பிரயோகமும் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் கூட ஜனதா அரசு அதிசயிக்கத்தக்க விதத்தில் மெத்தனமே காட்டி வந்துள்ளது. விசேஷ நீதிமன்றம் நியமிக்கலாமா கூடாதா என்று விவாதம் நடத்தி, அதன்மீது சுப்ரீம் கோர்ட் அபிப்பிராயம் கோரிப் பெற்று, அது கிடைத்த பிறகு, விசேஷ நீதிமன்றம் நிறுவியதாக அவசரச் சட்டம் போடலாமா வேண்டாமா என்று யோசித்து, கடைசியில் இப்போது நாடாளுமன்றத்தில் விசேஷ நீதிமன்ற மசோதா கொண்டு வரப்போவதாகப் பேச்சு அடிபடுகிறது. கடந்த இருபது மாதங்களில் சுறுசுறுப்புக் காட்டியிருந்தால் வழக்கமான முறையிலேயே நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்துப் பெருமளவு முன்னேறி இருக்கலாம்.

சரண்சிங், மொரார்ஜி, ஜகஜீவன்ராம் ஆகிய மூவரும் ஏற்கக் கூடிய ஒரு சமரசத் தீர்வைக் கண்டு மத்திய ஆட்சியைப் பலப்படுத்தினாலன்றி, பிரச்னைகளை எதிர்த்து வெற்றி கொள்ள ஆட்சித் தலைவர்கள் ஒன்றுபட்டு முன்வந்தாலன்றி தேசப் பொருளாதாரமும் சமுதாயப் பிரச்னைகளும் அபாயகரமான கட்டத்தை விரைவில் அடையும்.

முக்கியமான தொழில்கள் எல்லாவற்றையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று ஃபெர்னாண்டஸ் சொல்வதும் மலிவு விலையில் முக்கியப் பண்டங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்ய அரசாங்கமே விநியோக முறைகளை மேற்கொள்ளும் என்று மோகன் தாரியா சொல்வதும் பாமர மக்களுக்குக் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ஆனால் இவையெல்லாம் ஜனதாவின் மெத்தனத்தை மறைக்கக் கூறப்படும் வார்த்தை ஜாலங்களாகவே முடியும். தப்பித்தவறி இவற்றைச் செயல்படுத்தப் பார்த்தாலோ ஏற்கெனவே உள்ள குழப்பங்களும் குளறுபடிகளும் அதிகரிக்கவே செய்யும்.

ஜனதா அரசு உருப்படியாக எதையாவது சாதிக்க வேணுமானால் முதலில் ஒற்றுமை வளர வேண்டும்; அடிப்படையான விஷயங்களில் ஒருமித்த கருத்து ஏற்பட வேண்டும்; மெத்தனம் மறைய வேண்டும்; பிரச்னைகளை எதிர்நோக்கி தீர்வு காண்போம் என்ற உறுதி பிறக்க வேண்டும்; செயலாற்றலும் வேண்டும்.

நடக்கவா போகிறது? நாளுக்கு நாள் மக்களுக்கு நம்பிக்கை குறைகிறது.



அட்டைப்பட விளக்கம்


படத்தில் குமாரி நித்யா கேமரா கோணம் பார்க்க, சகோதரி ரேகாவும் உடனிருப்பது ஒரு திரைப்பட ஸ்டுடியோவில் என்று நினைத்தால் நீங்கள் ஏமாந்து விட்டீர்கள் என்று அர்த்தம். வெளிப்புறப் படப்பிடிப்புக்குச் செல்லும் ஒரு பஸ்ஸில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

மதுராஸ் சவுண்ட் சர்வீஸ் பஸ் உரிமையாளர் திரு சாம் கூறுகிறார்: "இது காமிரா, மற்றும் ஒலிப்பதிவு சாதனங்கள் எடுத்துச்செல்லும் வண்டி. எங்கள் வண்டியில் உள்ள சிறப்பு அம்சம் அதிலுள்ள அறைகள்தாம். காமிராவுக்குள் பிலிம் சுருள் பொருத்தும் அறை, ஒலிப்பதிவு அறை, நடிகநடிகையரின் அலங்காரஅறை, மற்றும் டாய்லெட்அறையும் உண்டு.

வெளிப்புறப்படப்பிடிப்பின் போது களைத்துப் போனால் இதிலுள்ள ஓய்வு அறை நட்சத்திரங்களுக்கு உதவுகிறது."

பேட்டி: சித்தி

வண்ணப்படம்: உத்ரா



எதிர்காலச் செல்வங்கள்

குழந்தைகள் ஆண்டுப் போட்டி

குழந்தைகள் ஆண்டு இது. நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் அவர்களே.

குழந்தைகளின் ஆரோக்கியம், கல்வி, பொது அறிவு, மன வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபாடு காட்ட வேண்டியவர்கள் பெரியவர்களாகிய நாம்தான். ; அவர்களுடைய சாதுர்யப் பேச்சில் மகிழ்ந்து சாமர்த்தியமாக அவர்கள் செயல்படுவதைக் கண்டு ஆனந்திப்பவர்களும் நாம்தான்.

● உங்கள் வீட்டில் அல்லது உள்ளூரிலோ வெளியூரிலோ உறவினர், நண்பர்கள் வீட்டில் சுட்டிப்பயல் அல்லது சிறுமி இருக்கிறார்களா? அவர்கள் ஏதாவது செய்து அல்லது பேசி உங்களை பிரமிக்க வைத்தார்களா?

● உங்கள் குழந்தை நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வளர என்ன என்ன செய்கிறீர்கள்; எப்படி கவனித்துக் கொள்கிறீர்கள்? குழந்தைக்கு உடம்பு சரியில்லாத போது எவ்விதம் கண்ணும் கருத்துமாகக் கண்விழித்து அன்பினால் ஆபத்தை விலக்கினீர்கள்?

● படிக்காத பிள்ளையைப் படிக்க வைக்க என்ன யுக்தியைக் கையாண்டீர்கள்? அவனுக்குப் பிடிக்காத பாடத்தைப் பிடித்துப் படிக்குமாறு செய்ய எப்படி உதவினீர்கள்? பொது அறிவும் மன வளர்ச்சியும் பெறக் குழந்தையிடம் எவ்வாறு அக்கரை காட்டுகிறீர்கள்?

● மேலே எழுப்பப்பட்ட கேள்விகளுள் ஏதேனும் ஒன்றினை மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு ரசமான சம்பவத்தைக் குறிப்பிட்டு கல்கியில் அரைப்பக்கத்துக்கு மேற்படாத வகையில் சுருக்கமாக எழுதுங்கள். குழந்தையின் புகைப்படத்தை அனுப்பலாம். வரவேற்கிறோம். பிரசுரமாகும் கட்டுரைகளுக்கு பரிசு உண்டு. முடிவு தேதி: பிப்ரவரி 15. உறையின் மேல் ''எதிர்காலச் செல்வம்'' என்று குறிப்பிட வேண்டும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கட்டுரைகள் புகைப்படங்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

ஆசிரியர், கல்கி
சென்னை - 600032

சித்திர விளக்கம் :

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டினையொட்டி நமது தேசத்தில் உள்ள குழந்தைகளுக்காக ஓர் ஓவியப் போட்டியை ஸ்பென்ஸர் கம்பெனி நடத்தியது. மூவாயிரம் குழந்தைகளுக்கு மேல் இப் போட்டியில் பங்கேற்றனர். அவர்களுடைய ஓவியங்கள் சில இவ்வாண்டு ஸ்பென்ஸர் காலண்டரில் இடம் பெற்றுள்ளன. அப்படங்களில் ஒன்றினையே மேலே காண்கிறீர்கள்.



7iffi



ஏழாவது சர்வ தேசத் திரைப் பட விழா டில்லியில் கோலா கலமாக ஜனவரி 3ம் தேதி யன்று துவங்கியது.

- சுமார் 120 படங்கள் விழாவில் திரையிடப்பட்டன. தங்க மயில் பரிசுக் காக 24 நாட்டுப்படங்கள் போட்டியிட்டன.
- துவக்க விழாவிற்குப் பெரும்பாலான பத்திரிகை நிருபர்களுக்கு அழைப்பு தரப்பட வில்லை. விழாப் படங்களைப் பார்க்க விசேஷ 'போட்டோ பாஸ்' பெற்றவர்களுக்குக் கூட அழைப்பு இல்லை.

மேலே:
* செக்கோஸ்லோவாகிய படம் "பிங் கார்ட்டர் இன்பிராக்"
கீழே:
* ஸ்ரீலங்கா . . "ரோஸ தாராப்பர்ல"

சர்வதேசத்திரைப்படவிழா



✠ கான்வாய் என்ற அமெரிக்கப் படத்தில் ஒரு காட்சி

✠ ஸ்டெப்பி என்ற ருஷ்யப் படத்தில்





◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

● துவக்க விழாவிற்கு ராஜ்கபூர், ஜீனத் அமான், சபனு ஆஸ்மி, சஷிகபூர் முதலியோர் வந்திருந்தனர்.

● பத்திரிகை நிருபர்களுக்கு கன்னுட் பிளேஸில் உள்ள பிளாசா தியேட்டரில் தினமும் 6 படம் போட்டுக் காட்டினுர்கள். அதுமட்டுமன்றி வேறு இரு அரங்குகளில் நடைபெறும் காட்சிகளுக்கும் போக அனுமதித்து இருந்தார்கள். நிருபர்கள் திணறிப் போய் விட்டார்கள்.

● ஜீனத் அமானே, 'ஜீனத் ரஹ்மான் கான்' என்றுதான் விழாக் குறிப்புகளில் எழுதியிருந்தார்கள். பிளாஸா தியேட்டரில் அவருடன் கைகோத்துக் கொண்டு வந்திருந்தவர் சஞ்சய் கான். (திருமணம் எல்லாம் வதந்தி என்ருர்களே!)

● செக்ஸ், வன்முறை அளவுக்கு மிஞ்சிய படங்கள் விழாவில் இடம் பெருது என்று அறிவித்ததன் காரணமாகவோ என்னவோ தியேட்டர்களில் டிக்கட்டுகளுக்கு அடிதடி இல்லை.

● இந்தத் தடவை விழாவிற்குத் தமிழ்ப் பத்திரிகை நிருபர்கள் பலர் வந்திருந்தனர். திரைப் படத்துறையில் உள்ள பலரும் வந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனல் படம் ஓடிக் கொண்டிருக்கும் போது அவர்கள் சளசள வென்று கமெண்ட் அடித்துக் கொண்டிருந்தது மகிழ்ச்சிக்கு உரிய விஷயமில்லை!

● தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி, கே. பாலசந்தர், டைரக்டர் திருமலை, ஆனந்த் தியேட்டர் ஜி. உமாபதி, சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தி, க. ராஜாராம், கலாகேந்திரா கோவிந்தராஜன், அனந்து ஆகியோர் படங்களை ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

● விழாவிற்கு வந்த படங்களில் சில தரக் குறைவாக இருந்ததால், அவற்றை நீக்கி விட்டது ஸ்கிரீனிங் கமிட்டி. விழாவின் ஜூரிகளில் ஒருவரான மிஸ் மார்தா மஸாரிஸ் டைரக்ட் செய்த ஒரு படத்தைக்கூட ஒதுக்கி விட்டார்கள். காரணம், அளவுக்கு மீறிய செக்ஸ்! ஸ்கிரீனிங் கமிட்டியின் துணிவு வாழ்க. (இக்கமிட்டியில் ஜெயகாந்தனும் ஒருவர் என்ருர்கள்).

● சில தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய திரைப் படங்களையும் 'இந்தியன் பனேரமா' என்ற தலைப்பில் ஓர் அரங்கில் திரையிட்டார்கள். எல்லாப் படங்களுக்கும் ஆங்கில சப்—டைட்டில்கள் இருந்தன. அக்கிரகாரத்தில் கழுதை, ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள், முள்ளும் மலரும் ஆகிய மூன்று தமிழ்ப்படங்கள் காட்டப்பட்டன. ஆங்கில சப்—டைட்டில்களுடன் தமிழ்ப் படத்தைப் பார்ப்பது ஒரு சுவையான அனுபவமாக இருந்தது. சில தவருன ஆங்கிலப் பிரயோகங்கள் கண்களை உறுத்தின. (Very worried, very wrong போன்றவை).

● வயலட் நாஸியர் என்ற பிரெஞ்சுப் படம் ஒரு உண்மைச் சம்பவத்தை வைத்துப் பிரபல டைரக்டர் கிளாட் சாப்ரால் அவர்களால் எடுக்கப்பட்டது. தன் பெற்றேர்களைக் கொன்ற ஓர் இளம் பெண் வயலட், பிரான்சில் பல வருடங்களுக்கு முன் பரபரப்பை ஏற்படுத்தியவள். ஒரு நிமிஷம்கூட நம் கவனம் விலகாதபடி, மிகவும் அபாரமாக டைரக்ட் செய்திருந்தார்.

● சைனுகூட இரண்டு படங்களை அனுப்பியிருக்கிறது. ஹங்கேரி நாலைந்து படங்களை அனுப்பியிருக்கிறது. (ஜூரியில் ஒருவர் ஹங்கேரிய நாட்டுப் பெண் டைரக்டர்) அங்கு கதாநாயகன், கதாநாயகிப் பஞ்சமோ என்னவோ. ஒரு சிலரே எல்லாப் படத்திலும் இருந்தனர். 'அடாப்ஷன்' என்ற படம் மனதைத் தொட்டது. குழந்தையில்லாத, விவாகரத்து செய்தபெண்மணி தன் அன்பைச் சொரிய ஒரு வளர்ப்புக் குழந்தையைத் தேடுகிருர்.

● காமெடி படங்களுக்கும் பஞ்சமில்லை. அமெரிக்கப் படம் 'வெட்டிங்' சாதாரண நகைச்சுவைப்படம். ஏகப்பட்ட கதாபாத்திரங்கள் இருந்ததாலும் கதை எதுவும் இல்லாததாலும் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. பல விமரிசகர்கள் ஜோக்குகளைத் தேடிப் பிடித்துச் சிரித்தார்கள். ''இந்தப் படத்தை குறைந்த பட்சம் மூன்று தடவை பார்த்தால் தான் முழுக்க ரசிக்க முடியும்'' என்ருர் ஒரு நண்பர். வேறு வேலை இல்லை.

● ஆரம்பத்திலிருந்து முடியும் வரை அப்படியே நம்மை அயர வைத்து நம் கவனத்தைக் கவர்ந்த ஒருபடம், கிரீஸ் நாட்டின், 'எ கேம் ஆஃப் பேஷன்.' கிரீக் நாட்டு 'நல்லதங்காள்' கதையைத் திரைப்படம் எடுக்கிருர்கள். கதாநாயகியோ குழந்தையே இல்லாதவள். தன் குழந்தைகளைக் கொல்வது என்பதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதே சமயம், சில ஆண்டுகளுக்கு முன்பு தன் மூன்று குழந்தைகளைக் கொன்ற ஒரு பெண்மணி அங்கு சிறையில் இருப்பது அறிந்து அவளைப் பார்க்கச் செல்கிருள். சினிமா 'நல்லதங்காள்', நிஜ வாழ்க்கை நல்லதங்காளைப் பார்த்ததாகப் பத்திரிகைகள் படமும் செய்தியும் வெளியிடுகின்றன. இந்த இரு பெண்களின் சந்திப்பு, தன் குழந்தைகளைக் கொன்ற விவரங்களை அவள் கூறுவது, பி.பி.சி.க்காக நடிகை பேட்டி தருவது ஆகியவை மிகவும் அபாரமாக அமைத்திருக்கிருர்கள். மறக்க முடியாத அனுபவம், மெலினு மெர்கூரி, எல்லன் பர்ஸ்டின் ஆகிய இருவருடைய நடிப்பும். சபாஷ், கிரீஸ்!

(மற்றவை அடுத்த இதழில்)

கமலா ரங்காநதன்



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து ஓர் ஒற்றுமை மகாநாடு நடந்தது. அதில் பங்கேற்ற ஒருவரான ஃபாஸ் வெஸ்ட் காட், கிறிஸ்துவ மதகுருமார்களின் இந்திய உயர் தலைவர். அவர், ''ஸி. ஆரும் மோதிலாலும் தாம் எல்லாக் குறுகிய நோக்குகளுக்கும் மத மாச்சரியங்களுக்கும் அப்பாற்பட்டவர்களாகத் திகழ்கிறார்கள்'' என வர்ணித்தார்.1

இருப்பினும் முகமது அலி பற்றியும் அவரது தோழர்கள் பற்றியும் ஒரு கேள்விக்குறி ஸி. ஆர். மனத்தில் எழுந்துவிட்டது. அவர்களுக்கு இந்தியர்களுடைய நலனைவிட முஸ்லீம்களுடைய நலனே முக்கியமாகி விட்டதாக ஸி. ஆருக்குத் தோன்றியது. 1919லும் 1920லும் அகழ்ந்து எடுக்கப்பட்ட இந்து முஸ்லீம் நம்பிக்கை என்ற விலைமதிக்க முடியாத ரத்தினமானது விரிசல் கண்டுவிட்டது.

சுயராஜ்யக் கட்சிக்காரர்களைப் பொறுத்த மட்டில் காந்தி பின் வாங்கியதில் ஸி. ஆர். இன்னமும் மனஅமைதி பெறவில்லை. அவர் மனத்தைச் சாந்தப்படுத்த மகாத்மா மேற்கொண்ட முயற்சிகளும் பலிக்கவில்லை. ''காங்கிரஸின் செல்வாக்கெல்லாம் தங்களுடையதாகவே இருக்க வேண்டும் என சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் எண்ணுகிறார்கள், வேறு யாருடனும் அதனைப் பகிர்ந்து கொள்ள அவர்கள் விரும்பவில்லை'' என்பது ஸி. ஆரின் கணிப்பு. ''அவர்களுக்கு காந்தியும் தேவைதான். ஏனெனில் காந்தி இல்லாமல் காங்கிரஸுக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது?'' என்று ஸி. ஆர். எழுதினார். ''எல்லா பகிஷ்காரங்களுக்கும் தடை விதிப்பதென்றால், பாவம் ஸ்ரீமதி பெஸண்ட் மட்டும் ஏன் வெளியே நிறுத்தி வைக்கப்பட வேண்டும்?''2

ஸ்ரீமதி பெஸண்ட், காந்தியின் மூன்று அம்சத் திட்டத்தை வரவேற்றார். 82 வயதில் நூல் நூற்கக் கற்றுக் கொள்ளவும் தாம் ஆசைப்படுவதாகத் தெரிவித்தார். அவருக்குப் பயிற்சி அளிக்குமாறு தேவதாஸை ஸி. ஆர். வற்புறுத்தினார்.

இது ஒருபுறமிருக்க, மகாத்மா சுயராஜ்யக் கட்சியினருக்கு அனுசரணையாக ரொம்ப தூரம் விட்டுக் கொடுக்கத் தயாரானார். சுபாஷ் போஸ் உள்பட அக்கட்சியினரின் வங்கத் தலைவர்கள் சிலர் கைதான போது, காந்தி வன்மையாக ஆட்சேபணை எழுப்பினார். சுயராஜ்யக் கட்சியினரை அடக்க அரசு முயலுகிறது என்பதைச் சந்தேகமின்றி உணர்ந்த அவர், அக்கட்சியினர் என்ன விரும்பினரோ அதைத் தரத் தீர்மானித்தார்.

ஒத்துழையாமையைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்ததுடன் சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபைகளில் காங்கிரஸ் சார்பாகவே இயங்குகின்றனர் என ஒப்புக் கொள்ளவும் செய்தார். இந்தச் சரணாகதியை உள்ளடக்கித் தாஸுடனும் மோதிலாலுடனும் ஓர் ஒப்பந்தத்தை அவர் செய்து கொண்டு கையெழுத்திட்டார்.

இதற்குப் பிரதிபலனாக வேறு ஒன்றை அவர் பெறத்தான் செய்தார். சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் நூல் சிட்டம் தந்து காங்கிரஸ் அங்கத்தினர் ஆவதை ஒப்புக் கொண்டனர். கமிட்டியில் உள்ளோருக்கு மட்டுமின்றிக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இது செல்லுபடியாயிற்று. ஆனால் இந்த நிபந்தனையில் ஒரு பொத்தலும் காணப்பட்டது. நூல் நூற்க விரும்பாதவர்கள், வேறு யாரேனும் நூற்ற நூலைத் தந்து அங்கத்தினராகலாம்!

காந்தி — தாஸ் — மோதிலால் நேரு ஒப்பந்தம் ஸி. ஆர். மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. நூல் சிட்டம் தந்து காங்கிரஸ் அங்கத்தினராக வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடவே தரப்பட்ட சலுகை, அந்த நிபந்தனையையே பரிகசிப்பதாக அமைந்திருப்தாக ஸி. ஆருக்குத் தோன்றியது. மேலும், ''லிபரல்களுக்கும் ஸ்ரீமதி பெஸண்டுக்கும் முன்னறிவிப்புத் தராமல் சுயராஜ்யக் கட்சியினருடன் உடன்பாடு செய்து கொள்வது எழுதப்படாத ஓர் உடன்படிக்கையை மீறியதாகும்'' என்று அவர் குற்றம் சாட்டினார்.3

இரத்தம் சிந்திய ஓர் இதயம் கடுமையான கண்டனத்தை அனுப்பியுள்ளது என்பதைப் புரிந்து கொண்ட மகாத்மா, அந்த ஒப்பந்தத்தை அஹிம்சா தத்துவத்தில் ஒரு துணிச்சலான பரிசோதனை எனக் கருதுமாறு கேட்டுக் கொண்டார். ''உற்சாகமாக இருங்கள்: வருத்தப் படுவதாலேயே நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்க வேண்டாம்'' என்றார்.4

நீண்டகாலம் மகாத்மாவிடம் கோபித்துக் கொண்டிருப்பது ஸி. ஆருக்குச் சாத்தியமாக இருக்கவில்லை. டிசம்பரில் காந்தி பெல்காம்

---

1. மேதகோன் - ஜி. ராமச்சந்திரன் எழுதிய கட்டுரையில் உள்ளது- ராஜாஜி 93, பக்கம் 147.
2. ஸி. ஆர். தேவதாஸ் காந்திக்கு எழுதியது. 6-10-24 தேவதாஸ் காந்தி தாள்கள்.
3. ஸி. ஆர். அனுப்பிய தந்திகளிலிருந்து-நவம்பர் 1924 SN 15941' & SN 11725 ராஜ்காட் சங்கிரஹாலயம்
4. காந்தி ஸி. ஆருக்கு எழுதியது 14-11-24 மகாதேவ தேசாய் டயரி - பாகம் 5, பக்கம் 22.

காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். அவர் தலைமை ஏற்றது அதுவே முதல் தடவை; கடைசித் தடவையும் அதுதான். அவரெதிரே வி. ஆரின் தயக்கமும் வெறுப்பும் மாயமாய் மறைந்தன.

''குருதேவரிடம் இருக்கும், உண்மை பற்றிய போதனை அறிவு, என்னிடமுள்ளதை விட மிகவும் அதிகம். எனவே குருவின் தீர்ப்பினை நம்பி இருந்துவிடுவது எனக்கு இலகுவாக உள்ளது'' என வி. ஆர். விளக்கினார்.5 காந்தி தமக்கே உரிய இயல்புப்படி, நூல் திட்டம் தந்து அங்கத்தினராகும் தீர்மானத்தை – அதனுடன் இணைந்த சலுகையுடன் – வி. ஆரே பிரேரேபிக்குமாறு செய்தார்!

சுயராஜ்யக் கட்சிக்காரர்களிடம் சரணாகதி அடைந்ததானது மகாத்மாவுக்கு மற்றொரு விதத்தில் உதவியது. மாறுதல் வேண்டாதாரின் ஈடுபாடு எவ்வளவு ஆழமானது என்பதைப் பரிசோதிப்பது சாத்தியமாயிற்று. அவர்கள் நிர்மாணப் பணிகளில் உண்மையிலேயே ஆர்வமுடையவர்களாய் இருந்தால், காங்கிரஸில் தாங்கள் வகிக்கும் பதவிகளை சுயராஜ்யக் கட்சியினரிடம் மகிழ்ச்சியுடன் விட்டுக் கொடுத்து விடுவார்கள்.

தங்களைத் தாங்களே பின்னணிக்குத் தள்ளிக் கொண்டு அமைதியாகவும் இடைவிடாமலும் அலுத்துக் கொள்ளாமலும் பலன் எதிர்பாராமலும் சேவை புரிவது அவர்கள் கடமை.6 இந்தச் சிந்தனையின் விளைவாகக் காந்தி, காரியக் கமிட்டியிலிருந்து பட்டேலையும் வி. ஆரையும் நீக்கி விட்டார்.

காங்கிரஸ் பதவிகளிலிருந்து விலகி விட்ட காந்திய வாதிகள், நிர்மாணப்பணி யாற்றுவதென்றால் எங்கே அதைச் செய்வது என்கிற இயல்பான கேள்வி எழுந்தது. வி. ஆரைப் பொறுத்தமட்டில் அவரிடம் பதில் தயாராக இருந்தது.

சேலம் வளர்நகர் பகுதியில் தமது இல்லத்திலிருந்து பிய்த்துக் கொண்டுபோய் யாரும் கேட்டறியாத ஒரு கிராமத்தில் வேரூன்றிக் கொள்வார். ரத்ன சபாபதி கவுண்டர் புதுப்பாளையத்தில் கொடுத்த நிலப்பகுதிக்கு அவர் செல்வார். அங்கே காந்தி பெயரால் ஓர் ஆசிரமம் அமைப்பார். ஒத்துழைக்க முன் வரும் ஊழியர்களுடன் சேர்ந்து நிர்மாணப் பணியாற்ற முயன்று வாழ்வார். கதர் தயாரிப்பில் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பார். தீண்டாமை ஒழிப்புக்கும் மதுவிலக்குக்கும் பாடுபடுவார்.

பெல்காமில் மகாத்மாவிடம் வி. ஆர்., இந்த யோசனையை வெளியிட்டு விவாதித்தார். பெல்காம் மகாநாடு முடிந்த பிறகு சபர்மதியில் மறுபடியும் பேசினார். காந்தி இந்த யோசனைக்கு ஆசி அளித்ததாகக் கருத இடமிருக்கிறது. கிராமப்புற சேவைக்கென்று ''காந்தி சேவா சங்கம்'' என்பதான அமைப்பின்கீழ் நிதி ஒதுக்கியிருந்த பஜாஜ், வி. ஆரின் திட்டத்துக்குப் பணம் கிடைக்கும் என்று குறிப்பிட்டார்.

ஜனவரி 10ம் தேதி பெங்களூரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் வி. ஆர். தமது சிறந்த பிரசாரப் பாணியில் பேசி அவையோரை இடைவிடாத சிரிப்பில் ஆழ்த்தினார். இது, இந்தியா முழுவதும் சுற்றி, பழையபடி பொதுக் கூட்டங்களில் பேச வேண்டும் என்ற ஆசையை வி. ஆரிடம் ஏற்படுத்தியது. ஆனால் புதுப்பாளையத்தில் தங்கி இருந்து பணியாற்றுவதாகத் தாம் காந்திக்கு வாக்களித்ததை அவர் மறக்கவில்லை.7

1925 பிப்ரவரி ஆறும் தேதி ஆசிரமம் திறக்கப்பட்டது. வி. ஆர். கரடுமுரடான, முன்பின் தெரியாத, எங்கு அழைத்துச் செல்லும் என்று புரியாத ஒரு பாதையில் அடியெடுத்து வைத்தார்.

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

---

5. யங் இந்தியா 15-1-25.
6. யங் இந்தியா 27-11-24.
7. வி. ஆர். தேவதாஸ் காந்திக்கு எழுதியது 15-1-25 தேவதாஸ் காந்தி தாள்கள்.



ஸீஸனல் அறுவை!

ஒருவர்: கிரிக்கெட் ஆடிக் கொண்டிருக்கும்போது அடிக்கடி தலைவாரிக் கொண்டிருக்கிறாரே, இவர் யார்?
நண்பர்: கோம்ஸ்!

×

ஒருவர்: என்ன, எல்லா கேட்டிலும் 'IN' என்று போட்டிருக்காங்க!
நண்பர்: ஆட வருகிறவர்களுக்கு 'OUT' என்ற நினைப்பே இருக்கக்கூடாது. அதனால்தான் இப்படிப் போட்டிருக்கிறார்கள்!

×

ஒருவர்: அம்பயருக்கு ஏன் கோபம்?
மற்றவர்: 'லோக்கல்' எல்லாம் கிரிக்கெட் விளையாடும் போது தன்னால் விளையாட முடியவில்லையே என்ற கோபம்.

— எஸ். சந்திரசேகர்

ஒன்றே அனைத்தும்



ஸத்குரு காணப் படாததைக் காட்டிக் கொடுத்தார். தன்னுள் தன்னையே காட்டிக் கொடுத்தார்.

விதையில் மரமும், மரத்துள் நிழலும் இருப்பதே போலப் பரமாத்மாவில் (ஜீவ) ஆத்மாவும், இந்த ஆத்மாவில் மாயையும் உள்ளன.

சூரியன் முதலான அண்டங்களைச் சூனிய ஆகாசத்தில் காண்கிறோமே, அப்படியேதான் அழிவில்லாத அக்ஷரப் பொருளில் அழியும் க்ஷரமான உலகம் யாவும் காண்கின்றன.

சூரியனில் உண்டாகும் கிரணம், அக் கிரணத்தில் சூரிய ஒளி என்பதேபோல் பரமாத்மாவில் உண்டான ஆத்மாவிலும் அதன் ஒளியே காண்கிறது.

சிவன் (ஜீவன்) மத்தியில் சுவாசம்; சுவாச மத்தியில் சப்தம்; சப்தத்தில் அர்த்தம்.

பிரம்மத்திலிருந்து தனித்தனி ஜீவன், ஒவ்வொரு ஜீவனுக்கும் தனியானதொரு மனம் என்று காணப்பட்டாலும், வேறு வேறு இல்லை.

தானே விதை, மரம், முளை; தானே பூ, பழம், நிழல்.

தானே சூரியன், கிரணம், ஒளி.

தானே ஜீவன், பிரம்மம், மாயை.

வட்டமாகக் கவிந்து காணும் ஆகாச சூனியமும் தானே.

சுவாசம், சப்தம், அர்த்தம் எல்லாமும் தானேதான்.

மனம், உயிர், பிரம்மம் யாவும் தன்னுள் அடக்கம்தான்.

ஆத்மாவில் பரமாத்மாவை (தன்னில் பரம்பொருளை) தரிசனம் செய்.

கபீர்தாஸர் ஸ்வாமியைத்தான் பார்க்கிறார்.

அவர் ஒளியைப் பார்க்க, மற்றவர்களோ நிழலைப் பார்க்கிறார்கள். (தன்னை அறியாமல் பல ஸாதனைகளாலும் வெளியிலே பரம் பொருளைத் தேடுவதால்) இவர்கள் இறைவனைத் தேடு தேடு என்று தேடுவதைப் பார்த்துக் கபீருக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது! தண்ணீருக்குள்ளேயே இருக்கும் மீன் தாகவிடாய் என்று தவிக்கிறது என்பதைக் கேட்டுக் கபீருக்கு ஏக சிரிப்பாக வருகிறது!

தன் வீட்டிலேயே உள்ள பொருளைத் தெரிந்து கொள்ளாமல் காசியிலும் ஆப்பாடியிலும் தேடி என்ன?

கபீர் சொல்வார்: ஸாதுத் தம்பி! கேள்! அக்ஷரமான பரமன் எளிதே கிட்டுகிறவன்.

இருமுறை சொல்கிறேன்: ஞானம் பெறு, ஞானம் பெறு. மறுபடி மறுபடி சொல்கிறேன்: ஞானமின்றி உன்னுடைய துயரம் ஓயாது. எல்லா ஒளியும் தோற்றமும் உன் உள்ளேதான். தனிகன், தரித்திரன் இரண்டும் நீயே. உன் பணத்தை எடுக்க வரும் திருடனும் நீயே. உன் பகைவனும் நீயேதான். உபதேசிப்பவன், உபதேசம் பெறுபவன் இரண்டும் நீயே.

ஹரியும் நீ, ஹிரண்யாக்ஷனும் நீ. ராகவன் நீ; ராவணன் நீயே. உன்னையேதான் நீ அடித்து வீழ்த்திக் கொண்டாய்.

தானம் செய்த பலி, தானம் பெற்ற வாமனன் இரண்டும் நீதான்.

கண்ணன் நீ, கம்ஸனும் நீ. உன்னையே நீ கொன்று கொண்டாய்.

பக்தன் நீ; பகவனும் நீயே.

ஸத்தியம் இதுவே. வேறு எந்தப் பேச்சும் கேளாதே!

(தொகுப்பு: ரா. கணபதி)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

"கண்டக்டர், இந்த பஸ் சேலம் போகுங்களா?..."

"ஆமாம் போகும்."

"பஸ்ஸில் 'டேப்-ரிகார்டர்' இருக்குதுங்களா?...?"

"ஆமாம். இருக்கிறது. பாட்டுக் கேட்டுக் கொண்டே போகலாம்.; ஏறி அமருங்கள்."

"நல்லவேளை. நான் தூங்கிக் கொண்டே போக வேண்டும். வேறு பஸ்ஸில் போய்க் கொள்கிறேன்."

எம். ஏ. அப்துல் காதர்.



பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

1. இந்தப் பின்னணியில் ...

இந்த மண்ணின் மனிதர்களுக்கு 'எலெக்டிரிஸிடியின்' தேவையும் அவசியமும் தெரியாதிருந்த காலம் அது. அந்த ஆதாரசக்தியின் அறிமுகமே இல்லாதிருந்ததால் அதனைத் தொடர்ந்துவரும் சேதாரங்களும் இல்லாதிருந்த காலம் அது. உரலும் உலக்கையும் மாடுகளும் மனித சக்தியும் கொண்டு அன்றாட வாழ்க்கை அழகிய தன்னம்பிக்கையோடு வாழ்வது அறியாமையென்றோ, போற்றத் தகுந்த எளிமை என்றோ எண்ணாத நாகரீகம் இறுமாந்திருந்த காலம் அது. இயற்கை உற்பாதங்களைக் கண்டு அஞ்சுவது போல் அழகாக ஒரு பாவனை காட்டிக் கொண்ட இந்த நாகரீகம் எவ்வளவுதான் ஆற்றில் வெள்ளம் புரண்டாலும் அந்த ஆற்றின் கரையைவிட்டு அசையாமல் அமர்ந்திருந்தது. ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கடவுளைக் குலதெய்வமாக நிறுவி ஒவ்வொரு கோயிலிலும் ஒரு நம்பிக்கையைக் குடிவைத்த நாகரீகம் அது.

ஆற்றில் வெள்ளம் வந்து கரைபுரண்டு போகிறதாம். எல்லாரும் வேடிக்கை பார்க்கப் போயிருக்கிறார்கள். வீடு வெறிச்சோடிக் கிடக்கிறது. இந்த நேரத்தில் இங்கொரு வெள்ளம் வடியப்போகிறது. இவ்வளவு பிள்ளைகள் பெற்று இத்தனைபேரோடு வாழ்ந்து இந்த நேரத்தில் இவள் கதி இப்படியா? அம்மா, மாமி, அத்தை, அண்ணி, பாட்டி என்று பலராலும் 'அடியே' என்று அவராலும் அழைக்கப்படுகிற இவளுக்கு அம்பிகை அம்மாள் என்று பெயர்.

அவளது பதினாறு வயதில் — மருதேசன் பிள்ளை தமது பத்தொன்பதாவது வயதில் அம்பிகைக்கு மாலையிட்டார். அவர் உத்தமன் என்று ஊரில் பேரெடுத்தவர். நடப்பதற்காக மட்டுமல்லாமல் அவர் வருவதைப் பிறருக்கு அறிவிப்பதற்காகவே அணிந்துள்ள அந்தப் பாதக் குறடுகளின் ஓசை அந்த வீட்டு மக்களின் செவிக்குப் பழக்கமானது. அதைக்கேட்ட மாத்திரத்தில் கூடத்தில் குழுமியிருக்கிற கும்பல் ஒரு நொடியில் சிதறும். அம்பிகை மட்டும் தயாராகக் கதவைத் திறந்து நிற்பாள்... அவர் கதவைத் தட்டமாட்டார். அவருக்கு யார் வேண்டுமானாலும் சாப்பாடு பரிமாறலாம், பூஜைக்குச் சந்தனம் மட்டும் அவள்தான் அரைத்துத்தர வேண்டும். வருகிற அமாவாசைக்குப் பூஜைக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கத் தான் இருக்கப் போவது இல்லை என்பது இவளுக்குத் தெரிந்திருக்கிறது... இவள் படுக்கையில் விழுந்த இந்தப் பதினைந்து நாட்களிலேயே அவரது முறுக்கு எவ்வளவோ தளர்ந்து போயிருக்கிறது.

அம்மா என்றாலும் எப்படிப்பட்ட அம்மா இந்த அம்பிகை. நாற்பத்தைந்து வயதுக்குள் நவக்கிரகங்களைப் பெற்றவள். ஒன்றுக்கு ஒன்று சோடை போகாத இருபது. சீமந்த புத்திரன் பெரியசாமி... பத்தொன்பது வயதுக்குள்ளே பேரைக் கெடுத்துக் கொண்டான். ஒரு தாசியுடன் உறவு வைத்துக் கொண்டான்... அதை அறுப்பதற்காக அல்லவோ அவனுக்குக் கலியாணம் செய்து வைத்தார்கள்.

குத்துவிளக்கு மாதிரி மருமகள் மங்களம் நிற்கிறாள்... இவளை இப்படி நிறுத்தி வைத்துவிட்டு அவன் அந்தத் தாசி வீட்டில் விழுந்து கிடக்கிறான்... பாவம்! அவளைப் போய்த் தாசி என்று சொன்னால் போதுமா? அவளையும் இந்த அம்பிகை ஒரு சமயம் கோயிலில் பார்த்துப் பேசியிருக்கிறாள்....அவனுக்கு அம்பிகை அங்கேதான் இருக்கிறாள். அதற்காக அவனைத் தள்ளி வைத்துவிடுவதா? இந்த வீட்டின் சீமந்த புத்திரனை வாசற்படி மிதிக்கக் கூடாது என்று மருதேசன் இட்டிருக்கிற உத்தரவை மாற்றித் தனக்குக் கொள்ளி வைப்பதற்காகவேனும் இப்போது அவனைக் கூப்பிட்டனுப்பவேண்டும் என்று அம்மா விரும்புகிறாள்.

இந்த வீட்டுப் பெண்களைப் பொறுத்த வரை, புருஷன் வீட்டுக்குப் போகிற — வருகிற அதாவது போன அல்லது ஒரேயடியாய்த் திரும்பி வந்த வழியைத் தவிர மற்றப் புழக்கங்களெல்லாம் கொல்லைப்புற வாசல் வழியே தான். ஊரிலும் பெயர் அப்படித்தான்: மருதேசன்பிள்ளை வீட்டுப் பெண்கள் வீட்டு வாசற்படி தாண்ட மாட்டார்கள் என்று! ''வாசற்படி தாண்டினால்தானா? வீட்டுக்குள் இருந்துகொண்டே லோகத்தைக் கவிழ்த்து விட மாட்டாளுவளா!'' என்று தன் பெண்களைப் பற்றிய நினைப்பில் அம்பிகை கண்களை மூடியவாறே புன்னகை செய்கிறாள்.

ஒவ்வொரு பெண்ணின் கதையும் ஒவ்வொரு விதமானது: மூத்தவள் காந்திமதி இளம் விதவை.



அடுத்தவள் பொன்னம்மாள்... அம்பிகையிடம் கோபித்துக் கொண்டு தாயின் முகத்திலேயே விழிப்பதில்லை என்று சபதம் செய்துவிட்டு புருஷன் வீட்டுக்குப் போனவள்.

மூன்றாவது பெண் சிவகாமி புருஷன் வீட்டு உறவை அறுத்துக் கொண்டு நிரந்தரமாக இங்கு வந்துவிட்டவள். இந்த வீட்டின் கூடம் நிறையப் போடப்பட்டுள்ள கோலங்களும், சுவரில் தொங்கும் பின்னல் சித்திரங்களும், வாசற்படியிலும் கூடத்திலும் தொங்குகிற அலங்காரத் தோரணங்களும் அவளது கைத்திறனுக்கு அடையாளம். அவளுக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

நாலாவது பெண் இந்திராணி. பக்கத்துத் தெருவில் வாழ்க்கைப்பட்டவள். புருஷன் ஒரு நிரந்தர நோயாளி. அதுபற்றி இவளுக்குக் கவலையுமில்லை. அவனால் தனக்கும் தன்னால் அவனுக்கும் தொந்தரவு இல்லாமல் தாய் வீடே வாசமாகக் கொண்டுவிட்டாள்.

ஐந்தாவது பெண்ணுக்குப் பெயரே மகாராணி. அவளது கணவன் அவளுக்கு மட்டுமில்லாமல் இந்த வீட்டுக்கே சேவகன் மாதிரி.

ஆறாவது பெண் ராசாத்தி. பாவம், இனிமேல்தான் இவளுக்கொரு வழி பிறக்க வேண்டும்.

இந்த மங்களம் இந்த ஆறு ராட்சஸிகள் மத்தியில் என்னென்ன பாடுபடப் போகிறாளோ? அம்பிகை ஒருத்தி இல்லை என்றால் இவளது ஆறு பெண்களும் அவளை உயிரோடு வைத்தே குதறிக் கூறுபோட்டு விடுவார்கள்... கர்வம் மிகுந்த இந்த வீட்டுப் பெண்களுக்கென்ன... எல்லாமே கேலிதான், கிண்டல்தான்; குதர்க்கம்தான், கோணல்தான்! தான் பெற்ற இந்தப் பெண்களின் வாய்க்குப் பயந்தே அம்பிகை வாயை மூடிக்கொண்டு மௌனியாகிவிட்டாள். இந்தப் பெண்களுக்கெல்லாம் தன்மீது பொறாமை என்பதற்காகத் தாயான அம்பிகை அவர்களைத் தள்ளி வைத்து விடவா முடியும்? எங்கே தள்ளி வைப்பது? அவர்களுக்குத்தான் போக்கிடம் இல்லையே! அந்தப் புத்தியும் அவர்களுக்கு இல்லை. எல்லாம் இவள் இருக்கிற வரைதான் செல்லும்! அதுவும் எவ்வளவு நாட்களுக்கு? நாட்களா? எவ்வளவு நேரத்துக்கு?

'என்னடா வீட்டிலே இருக்கிற ஜனம் பூரா வெள்ளம் பார்க்க வந்துட்டுதே... அம்பிகை தனியாக இருப்பாளே' என்ற பதைப்பில் மருடேசன் பிள்ளை புழக்கடை வழியாக வீட்டுக்குள் வருகிறார். 'நீங்களும் புதுவெள்ளம் பார்க்கத்தான் போயிட்டீங்களா?' நீங்க எப்பவுமே குழந்தைதான். எனக்கு மொதல் குழந்தையே நீங்கதானே? இவளுங்க கிட்டே என்னென்ன படப் போறீங்களோ? இவளுங்களுக்கு உங்களைப் புரியாதே... என் குழந்தைகளை இந்த லங்கணிகள் கிட்டே ஒப்படைச்சுட்டுப் போகிற நேரமாச்சே' –

அம்பிகையின் மனம்தான் பேசுகிறது...

அம்பிகையின் காதோரம் கண்ணீர் வழிவதை அவர் பார்க்கிறார்... கட்டிலின் ஓர் ஓரமாய் உட்கார்ந்து அவள் தலையை மடியில் வாங்கிக் கொள்கிறார்.

''என் கொழுந்தே'' என்று பெரியசாமியைப் பற்றி வெள்ளமாய்ப் பெருகிவந்த நினைப்பில் அவள் வாய் குமுறுகிறது. ''இந்த நேரத்திலாவது நம்ப குழந்தை பெரியசாமி'' என்று சொல்வதற்குள் துயரமும் பயமும் அம்பிகையின் தொண்டையில் அடைக்கிறது. அவருக்குத்தான் என்னமாய் ஒரு கோபம் வருகிறது! அவள் தலையைத் தள்ளிவிட்டது போல் எழுந்து பிடிவாதமான குரலில் சொல்லுகிறார்: ''நான் செத்தாலும்' அவன் இந்த வீட்டு வாசற்படி மிதிக்கக் கூடாது.''

அம்பிகை கண்களை மூடினாள்.

வெள்ளம் பார்க்கப் போனவர்களெல்லாம் வீடு திரும்பி விட்டார்கள். கையில் விளக்குடன் மங்களம் அம்பிகையின் அறைக்குள் நுழையும்போது அம்பிகை கட்டிலோடு ஐக்கியமாகி இருந்தாள். வீடு நிறைய விழுந்து மரித்துப் புரளும் உருவங்களும் நிழல்களும். ஓலமும் ஒப்பாரியும்... மருடேசன்பிள்ளை கண்கள் நீர்க்குளமாகி வழிய 'அம்மா' என்று வாய்குமுறத் தனிமையில் தம் விதியை நினைக்கிறார். தனிமையில் மருகி அழுகிறார்...

மருடேசன் பிள்ளைக்கு இப்போது உற்ற துணை விளக்குச்சாமிதான். இந்தத் தெருவின் இரண்டு கோடியிலும் உள்ள இரண்டு விளக்குக் கம்பங்களின் உச்சியில் உள்ள கண்ணாடிப் பெட்டிகளைத் திறந்து அதனுள் மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றுவது இந்த விளக்குச் சாமிக்கு ஊர் கூடித் தந்த தொழில். ஊரென்ன கூட்டுவது? மருடேசன் பிள்ளை தான் இவருக்கு இந்த வேலையை இட்டார்.

சில வருஷங்களுக்கு முன்னால் அம்பிகை அம்மாள் எட்டாவது பிரசவத்துக்காக உதர வேதனையில் துடித்துக் கொண்டிருந்தபோது இந்த மனிதர் ஒரு பிச்சைக்காரனைப் போன்ற கோலத்தில் இந்த வீட்டின் வாசலில் வந்து மயங்கி விழுந்தார். திண்ணையில் உட்கார்ந்திருந்த பிள்ளை மனம் பதைத்து ஓடி இவரைத் தூக்கித் திண்ணையில் கிடத்தி, தண்ணீர்புகட்டி ஆசுவாசப் படுத்தினார். ஆனால் மனமெல்லாம் ஆறுபெண்களுக்குப் பிறகு இதுவாவது ஓர் ஆணாய் இருக்க வேண்டுமே என்ற பிரார்த்தனையிலேயே லயித்திருந்தது. சீமந்தப் புத்திரன் தறுதலையாய்த் திரிந்து கொண்டிருப்பதால் மருடேசன் பிள்ளை யாருக்கோ அவனைத் தத்துக் கொடுத்து விட்டதுபோல் தமக்கொரு மகன் இருப்பதையே மறந்திருந்தார்.



இதோ, இந்தச் சிங்காரம் அப்போதுதான் பிறந்து விரிட்டான்... உடனே இந்தப் பரதேசியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார் பிள்ளை. அன்றைக்குப் பிடித்த தொந்தம் இந்த வீதியின் இரண்டு பக்கமும் விளக்குகளாய் எரிந்து இவரை 'விளக்குச் சாமி'யாய்த் திரிய விட்டிருக்கிறது இந்த ஊரில்.

''... இப்போது பிறந்திருக்கிறானே பையன்... கேட்டையில் பிறந்த ஆண் கோட்டையை அழிப்பான்... ஆனாலும் உன் குலம் தழைக்கும் போ'' என்று அன்று மொழிந்த சாமியாரின் வார்த்தைகளில் 'குலம் தழைக்கும்' என்ற அருள் வாக்கைக் கேட்டுத் தனது இஷ்டதெய்வமான அம்பிகையை மனத்துள் வணங்கினார் மருடேசன்.

இந்தப் பெண்களின் மத்தியில் ஆண் பிள்ளையாகப் பிறந்த சிங்காரம் — ஒரு பெண் குழந்தை மாதிரி தலைப்பின்னலும், காலில் தண்டையும் கொலுசும் அணிந்து, பாவாடை, சட்டை தரித்து ஒரு பெண்ணைப் போல் வளர்ந்து கொண்டிருப்பது இப்போதெல்லாம் மருடேசன் பிள்ளையின் மனத்தை உறுத்துகிறது. சிங்காரத்துக்குப் பிறகு அம்பிகை அம்மாள் ஒன்பதாவது பிரசவத்துக்குத் தயாரானதால் இவனே அந்தப் பெண்களே வளர்க்க நேர்ந்தது. அந்த ஒன்பதாவதும் ஆண்தான். அதுதான் அம்பிகைக்கு நோயையும் மரணத்தையும் கொணர்ந்ததாம்.

''எங்க அம்மா என்னை எதுக்குப் பெத்தாளாம்? இந்தச் சனியனைத் தூக்கிச் சொமக்கறத்துக்குத்தான்'' என்று எப்போதோ ஒரு சலிப்பிலும் சச்சரவிலும் சொல்லிக்கொள்கிற இளம் விதவை காந்திமதி, அந்த நோஞ்சான் குழந்தை வைத்தியைத் தனக்கொரு கடமையென்று சொல்லிக் கொண்டே துணையாகக் கொண்டுவிட்டாள்.

அம்பிகை போன பிறகு மருடேசனுக்கு சிங்காரத்தைப் பற்றித்தான் கவலை. அந்த ஒன்பதாவதைப்பற்றி ஆணு, பெண்ணு என்று கூட அவர் அக்கறை காட்டியதில்லை. இந்தச் சிங்காரத்தைப் பெண் குழந்தையாக வளர்ப்பது விபரீத விளையாட்டாகி வருகிறது. ஆசைப்பட்டுக் கடவுள் அருளால் கிடைத்த இந்தப் பையன் இரண்டுங்கெட்டானாகி விடுமோ என்ற கவலை மருடேசனுக்கு மனத்தில் அரிக்கிறது.

சிங்காரம் சிற்றாடை கட்டிக்கொள்கிறான்; கோலம் போடுகிறான்; விளையாட்டெல்லாம் சமையல் செய்தல், மாவு அரைத்தல் மஞ்சள் குளித்தல்... என்று பழகினால் பின்னால் இவன் 'பொண்டுக சட்டி'யாகி விடுவானோ? என்கிற அருவருப்பான பயம். கேட்டையில் பிறந்த ஆண் கோட்டையை அழிப்பான் என்ற போது கவலைப்படாதவர் குலம் தழைக்க வித்து வேண்டுமே என்று கவலைப்படுகிறார்... சீமந்த புத்திரனுக்குப் பிள்ளை பிறந்தால் அது 'தாசி பெத்தது' என்றுதான் பெயரெடுக்குமாம். ஏன் மங்களம் அம்மாவுக்கே பிறக்கக் கூடாதா என்ன? அதை நினைக்கக்கூட முடியாத அளவு மூர்க்கமான கோபம் அவர் விவேகத்தை மறைத்திருக்கிறது.

''இனிமே இவனுக்கு யாராவது இந்த மாதிரி பொட்டை வேஷம் போட்டு விட்டீங்கன்னு தெரியும் சேதி... புத்தி இல்லே? ஒரு ஆம்பளைப் பையனை வளர்க்கற லட்சணமா இது?'' என்று மருடேசன்பிள்ளை கேட்ட ஒரு கேள்விக்குப் பொன்னம்மாளும் சிவகாமியும்தான் எண்ணெய்ப் பொரிந்து தள்ளினார்கள்!

''எங்களுக்கென்ன வேற வேலே இல்லேயா? விதியா? உலகத்திலே இல்லாத ஆம்பளைப் புள்ளை பெத்திட்டீங்க... 'பெத்தவ இருந்தா, பெத்தவ இருந்தா'ன்னு பேசினு என்ன அர்த்தம்?... பெத்தவ இருந்த காலத்திலே மட்டும் என்ன வாழ்ந்திச்சு? எந்தப் புள்ளையை உங்க பெண்டாட்டி வளர்த்தா? எங்களை நீங்க வளர்த்த லட்சணத்தை நாங்க வாழப்போன வீட்டிலே வந்து கேக்கணும். பெரிய புள்ளையை நீங்க ஆண்பிள்ளையா வளர்த்த லட்சணம்தான் தாசித் தெருவே சிரிக்குது. புள்ளை வளக்கரதைப்பற்றிப் பேசறதுக்கு இந்த வீட்டில் யாருக்கு வாய் இருக்குது? ஏன்? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க இஷ்டத்துக்கு உங்க பிள்ளையை வளர்த்துக்கறதை யாரு வேணும்னு சொல்றாங்க? அப்ப உங்க இஷ்டத்துக்கு நீங்க மெரட்டலாம், அவளும் கேட்டுக்குவா. நாங்க ஒண்ணும் விதியத்து இந்த வீட்டிலே வந்து கெடக்கலே.''

கடைசியாகச் சொன்ன விஷயம் காந்திமதியின் மனத்தில் மட்டும் அசரீரி வாக்கு போல் போய்ப் பதிந்தது. அவளுக்கு அப்பா மீது மரியாதையும் அன்பும் மாத்திரமில்லாமல் அம்பிகையை அவர் பறிகொடுத்திருப்பதால் ஓர் அனுதாபமும் உருவாகியிருந்தது

'புலியும் சிங்கமும்'

தேனாம்பேட்டை பொருட்காட்சி மைதானம். வழுவூர் ராமையா பிள்ளைக்குப் பாராட்டு... பட்டமளிப்பு... விழா கோலாகலமாக நடக்கிறது.

பேரு மன்னர் கல்கி மேடைக்கு வருகிறார்.

''மேடைக்கு வரவே பயமாக இருக்கிறது. மேடையில் புலியும் சிங்கமுமாக அல்லவா நிறைந்து இருக்கிறது?'' போட்டார் ஒரு போடு... சபையில் ஒரே கலகலப்பு... சிரிப்பு ஆரவாரம்... மேடையில் வீற்றிருந்த புலி டைகர் வரதாச்சாரியார்.

சிங்கம் ராமையா பிள்ளைதான்... அவர் பெற்ற பட்டம் நாட்டிய கலா கேசரி!

ஆர். பி. சாரதி.



மேலும் அவளது இயல்புக்கேற்ப ஒரு கலியாணம் நடத்திப் பார்க்க அவள் ஆசைப்பட்டாள்... அந்தக் குடும்பத்தில் ''கலியாணம் என்றாலே காந்திமதி'' தான் என்று பெயரெடுக்கும் அளவு ஒரு பெண்ணையோ பையனையோ பார்த்த மாத்திரத்தில் இன்னாருக்கு இன்னார்தான் ஜோடியாக வாய்க்க வேண்டுமென்று மிக இசைவாக இவள் எல்லோரையும் ஒன்று கூட்டி விடுவாள்... அதற்கான காரியங்களை ஒன்று கூட்டிக் கலியாணத்தை நடத்தி வைக்க மிகப் பிரயாசை எடுத்துக் கொள்வாள்... ''நான் சொன்னபடிதானே ஆச்சு'' என்று கையைத் தட்டிக் கொண்டு உட்காருகிறவரை ஓயமாட்டாள். இப்போது மருடேசன் பிள்ளைக்கு மறுமணம் என்றதும் அவள் மனத்தில் தோன்றிய முகம் கப்பல்கார வீட்டுப் பெண் கோதையினுடையது.

மருடேசன் பிள்ளைக்கோ ஆயிரம் கவலைகள். கடல்போல் பரந்துகிடக்கும் சொத்துக்களை வெள்ளைக்காரன் சூறையாடிவிடுவான் போலிருக்கிறது. வெள்ளைக்காரனை நம்ப முடியவில்லை; அவன் பாஷை தெரியவில்லை. தான் இங்கிலீசு படிக்காமல் போனது பிள்ளைக்கு அந்த வெள்ளைக்காரத் துரைகளின் 'சந்நிதி'யில் நிற்கும்போது அவமானமாக இருக்கிறது. அந்தத் 'துபாஷி' சொல்ற மடத்தனமான விஷயத்துக்கெல்லாம் தலையை ஆட்டிட்டு அவன் காட்டுகிற இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டுவிட்டு அந்தக் கையெழுத்து தன்னை எங்கெங்கே கட்டிப் போடப் போகுதோ என்னும் கவலை ஒன்று மனத்துள் நிரந்தர நமைச்சல் தருகிறது... அந்தத் தொரை கேக்குறான்... உன் ஐசுவரியம் என்ன பெறும்னு... அது எப்படி கணக்குப் போட்டுப் பாக்கறது... ரூபா அணா பைசா கணக்கிலே ஐசுவரியத்தை எப்படி அழிச்சிப் பாக்கறது... ஒண்ணுமில்லாத பயலுவ எல்லாம் இங்கிலீசுப் படிச்சிட்டு அதிகாரம் பண்றான்... நெனைச்சா தூக்கம் வர மாட்டேங்குது... தனக்கு அப்புறம் இத்தினி பொம்பளைப் பொண்ணுங்களும் எப்படித்தான் காலம் தள்ளுமோ''... என்றெல்லாம் மனம் அலைபாய்கிறது.

பிள்ளை சொத்து சேர்க்கும் ஆசையில் எதையும் வாங்கியதில்லை... இன்னொருத்தன் சவுரியத்துக்கு வாங்கினதுதான்... நெலம்... வீடு, நகை எல்லாமே அப்படித்தான். அதே போல் அவர் எந்தச் சொத்தினையும் விற்றதுமில்லை...

இரண்டாவது பெண் பொன்னம்மாளின் புருஷன் மார்த்தாண்டம் பிள்ளை, இல்லாத லீலைகளெல்லாம் புரிந்துவிட்டுத் தாயின் கண்டிப்புக்கும், தம்பியின் கடுமைக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி மனம் உடைந்து ஊரை விட்டே சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய்ப் பட்டணத்தில சேர்ந்து கண்காணாச் சீமைக்குப் போய்விட்டான். கையில் ஒரு குழந்தையுடனும் மாமியார் சிவபாக்கியத்தம்மாளின் துணையுடனும் பொன்னம்மாள் பிறந்த வீட்டோடு வந்து விட்டாள். தாயின் முகத்தில்கூட விழிக்க மாட்டேன்



''பொங்கலுக்கு உன் மாமா உனக்கு வாழ்த்து வாங்கி அனுப்பியிருக்காராமே எதுக்கு?''

''எனக்குப் பொங்கல் வாழ்த்து அனுப்பச் சொல்லி அவருக்குக் கடிதம் எழுதினதில 'பூ' விட்டுப்போச்சு''

என்று சொல்லிப் போனவள், தாய் போன பிறகு தாய் வீடு வந்து சேர்ந்தாள். அவளுடைய மாமியார் தனது பெரும் சொத்தில் ஓடிப்போன மூத்தமகனின் பங்கை இளைய மகன் வைரவனிடமிருந்து பறித்து மருமகளுக்கு எழுதிவைத்து விட வேண்டும் என்ற ஆவேசத்தில் கோர்ட்டு, கேஸு என்று நிற்கிறாள். மருடேசன் பிள்ளைக்கு இதெல்லாம் பிடிக்காத, புரியாத விஷயம். தன் மகளுக்கு ஒரு வீட்டை எழுதிவைத்து அவளைச் சிவபாக்கியத்தம்மாளுடன் அங்கு குடிவைக்கவே அவர் விரும்புகிறார்.

தனது கலியாண விஷயமாக நடக்கும் ஏற்பாடுகளில் அவர் மனம் சிறிது தடுமாறுகிறது. ''இந்த வீட்டுப்பொண்கள் இட்ட மாட்டிக்கிட்டு இந்த மங்களம் ஒருத்திபடற பாடு, நெனைச்சா வயிறு எரியுது! இந்தப் பாவம் போதாதுன்னு இன்னொருத்தியைக் கொண்ணாந்து நானும் ஒரு பெண்பாவத்தைக் கொட்டிக்கணுமா'' என்று யோசிக்கிறார்!

''இந்த வீட்டிலே இருக்கற பெண்களுக்குப் புத்தி வரணும்னு சரியான பொம்பளை ஒருத்தி இங்கே வந்தாகணும்... நீங்க சும்மா தோணின முடிவைத் தொடர்ந்து ஆகவேண்டிய காரியத்தைக் கவனிங்க... எல்லாம் நல்லதுதான் நடக்கும்'' என்று சொல்லும் விளக்குச் சாமியின் வார்த்தைகள் மருடேசனின் மனத்துக்கு உகக்கின்றன.

ஆமாம்! அந்த வீட்டுப் பெண்கள் லேசுப்பட்டவர்களா? மூன்று கட்டுகளுடைய இந்த வீட்டின் அந்தப்புரம் போன்ற இடைக்கட்டுக் கதவுகள் சாத்தப்பட்டால் மறுநாள் காலையில்தான் திறக்கப்படும். அதற்கு மேல்தான் மருடேசன் வீட்டுப் பெண்மக்களின் அந்தப்புர வாழ்க்கை தொடங்கும். 'மகாசபை' கூடிப் பல அரிய விஷயங்களை விவாதிக்கும். கேளிக்கைகள் தொடங்கும். அப்பா மாதிரியும், விளக்குச்சாமி மாதிரியும் அம்பிகை மாதிரியும் வேஷங்கள் தரித்துச் சிலர் நடித்துக் காண்பிப்பர். மருடேசன் குடும்பம் சைவம்

என்று ஊரில் பேரெடுத்தது. காற்றில் மிதந்துவரும் நாற்றத்தைக்கூடப் பொறுக்கமாட்டாதவர் அவர். அப்படிப்பட்டவரின் பெண்கள் இரவில் பின் வீட்டின் பின் கட்டுப் பிரதேசத்தில் மாமிசம் சமைப்பர்... அம்பிகை அம்மாள் காலம் தொட்டே இது நடந்து வருகிறது. அவள் இது குறித்து அச்சம் கொண்டாள். மங்களம் இந்த விருந்தில் பங்கெடுத்துக் கொள்ள மாட்டாள் என்றாலும் அதற்கான வேலைகளை மறுக்கத் தைரியமில்லாமல் அம்மியில் அரைத்தும் ஆக்கியதை மறைத்தும் எல்லா வேலைகளும் செய்தவாறு மனம் குமட்டிக் கொண்டு அவள் பட்டினி கிடப்பாள். இங்கே மறைக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ. வெற்றிலை உண்டு. பாக்குப் புகையிலை சமாசாரம், பொடி, சுருட்டு. மாமிச உணவு எது இல்லை? ஒரு வேடிக்கைக்கு என்று ஆரம்பித்த இந்த மாதிரிப் பழக்கங்கள் இப்போது நிரந்தரமாகி விட்டன...

இப்போது கொஞ்ச நாட்களாக இந்தப் பெண்களின் கூட்டத்தோடு சிங்காரமும் மாமிச பட்சிணியாகிக் கொண்டிருக்கிறான். மகுடேசன் பிள்ளைக்குத் தெரிய வந்தால் என்ன ஆகுமோ?

ஒரு நாள் பூனை ஒன்று மீனைக் கவ்விக் கொண்டு வீட்டுக்குள் ஓடி வருவதைச் சகியாது கால்கட்டையை அதன் மேல் அவர் எறியப் போக அந்தக் கட்டை அதன் கண்ணில் பட்டு... பாவம்! அந்தப் பூனைக்கு ஒரு கண்ணே நொள்ளையாகி விட்டது. அவருக்கு அசைவ உணவில் அப்படி ஓர் அருவருப்பு, வெறுப்பு.

இதெல்லாம் தெரிந்துதான் விளக்குச்சாமியார் இப்படிச் சொல்கிறார் போலும்: ''இந்த வீட்டுப் பெண்கள் கொழுப்பை அடக்கற மாதிரி இந்த வீட்டுக்கு ஒரு நிஜம் ராணி வரவேணும்.'' கடைசியில் அவர் மகுடேசன் பிள்ளைக்கு ஆசி கூறுவது போல் சொன்னார்: ''பிள்ளை! அம்பிகை அம்மாளுடைய அருளினால் உங்களுக்கு ஒரு நல்ல குணவதி வரட்டும். உங்க வயசுக்கு விசேஷமாத்தான் புத்திமதி சொல்ல முடியும். எப்படிப்பட்டவங்க உங்களுக்கு வாய்ச்சாலும் நீங்கள் உங்களைப் பொறுத்த வரைக்கும் மகாபாரதத்தில் வர சந்தனு மகாராஜா மாதிரி இருக்கணும்.'' பிள்ளை பெரிய கல்விமான் அல்ல. எனினும் மாகபாரதம் ராமாயணம் எல்லாம் அறிந்தவர். சாமியாரின் பேச்சிலுள்ள தாத்பரியத்தைப் புரிந்து கொண்டார்...

'வீடு, குடும்பம், தாயற்ற குழந்தைகள், சிங்காரத்தை வளர்க்க, என்று ஓராயிரம் பொய்க்காரணங்களைச் சொன்னாலும் உண்மையில் ''எனக்கொரு பெண் துணை வேண்டும்' என்பதுதானே காரணம்?...' என்றெல்லாம் யோசிக்கிறார் பிள்ளை. ''என்ன இருந்தாலும் இப்படி ஒரு தேவகுமாரியையா ஐம்பது வயதான எனக்குப் பெண் பார்த்து முடிப்பது?'' என்ற வியப்பு பிள்ளைக்கு உடம்பையும் உயிரையும் அடிக்கடி சிலிர்க்க வைக்கிறது.

(தொடரும்)

திருவாசகத் திருவிழா



திருவாவடுதுறை ஆதீன திருக்கைலாய பரம்பரையில் இருபத்தி இரண்டாவது குரு மகா சந்நிதானமாக அமர்ந்து சைவத் தொண்டாற்றுபவர் ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண தேசிக பரமாசாரிய சுவாமிகள். எண்பது வயதைத் தாண்டிய முதியவரானாலும் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து நித்திய பூஜைகளை முடித்து ஆதீன சம்பந்தமான தபால்களையெல்லாம் நேராகவே கவனிக்கிறார். அளப்பரிய தமிழ்ப் பற்றுள்ளவர். ஆதீனத்தின் சார்பில், பல, சமய, இலக்கிய கருத்தரங்கங்களை நடத்தியுள்ளவர்.

இந்த வகையில்தான் திருவாசகம் பற்றிய கருத்தரங்கிற்கு இந்த ஆண்டு பொங்கல் விழாவுக்குத் தொடர்பாக ஆதீனம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி திருமறைக் கருத்தரங்கங்களுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குட்பட்ட திருவிடைமருதூர் ஆலய முற்றத்தில் பிரும்மாண்டமான அரங்கம் நிர்மாணித்து வெற்றிகரமாக நடத்திய அனுபவம் ஆதீனத்துக்கு உண்டு.



இந்த ஆண்டு திருவாசகக் கருத்தரங்குக்கு மற்றொரு விசேஷப் பொருத்தமும் உண்டு.

மாணிக்க வாசகப் பெருமான் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை மாநகரில் பாண்டிய அரசனிடம் அமைச்சராக இருந்தவர். ஆளும் பொறுப்பில் பல காலம் பயின்றவர். பிறகு மனநிறைவு தேடி ஈசனை நாடித் தேடித்தேடிப் போய் மனம் உருகப் பாடினவர். அவர் மாத்திரம் உருகவில்லை. அவர் பாடிய திருவாசகப் பாடல்கள் கேட்போரையும் உருக வைத்துவிடும். அதனால்தான் 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற வழக்குச் சொல்லே தோன்றிவிட்டது.

பாண்டிய மன்னனின் அமைச்சராகப் பணியாற்றிய மாணிக்கவாசகர் இயற்றிய திரு வாசகத்தின் கருத்தரங்கில் பாரதநாட்டின் பிரதம அமைச்சராகப் பணியாற்றும் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் திருவிடைமருதூர் வந்து, கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பது பொருத்தம்தானே!

திருவிடைமருதூர் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்களும் ஆயிரக்கணக்கான சமய ரசிகர்களும் மூன்று நாள் கருத்தரங்கு விருந்துக்காக ஆவலுடன் கூடியிருக்கிறார்கள்.

திருவாசகத் திருமறையைப் பிறமொழிகளில் மொழி பெயர்த்தவர்களுக்கும், சிவநேயச் செல்வர்கள் சிலருக்கும் ஆதீனம் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கவிருக்கிறது.

கருத்தரங்கு விழா வெற்றிகரமாக நடந்து முடிய, திருவிடைமருதூர் ஆலயத்தின் கட்டளை விசாரணை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தம்பிரான், மேலாளர் அருணாசலம் பிள்ளை, சௌந்திரராசப்பிள்ளை போன்றவர்கள் அல்லும் பகலும் உழைத்து வருகிறார்கள்.



பிரதமர் மொரார்ஜி தேசாயை, அவருடைய பல அலுவல்களுக்குமிடையே தமிழகத்துக்கு மாணிக்க வாசகர் பற்றியும் தெரிந்து கொள்ள வரவழைக்கும் முயற்சியில் வெற்றி பெற்றவர், சமயப் பற்று மிகுந்த திருமதி சௌந்திரா கைலாசம்.

தமிழக அமைச்சர்களும் கலந்து கொள்கிறார்கள்.

கண்ணால் யானும்
கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும்
அமுதே காண்க
கருணையின் பெருமை
கண்டேன் காண்க
புவனியிற் சேவடி
தீண்டினன் காண்க
சிவனென யானும்
தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்
டருளினன் காண்க

என்று மாணிக்க வாசகரே தாம் பெற்ற பெரும் பேற்றைக் கூறியுள்ள மாதிரி, இந்த விழாவில் கலந்து கொண்டவர்களும் நிச்சயம் பெரும் பேற்றைப் பெறக் கூடியவர்கள்தாம்.

— கோமதி ஸ்வாமிநாதன்

எப்படிச் சொல்வேன்?

சுபத்ரா அய்யாசாமி

அல்மோரா நகர அஞ்சலக வாயிலில் நின்றிருந்தார் சுந்தரேசன். அன்று வியாழக் கிழமை. இந்தியாவிலிருந்து கடிதம் வரும் நாள். இந்தியர்கள் பலரும் வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஓரிருவர் அங்கேயே நின்று கடிதங்களைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார்கள். வேகமாக வந்துகொண்டிருந்த முகர்ஜி சுந்தரேசனைப் பார்த்து, 'ஹலோ' என்றார். சுந்தரேசனும் பதிலுக்கு 'ஹலோ' சொல்லும்போதுதான் அவருடைய முகம் வாட்ட முற்றிருப்பதைக் கண்ணுற்றார் முகர்ஜி.

''வாட் ஹாப்பண்ட்? எனிதிங் சீரியஸ்?'' என்று விசாரித்தார்.

''நிறையப் பேச வேண்டியிருக்கிறது. ஆனால் அதை எங்கே தொடங்கி எப்படிச் சொல்வது என்றுதான் புரியவில்லை,'' என்றார் சுந்தரேசன். மெதுவாக நடந்து கொண்டே, இதக் தாயிது தெருவைத் தாண்டி உபிசியோ வியாஜி வாயிலைக் கடந்து ஹெப்லி சாலையின் முனைக்கு வந்தார்கள் இருவரும்.

அவராக எதுவும் சொல்லாததைக் கண்ட முகர்ஜி, ''பாட் நியூஸ்?'' என்று கேட்டார்.

ஆமாம் என்று தலையை ஆட்டிய சுந்தரேசன் சற்றுப் பொறுத்து, ''அபௌட் மை பிரதர் இன் லா'' என்று நிறுத்தினார்.

''உடம்பு சரியில்லையா?'' என்றார் முகர்ஜி.

சில விநாடிகள் அமைதிக்குப் பிறகு 'செத்துப் போனான்' என்பதற்கு அடையாளமாகத் தம் உள்ளங்கையைக் கீழிருந்து மேலாக ஆட்டிக் காட்டினார் சுந்தரேசன்.

''ஐ ஆம் சோ சாரி'' என்றார் முகர்ஜி. ''எப்போது?''

''போன வாரம். இன்றைக்குச் சரியாக ஏழு நாட்கள் ஆகின்றன. இன்றைக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. மாமனார் என் மைத்துனன் சீரியஸாக இருப்பதாக எழுதியிருக்கிறார். அதுகூட அவன் போன பிறகு எழுதியதுதான். திடுதிப்பென்று செய்தியைத் தெரியப்படுத்தாமல் இப்படி ஒரு கடிதம் எழுதி எங்களைத் தயார் செய்கிறார். இன்னொரு சொந்தக்காரர் அவன் காலமாகி விட்டதாகவே எழுதியிருக்கிறார்.''

''சிறு வயசா?''

''ஸ்கூல் பைனல் படித்துக் கொண்டிருந்தான். ஸ்மார்ட் பாய். நல்ல ஸ்போர்ட்ஸ்மேன். போன வாரம் அவனுக்கு டைபாயிட் என்று எழுதியிருந்தார்கள்.''

சூள் கொட்டித் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார் முகர்ஜி. சுந்தரேசன் தொடர்ந்தார்.

''என் மனைவிக்கு இந்தப் பையன் என்றால் உயிர். கடைக்குட்டி. வீட்டில் எல்லோருக்கும் செல்லம். அவளுக்கு இந்த விஷயத்தை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை.''

''ஜாக்கிரதையாகத்தான் சொல்ல வேண்டும்.''

''எப்படிச் சொன்னாலும் அதிர்ச்சி அதிர்ச்சிதானே? அவளுடைய சொந்தக்



தம்பி ஆயிற்றே. மூன்று மாதங்கள் முன்பு தான் ஒரு பேனா வாங்கி அனுப்பினேன், அவ னுடைய பிறந்த நாளுக்காக. இப்போது அவன் செத்துப் போனான் என்று எப்படி அவ னுக்குச் சொல்வது?''

''அப்படியென்றால் இப்போது என்னதான் செய்யப் போகிறீர்கள்?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை. தலையைச் சுற்றுகிறது. வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைத்தாலே பயமாக இருக் கிறது!'' என்றார் சுந்தரேசன்.

''உங்கள் மனைவிவேறு இருதய நோயாளி யாயிற்றே?'' என்றார் முகர்ஜி.

''ஆமாம். அதனால்தான் இவ்வளவு தயங்கு கிறேன். ஒரு சின்ன அதிர்ச்சி கூடக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.''

மீண்டும் சற்று மௌனம். சுந்தரேசன் அதைக் கலைத்தார்.

''இப்போதைக்கு நான் அவனுக்குச் சொல்லப் போவதில்லை. கொஞ்சம் கொஞ்ச மாகத் தயார் செய்து ஒரு வாரத்துக்குப் பிறகுதான் சொல்லப் போகிறேன்.''

''எனக்கென்னவோ நீங்கள் தேவைக்கு மேல் பயப்படுவதாகத் தோன்றுகிறது!'' என்றார் முகர்ஜி. ''ஒரு வாரத்துக்குப் பிறகும் நீங்கள்தானே அதை உங்கள் மனைவிக்குச் சொல்ல வேண்டும்? அதோடு, ஒரு வாரம் உங்கள் மனத்துக்குள்ளேயே இதை வைத்துக் குமைந்து கொண்டிருந்தால் உங்கள் மனை விக்குத் தெரிந்து விடாதா?''

''அந்த ஒரு வாரத்தில் அவ ளுக்கு எப்படி இந்தச் செய்தி யைத் தெரிவிப்பது என்று திட்ட மிட்டுக் கொள்வேனே, அது நல்ல தில்லையா?'' தம் கருத்தை நியாயப்படுத்திக் கொண்டார் சுந்தரேசன்.

வீட்டுக்குப் போன சுந்த ரேசன் ஒரு புத்தகத்தை எடுத் துக் கொண்டு சோபாவில் அமர்ந்துவிட்டார். புத்தகத்தின் எழுத்துக் கூடக் கண்ணில் படவில்லை. ஆனால் மனைவி யிடம் பேசுவதைத் தவிர்க்க வேண்டுமே?

ஓசை கேட்டு உள்ளிருந்து வந்த கல்யாணி, ''டீ போடச் சொல்லட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம்'' என்று புத்தகத்தில் ஆழ்ந்து விட்டார்.

''லெட்டர் ஒண்ணும் வரலியா?''

''ஊஹூம்.''

''சே, என்ன மனுசங்க! நான் ஒருத்தி இருந்து தவிச்சுக்கிட்டிருப்பேங்கிறது அவுங்க ளுக்கு ஞாபகம் வராது? யாராவது ஒருத்தர் ஒரு வரி கிறுக்கிப் போடப்படாது?''

''ஏன் சும்மா ஃபஸ் பண்ணிக்கிறே? ஏதா வது நியூஸ் இருந்தா எழுத மாட்டாங்களா?''

''நியூஸ் என்ன நியூஸ்! கண்ணனுக்கு எப்படியிருக்குன்னு ஒரு வரி எழுதலாமேன்னு சொல்றேன்.''

''அதைத்தாம்மா நானும் சொல்றேன். முன்னே மாதிரியே இருக்கும். ஏன் எழு தணும், கொஞ்சம் இம்ப்ரூவ் ஆனதுக்கப் புறம் எழுதிக்கலாம்னு விட்டிருப்பாங்க.''

மும்முரமாகப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டி அதில் ஆழ்ந்துவிடுவது போலப்



''நீ கிண்டி ரேஸில் பத்தாயிரம் ரூபாய் ஜெயித்ததாகக் கேள்விப்பட்டேனே, உண்மையா?''

''நீ கேள்விப்பட்டது சரியல்ல, அது கிண்டி ரேஸ் இல்லே; ஊட்டி ரேஸ்!''

''எதுவோ ஒன்று பத்தாயிரமாச்சே''

''பத்தாயிரம் என்பது சரியல்ல; ஆயிரம்தான்''

''ஏதோ ஒன்று ஜெயித்தாயல்லவா?''

''அதுவும் தப்பு, ஆயிரம் ரூபாய் — நான் தோற்ற பணம்!''

· முத்து



பாவனை காட்டினார் சுந்தரேசன். கல்யாணி உள்ளே போய்விட்டாள்.

ஸ்டாண்டின்மீது வைக்கப்பட்டிருந்த கண்ணனின் புகைப்படம் சுந்தரேசனின் கண்களில் பட்டது. கையில் ஒரு குழல்கோப்பையைப் பிடித்துக் கொண்டு ஸ்போர்ட்ஸ் உடையில் காட்சியளித்தான். முகத்திலே சிரிப்பு அருவியாய்ப் பொங்கி வருகிறது. பள்ளிக்கூட சாம்பியனும்.

அவருக்கும் கண்ணனின் மேல் உயிர். சொந்தத் தம்பி மாதிரி. போன விடுமுறையில் அவர்கள் தாய்நாடு போயிருந்தபோது பெரும் பகுதி நாட்களைக் கல்யாணியின் வீட்டில் தான் கழித்தார்கள்.

ஓயாமல் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தான் கண்ணன். ஆயிரம் விஷயங்கள் சொன்னான். ஆயிரம் கேள்விகள் கேட்டான். எத்தனை எத்தனை விஷயம் சொன்னாலும் சொல்வதற்கு அவனிடம் விஷயம் இருந்தது. எத்தனை கேள்விகள் கேட்டாலும் மேலும் கேள்விகள் உதயமாயின.

திரும்ப அவர்கள் எதியோபியா புறப்பட இரண்டு நாட்கள் இருந்தன. ஒரு சின்ன அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்தான். ''அத்தான், உங்களுக்கு ஒரு பிரசண்ட்.''

பெட்டியைப் பிரித்தார் சுந்தரேசன். ஒரு டை பின். அசோகச் சக்கரம் போட்டு அழகாக இருந்தது.

''எதுக்குடா இதெல்லாம்?''

''என்னமோ வாங்கணும்னு பட்டது. வாங்கினேன். நீங்க தினசரி டிரஸ் பண்ணிக்கறபோதெல்லாம் என்னை நினைச்சுக்குவீங்க இல்லையா?'' என்றான்.

சுந்தரேசனின் கைகள் அவரை அறியாமல் அவருடைய டைபின்னைக் கழற்றின. 'டிரஸ் பண்ணுகிறபோதெல்லாம் என்னை நினைத்துக் கொள்ளுங்கள் என்றாயே, கண்ணா. டிரஸ் பண்ணிக்கிற போதெல்லாம் நான் கண்ணீர் விடுகிற மாதிரி செய்து விட்டாயேடா, பாவி!'

''ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

கல்யாணியின் குரல் அவரைத் திடுக்கிட வைத்தது.

''என்ன சொன்னே?''

''இரண்டு மூணு தடவை கூப்பிட்டேன். உங்களுக்குக் காது கேட்கவே இல்லே. அப்படி என்ன யோசனை?''

''ஒண்ணுமில்லேயே. புத்தகம் ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா இருந்தது. அதிலேயே மூழ்கிட்டேன் போலிருக்கு.''

''ஏன் பொய் சொல்றீங்க? நீங்க புஸ்தகத்தைப் பார்க்கவே இல்லையே. கண்ணன் போட்டோவையே பார்த்துக்கிட்டில்ல உட்காந்துக்கிட்டிருந்தீங்க. நாளைக்கே எங்க அப்பாவுக்கு ஒரு கடிதாசு எழுதுங்க. இங்கே நாங்க ரெண்டு பேரும் தவியாத் தவிச்சுக்கிட்டிருக்கோம். நீங்க ஒரு வரி எழுதக் கூடாதான்னு கேளுங்க.''

கல்யாணியின் அப்பாவிடமிருந்தே கடிதம் வந்து விட்டது. ஏரோகிராமில் ஒரே வரி எழுதியிருந்தார். இன்னும் கல்யாணியிடம் சொல்லத் தைரியம் வரவில்லை சுந்தரேசனுக்கு.

''சொல்லி விட்டீர்களா?'' என்று விசாரித்தார் முகர்ஜி.

''இன்னும் இல்லே. சொல்லாமல் மறைப்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது. என் மூஞ்சியைப் பார்த்துவிட்டு என் மனைவி என்னென்னவோ கற்பனை செய்து கொள்கிறாள்.''

''அதைத்தான் நானும் சொன்னேன். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. பேசாமல் சொல்லிவிடுங்கள். நானும் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்.''

''மிஸஸ் முகர்ஜியையும் அழைத்து வாருங்கள்.''

''அவள் மட்டும் என்ன தைரியசாலியா? போன மாதம் அவள் தங்கைக்குக் கல்யாணம் என்று கடிதம் வந்தபோது மூன்று நாட்கள் அழுது கொண்டிருந்தாள். போக முடியவில்லையே என்று. எதற்கும் அவளிடம் விஷயத்தை விவரமாகச் சொல்லி அழைத்து வருகிறேன்'' என்றார் முகர்ஜி.

முகர்ஜி தம்பதிகளை வரவேற்று உட்கார வைத்த கல்யாணி, ''என்னங்க, மிஸ்டர் அண்ட் மிஸஸ் முகர்ஜி வந்திருக்காங்க'' என்று குரல் கொடுத்தாள்.

''உங்கள் தம்பிக்கு உடல்நிலை சரியில்லையாமே?'' என்று கேட்டாள் மிஸஸ் முகர்ஜி.

''ஆமாம். இரண்டு வாரமாகக் காய்ச்சல். ஹாஸ்பிடலில் சேர்த்திருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கும் மேலாகக் கடிதமே வரவில்லை. அதுதான் பயமாக இருக்கிறது'' என்றாள் கல்யாணி.

''வெளிநாட்டில் இருப்பதிலுள்ள ஒரு பெரிய அசௌகரியம் அதுதான். ஒரு நல்லது கெட்டதில் கலந்து கொள்ள முடியாது

அடுத்த வருஷம் இவருடைய அப்பாவுக்கு அறுபதாம் பிறந்தநாள். அதற்கு நாங்கள் போக முடியாது'' என்றாள் மிஸஸ் முகர்ஜி.

''பேசாமல் மனத்தைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள் மிஸஸ் சுந்தரேசன்'' என்றார் முகர்ஜி. ''என்ன ஆனால்தான் நாம் என்ன செய்ய முடியும்? வாழ்வோ, சாவோ, நம் கையிலா இருக்கிறது?''

''அப்படி ஒன்றும் சீரியஸாக இருக்காது'' என்றாள் கல்யாணி. ''உடம்பு தேவலையாகி விட்டதால்தான் பத்து நாட்களாகக் கடிதம் எழுதவில்லை.''

''இல்லையம்மா, அவனுக்கு சீரியஸாகத்தான் இருக்காம். லெட்டர் வந்திருக்கு!'' என்று முதலில் வந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தார் — சுந்தரேசன்.

இடிந்துபோய் உட்கார்ந்து விட்டாள் கல்யாணி. கடிதத்தை அமைதியாகப் படித்தாள். ''எழுதிப் பதினைஞ்சு நாள் ஆச்சே இப்போத்தான் வந்ததா?'' என்றாள்.

''இன்னொரு லெட்டர்கூட வந்திருக்கு கல்யாணி!'' சுந்தரேசன் அடுத்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

அருகில் சென்று ஆவலாய் அமர்ந்து அவளுடைய தோள்களைப் பற்றிக் கொண்டாள் மிஸஸ் முகர்ஜி. கல்யாணி அந்தக் கடிதத்தைப் பிரித்தவள் கொஞ்ச நேரத்துக்கு அசையவே இல்லை. பிறகு ஒருவாறு சமாளித்தவளாய்ச் சுந்தரேசனைப் பார்த்தாள்.


''இத்தனை நாட்களும் உங்க மனசிலேயே வைச்சுப் புழுங்கித் தவிச்சுப்போயிட்டீங்களே. பாவம், நீங்க. நீங்களும் தாங்கிக்க முடியாமே, எங்கிட்டே சொல்றதுக்கும் மனசு வராமே, பைத்தியம் பிடிச்ச மாதிரில்ல ஆடிப் போயிட்டீங்க!'' என்று கனிவு ததும்பக் கல்யாணி கேட்டதுதான் தாமதம். அத்தனை நாட்களும் அமுக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாம் வெடித்துக் கொண்டு வெளிவந்து விட்டன சுந்தரேசனுக்கு. ஓவென்று ஓலமிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார்.


திகைத்துப் போன முகர்ஜி தம்பதிகள் அவரைச் சமாதானப் படுத்த முயன்றபோது, ''ஐயே, என்னங்க நீங்க ஆண்பிள்ளை, தைரியமா இருந்து எனக்கு ஆறுதல் சொல்றதுபோக, நீங்களே இப்படி மனம் உடைஞ்சு போயிட்டீங்கன்னு நான் என்னங்க செய்வேன்?'' என்று தானும் அவருக்கு ஆறுதல் கூற முற்பட்டாள் கல்யாணி.



— உ.ராஜாஜி

கிண்டல் கிட்டா!





'இசை மலர்' படத்தில் ஜெயசுதாவுடன்



ஜேம்ஸ் பாண்டாகப் பல படங்களில் நடித்த ஜெயசங்கர் வீட்டில் நுழைந்தவுடன் 'டுமீ' லென்ற வெடிச் சத்தம் கேட்டது. எனது கால்கள் அப்படியே தயங்கி நின்றன. துப்பாக்கி சுடும் பயிற்சி செய்கிறீரோ ஜெய்?"

''ஏன் அப்படியே நின்னுட்டீங்க! உள்ளே வாங்க'' என்ற ஜெய்சங்கரின் குரல்தான் என்னை மறுபடியும் இவ்வுலகுக்குக் கொண்டு வந்தது. ''துப்பாக்கி சத்தம்'' ...என்று தயக்கத்துடன் நான் கேட்க, சிரித்துக்கொண்டே ''அதுவா! என் செல்வ மகனின் திருவிளையாடல்கள்'' என்று கூறியவாறே அவனை அழைத்து மறுபடியும் வெடிக்கச் சொல்லிக் காண்பித்தார். பின்னர் தொடர்ந்தார்:

''என் மகன் இவ்வளவு தைரியமாக வெடிக்கிறானே ஆனால் நான் அன்று... அதை நினைத்தாலே எனக்குச் சிரிப்பு வருகிறது! சிறு வயதில் எனக்குத் துப்பாக்கியைக் கண்டால் ஒரே நடுக்கம். பொம்மைத் துப்பாக்கியைக் கூடத் தொடமாட்டேன். அது ஏதோ பிறரைத் துன்புறுத்துவதற்காகவே உண்டாக்கப்பட்ட கருவி என்று எண்ணம். சின்ன வயதில் எவ்வளவுக்கெவ்வளவு பயந்த சுபாவத்துடன் இருந்தேனோ இன்று அதற்கு நேர் மாறாக அடிக்கடி துப்பாக்கியுடன் படங்களில் நடிக்கிறேன்.

'' 'செய்வதைத் திருந்தச் செய்' என்று சொல்லுவார்கள். ஆனால் கலைவாணர் என். எஸ். கே. சொல்வதைத் திருந்தச் சொல்வார்கள்: உச்சரிப்பை மட்டும் குறிப்பிடவில்லை. தாம் திருந்தச் சொல்வதுடன் நாம் திருந்தவும் சொல்வார்கள். அதாவது நல்ல கருத்துக்களை நாம் சிரிக்கவும் சிந்திக்கவும் சொல்வார்கள். ஒரு படத்தில் குறிப்பிட்ட காட்சியில் இவர் முக்கியமான ஏதோ வேலையில் உட்கார்ந்திருக்கிறார். அப்பொழுது ஒரு சிறுவன் வந்து ஏதோ கேட்க 'தலையிலே நெருப்பை வை' என்று ஏதோ யோசனையாகக் கோபத்துடன் கூறி விடுகிறார். இதைக் கேட்டு விட்டுச் சென்ற சிறுவன் உண்மையிலேயே கையில் நெருப்புடன் வந்து இவர் தலையில் வைத்தும் விடுகிறான். சுற்றிலும் இருந்தவர்கள் கவனித்து, அந்தச் சிறுவனை அடிக்கப் போகிறார்கள். என். எஸ். கே. தடுத்து விடுகிறார். சிறுவர்களிடம் எதைச் சொல்வது, சொல்லக் கூடாது என்பதை நகைச்சுவையுடன் அந்தப் படத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

''சேலம் 'மாடர்ன் தியேட்டர்'ஸில் படப்பிடிப்பு என்றால் எனக்குச் சந்தோஷம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமானது நடிகர் நடிகையர் எல்லோரும் அங்கே ஒன்றாகக் குழுமிவிடும்போது இரவு பகல் பாராமல் பேச்சும் சிரிப்புமாயிருக்கும். ஒருமுறை அங்கு ஒரு பெரிய பிரச்னை உருவெடுத்தது. ஆனால் யாருமே என்னிடம் வந்து பிரச்னை என்ன என்பதைச் சொல்லாமல் தங்களுக்குள்ளேயே கிசுகிசுத்துக் கொண்டார்கள். எனக்கு நெருங்கியவர்கள் என்று நினைக்கும் எல்லாரையும் ஒவ்வொருவராக அழைத்துக் கேட்டேன். ஒருவருமே பதில் சொல்லாமல் மெல்ல நழுவிவிட்டார்கள். கடைசியில் ஒருமாதிரி அந்தப் பிரச்னை புரிந்தது. படத்தில் நான் மாறுவேடத்தில் சில காட்சிகளில் வருவதாக எடுக்கவேண்டியுள்ளதாம். எந்த மாறுவேடத்தில் என்னை வரவழைப்பது? இதுதான் பிரச்னை. அதற்கு ஒருவர் சொல்லியிருக்கிறார், 'ஜெயசங்கருக்கு மேக்கப்பே போடாவிட்டால் மாறுவேடத்தில் வந்த மாதிரி இருக்கும்' என்று. இதைக் கேட்டு நான் கோபப்படுவேனோ என்று சிலர் எண்ணியுள்ளார்கள். ஆனால் நான் மனதாரச் சிரித்தேன். எல்லாரும் நிம்மதி அடைந்தனர்.

''திரைப்படத்தில் மட்டுமல்ல, எல்லாருடைய வாழ்க்கையிலும் எத்தனையோ நகைச்சுவையான நிகழ்ச்சிகள். எனது டாக்டர் நண்பரொருவர் கோடம்பாக்கத்தில் தொழில் நடத்துகிறார். நான் ஸ்டுடியோ போகும் போதோ, வரும்போதோ நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவரைச் சந்திப்பது வழக்கம். ஒருநாள் அவர், சிரித்தபடியே வந்து

ஜேம்ஸ் பாண்ட்





'சொந்தமடி நீ எனக்கு' படத்தில் மேஜர், ஜெய், ஸ்ரீப்ரியா.

'மாமியார் வீடு' படத்தில் வெண்ணிற ஆடை நிர்மலாவுடன்.

'முடிசூடா மன்னன்' படத்தில் ஸ்ரீதேவியுடன்.





கொண்டிருந்தார். 'என்ன விஷயம்?'' என்றேன். 'என்னிடம் ஒரு அம்மாள் இன்று தன் குழந்தைக்கு மருந்து வாங்க வந்தாள். நான் குழந்தையின் பெயரைக் கேட்டேன். அதற்கு ''மண்ணுங்கட்டி'' என்றுள் அந்தத் தாய். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நாம் ஏதாவது தவருகக் கேட்டு கோபித்துக் கொண்டு விட்டாரோ அந்த அம்மாள் என்று நினைத்தேன். பிறகு மெல்ல நான் 'குழந்தையின் பெயரைக் கேட்கிறேன்' என்றேன். 'அதுதாங்க நானும் சொல்றேன்' என்றுள் அந்தத் தாய். அது மட்டுமல்ல. அப்படிப் பெயர வைத்ததற்கான காரணத்தையும் கூறிஞள். 'என் மகன் வயிற்றிலிருந்த போது நான் சிறுசிறு கட்டிகளாக மண்ணை உண்டேன். அதைப் பார்த்த என் கணவர் இவன் பிறந்தவுடன் மண்ணுங்கட்டி என்று அழைத்தார். அதுவே நிலைத்து விட்டது.' இப்படி டாக்டர் கூறிச் சிரித்தார். எப்படி இந்த அசல் ஜோக்?'' என்று கேட்டுவிட்டு ஜெய்சங்கர் கலகலவென்று சிரித்தார்.

இத்தருணத்தில், 'என்ன? எனது அப்பாவின் நேரத்தை இவ்வளவு எடுத்துக் கொண்டு விட்டீர்களே?' என்பதுபோல் கையில் அதே பொம்மைத் துப்பாக்கியுடன் எட்டிப் பார்த்தான் ஜெய்சங்கரின் மகன். குட்டிப் பையனின் பார்வை நேரமாகி விட்டதை நினைவூட்டச் சட்டென்று நடையைக் கட்டினேன்.

பேட்டி: சலன்

ஜோக்ஸ் — ஜெய்சங்கர்



CHAITRA-G-38 REV III-TAM



''சேல்ஸ் மானேஜர் உத்தியோகத்தில் உமக்கு நல்ல அனுபவம் என்றீர்களே, எப்படி?''

''இரண்டே வருஷத்தில் என் எட்டு பெண்களுக்கும் கல்யாணம் பண்ணிட்டேன்!''

வேண்டும், வேண்டும்!

கண்ணதாசன்

குன்றென நிற்றல் வேண்டும்
குடையெனப் பணிதல் வேண்டும்
மன்றினில் உயர்தல் வேண்டும்
மனதினில் அமைதி வேண்டும்
நன்றென நினைப்ப தெல்லாம்
நடத்திடும் துணிவு வேண்டும்
அன்றெனில் உலகை விட்டே
அக்கணம் அகல்தல் வேண்டும்!

முறையுள செல்வம் வேண்டும்
முனிவிலா நண்பர் வேண்டும்
நிறையுள மனையாள் வேண்டும்
நிகரிலாக் குழந்தை வேண்டும்
கறையிலாப் புகழும் வேண்டும்
கலக்கமில் உடலும் வேண்டும்
பெறும்இவை இல்லை என்றால்
பேருல கடைதல் வேண்டும்!

காலையில் படுக்கை விட்டு
கண்விழித் தெழும்நே ரத்தில்
சோலையின் மலரைப் போல
தூயதோர் மணமும் வேண்டும்
மாலையில் தென்றல் வந்தால்
மயங்கிடும் உடலம் வேண்டும்
ஏழுமில் வாழ்க்கை இன்றேல்
இறைவனை அடைதல் வேண்டும்!

யந்திர மனிதன் போல
அடிகளை எடுத்தே வைத்து
மந்திரம் படித்தாற் போல
மனதினுள் முணு முணுத்து
சந்தன மரத்தைப் போல
தான்தேய்ந்து பிறர்க்குத் தந்து
வெந்துபோய் அழிவ தென்றால்
வீணான பிறப்பே யன்றோ?

'தோன்றுக புகழோ' டென்று
சொன்னது தமிழ்நூல் அன்று!
ஆன்றவன் அறிஞன் என்று
அனைவரும் போற்று மாறும்
ஈன்றவர் மகிழு மாறும்
இனியதோர் வாழ்வைக்கேட்டேன்;
சான்றென நிற்கும் தெய்வம்
இனிமேலும் தருதல் வேண்டும்!



கனவா, நிஜமா? 4

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்





சீக்கிரம் அந்தக் குழிக்குள் இறங்கு...ம்... யோசிக்காதே.
நீ யார்...?
அந்தக் கொடிய வீரர்கள் போய்விட்டார்கள்.
சீலனின் சிந்தையிலே ஆயிரம் வினாக்கள் எழுந்தன.
தொடரும்

● பாங்க்ஊழியர்கள் ஒன்றும் குழந்தை எவ்வளவு சாக்லேட் கொடுத்தாலும் போதாது என்பதுபோல் அடம்பிடிக்கவில்லை. ஒப்பந்தப் படி. 1973—ஆம் ஆண்டிலேயே கொடுத்திருக்கப்பட வேண்டிய ஊதிய மாற்றம் (wage Revision) என்ற சாக்லேட்டைத்தான் கேட்கின்றோம். ஐந்து ஆண்டுகள் பொறுத்துப் பார்த்த குழந்தை அடம் பிடிக்காதா?

மேலும், பஞ்சப் படியினை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கும் கோரிக்கைகளை ஏற்ற அரசு தற்பொழுது வாங்கும் ஊதியத்தினை விடக் குறைவான ஊதியம் கிடைக்கும் வழியையே காட்டுகிறது. மிட்டா அவர்களே! கையிலிருக்கும் மிட்டாய்க்கே ஆபத்து என்ற நிலையில் எப்படிப் போராடாமல் இருக்க முடியும்?

எங்கள் கோரிக்கை நியாயமானது; பேராசையின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல.

விருதுநகர் சசிசேகரன்



● இன்றைய வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை மனத்தில் வைத்துக் கொண்டல் மிட்டா கூறும் வார்த்தைகள் மிக அருமை.

செங்கோட்டை ஏ. ஷேக் முகம்மது

● தி. மு. க.வினர் ஜனவரி 26ம்தேதியன்று ஏன் இந்தியை எதிர்த்துத் துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டும் என்று கேட்பவர்களுக்கு உங்கள் பதில் ''சவுக்கடியாக'' அமையும். உங்களைப் போன்று பத்து இதழ் ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் இருந்தால் ''தமிழன் தன் மானத்தைக் காத்துக்கொண்டு அதே நேரத்தில் பாரதத்தின் ஒருமைப்பாட்டையும் கடைப்பிடிப்பான்'' என்பது உறுதி.

ஐயங்கார்குளம் ரஜினி சிவகுமார்

● எம். ஜி. ஆரைத் தர்ம சங்கடத்தில் எப்படி நிறுத்துகிறது என்பது ஒன்றுதான் குறிக்கோள் என்றால் துக்கதினம் அனுஷ்டிக்கக் குடியரசுத் திருநாளைவிட வேறு நல்ல நாள் கிடையாது.

சென்னை—17 எஸ். வி. எஸ்.

● முத்துராமனுக்கு நூறு நாள் விழாவை ''ப்ரியா'' நிறைவேற்றி வைப்பாளா? என்று எழுதியுள்ளது தவறு. எங்கள் ஊரான மதுரையில் ''மயங்குகிறாள் ஒரு மாது'', ''மோகம் முப்பது வருஷம்'' நூறுநாள் ஓடி அதற்குரிய விழாவில் டைரக்டர் முத்துராமன் கலந்து கொண்டார்.

மதுரை—9 எஸ். பாலகிருஷ்ணன்

● பானுமதி பாஸ்கரன் சுஜாதாவின் கதைகளில் ஆங்கில வாடையே வீசுவதாகத் தெரிவிக்கிறார். தற்சமயம் ஆனந்த விகடனில் 'கரையெல்லாம் செண்பகப்பூ' கதையில் நாட்டுப் பாடல்களுடன் கிராமிய மணம் கமழ சுஜாதா எழுதி வருவதை இவர் படிக்கவில்லையென்றே கருதுகிறேன்.

ஆடுதுறை . லக்ஷ்மிவாசன்

● அறிவொளியால் இருள் அகற்றிய டாக்டர் அருண்டேல் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அரசியல், ஆன்மீகம், இலக்கியம் முதலிய துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய அருண்டேல் போன்றவர்கள் பற்றிக் 'கல்கி'யில் வெளியாகும் இது போன்ற கட்டுரைகள் முந்தைய தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் பாலமாக அமையும்.

திருநெல்வேலி பாரத்வாஜன்

● ''ஆசியப் போட்டிகளில் ஆறுவது இடம்'' மிகுந்த துடிதுடிப்புக் கொண்ட கட்டுரை. இதற்கென வெளியிட்டிருந்த புகைப் படம் கவனத்தை ஈர்த்திழுக்கும் சக்தி வாய்ந்தது. அபாரமாக விளையாடி ஆசியப் போட்டியில் ஆறுவது இடத்தைப் பெற்ற இந்திய அணியினருக்கு நமது இதயம் நிரம்பிய வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

சென்னை—7 எஸ். ராஜேந்திரன்

● வெறும் வார்த்தைப் பந்தலுக்கும், வருணனைகளுக்கும் இடம் அளிக்காமல் தமக்கே உரிய சமூகக் கண்ணோட்டத்துடன் மனித மனத்தின் ஆழத்தில் பதுங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை வெளிக்கொணர்வதில் வல்லுநர் ஜெயகாந்தன்.

வெறும் 'கதை' பண்ணாமல் கதைகளின் மூலம் சமூக நியாய அநியாயங்களை நம்முன் வைக்கும் ஒருசில தமிழ் எழுத்தாளர்களுள் அவர் ஒருவர். கல்கியில் அவர் எழுதப்போகும் தொடர்கதையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

கும்மிடிப்பூண்டி வி. ந. ஸ்ரீதரன்

● 'மும்முனைகள்' தொடர் ஆரம்பமே வெகுவாக ஆவலைத் தூண்டுகிறது. சத்யா, பரீட்சை ரிசல்டைத் தெரிவிக்கும்போது நடக்கும் சம்பாஷணையைப் படிக்கும்போது, சிரித்து வயிறு புண்ணாகி விட்டது. 'கல்பனா'வின் ஓவியங்களைக் கண்ணை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறது.

சென்னை—5 எம். ஏ. சவுக்கத்



கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 7

நாகேஸ்வரராவ் பார்க்கில் சத்யா ஸ்கூட்டரைக் கொண்டு போய் நிறுத்தியபோது, பிரமீளா கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான்தான் ஐந்து நிமிஷம் முன்பாகவே வந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தால் நீ அதற்கு முன்பே வந்துட்டியே'' என்றான் சத்யா.

''பார்த்து நாலைந்து நாளாகிவிட்டது இல்லையா? என் மனத்தின் வேகத்துக்கு ஏற்பக் கடிகாரம் ஓட மாட்டேன் என்கிறது!''

''எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கு தெரியுமா? டூ யூ ரியலி லவ் மீ ஸோ மச்?'' என்று கேட்டான் சத்யா.

''உங்களுக்கு ஏன் அதில் சந்தேகம் தோன்றுகிறது?'' என்றாள் பிரமீளா.

''சந்தேகமில்லே. ஆனால் நீ சொல்லிக் கேட்கிறதிலே ஒரு திருப்தி. சொல்லு!''

''இப்படி நடுத்தெருவிலும் பார்க்கிலுமாக நின்று கொண்டு என் காதலின் ஆழத்தை வர்ணித்துக்கொண்டிருக்க முடியுமா? கோலம் ரெஸ்டாரண்ட் அல்லது புளு ஸ்டார் போகலாம். டிம் லைட்ஸ், லைட் மியூஸிக், இன்டிமேட் சூழல், ஹாட் ஸூப் இவற்றுக்கு இடையில் பேசலாம்.''

''கன்னிமரா ஓட்டலாவது கத்தரிக்காயாவது? எங்காவது டீக்கடையில் நுழைந்து ஸிங்கிள் டீயும் ஒரு பொறையும் வாங்கி ஆளுக்குப் பாதியா எடுத்துக்கலாம்'' என்றான் சத்யா ஏக்கத்துடன். ''இப்ப என் அப்பா எனக்குத் தர சம்பளத்துக்கு அதுக்கு மேல் கட்டிவராது. காலேஜிலே படிக்கிறச்சே எனக்குக் கிடைத்த பாக்கெட் மணி கூட இப்போதைய என் சம்பளத்தை விட அதிகம்!'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

சிரித்து விட்டாள் பிரமீளா. கூடவே, ''கோவிச்சுக்காதீங்க. உண்மையில் ரொம்பப் பரிதாபமா இருக்கு உங்களைப் பார்க்க. எனக்கு எல்லாம் விவரமாச் சொல்லுங்க'' என்றாள். பிறகு ''டீக்கடையும் வேண்டாம், புளு ஸ்டாரும் வேண்டாம். பெட்ரோல் பங்க் ஐஸ்கிரீம் ஸ்டால்லே ஆளுக்கு ஒரு டிரிங்க் வாங்கி ஸிப் பண்ணிக் கொண்டே பேசலாம்'' என்றாள்.

''ஓகே'' என்றான் சத்யா. ஸ்கூட்டர் சக்கரங்கள் சுழன்றன. இரண்டு கிலோமீட்டரைக் கடந்து நின்றன.

''என்ன சாப்பிடறே? கோல்ட் ஸ்பாட்டா? 77ஆ?'' என்றான்.

''நீங்க என்ன சாப்பிடறீங்களோ அது தான் எனக்கும்'' என்றாள்.

''அழகுதான், 'உமன்ஸ் லிப்' பற்றிக் கொட்டி முழக்கறே. நான் என்ன சாப்பிடுகிறேனோ அதையேதான் நீயும் சாப்பிடுவேன்னு என்ன அர்த்தம்?''

''நீங்க எதைச் சாப்பிடறீங்களோ அதையே விரும்பிச் சாப்பிடும் சுதந்திரம் எனக்கும் வேணும்னு அர்த்தம்!''

''மை காட்'' என்றான். ''அடுத்தாற்போல் அடிமைப்படுவதற்குச் சுதந்திரம் வேண்டும் என்பாய் போலிருக்கே?''

''ஒய் நாட்?'' என்றாள் பிங்கி. ''கணவன் மனைவியை அடிமைப் படுத்தக் கூடாது என்று உரிமை பேசுவோம். ஆனால் அதே நேரத்தில் ஒருத்தி கணவனிடம் அடிமைப்பட விரும்பிக் கணவனும் அடிமைப்படுத்த விரும்பினால் யார் தடுக்க முடியும்?''

''கொஞ்சம் இரு. லிம்காவோடு எலுமிச்சம் பழமும் தனியாக் கிடைக்குமா விசாரிச்சுக்கிட்டு வரேன். தலையில் தேய்த்துக் கொண்டால் தெளிவு பிறக்கலாம்'' என்று கூறி விட்டுச் சென்றான் சத்யா.

லிம்காவுடன் மட்டும் திரும்பி வந்தான். ''எலுமிச்சம் பழத்துக்கு ரொம்பக் கிராக்கியாம். கிடைக்கிறதே இல்லையாம். உமன்ஸ் லிப் பற்றி எல்லோரும் ஏகமா பேசப்போக எலுமிச்சம் பழத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டுப் போச்சு போலிருக்கு'' என்றான்.

பிங்கி சிரித்துக் கொண்டே, ''அது இருக்கட்டும். நான் சுற்றி வளைக்காமல்

பிளண்டா பேசறேன். கோபப்படாதீங்க. உங்க தகப்பனார் உங்களுக்குச் சம்பளம் குறைவா தருவதற்காக நீங்க வருத்தப்படக் கூடாது. கம்பெனியே உங்களுடையதுதானே? நாளைக்கு நீங்கதானே முழுப் பொறுப்பும் ஏற்கணும்? எடுத்த எடுப்பிலேயே பெரிய பதவியும் சம்பளமும் வேண்டாம்னு அவர் யோசித்திருப்பார், நியாயம்தானே? ஆனால் ஒன்று. உங்களிடம் அவர் இதுபற்றித் தெளிவாக மனம்விட்டுப் பேசியிருக்கலாம். உங்களுக்கு நிம்மதி பிறந்திருக்கும்.''

''அது மட்டுமில்லே பிங்கி! அவர் நடந்துக்கற விதமே அலாதியா இருக்கு. வீட்டிலே அன்பைப் பொழியறார். ஆபீஸிலே எரிந்து விழுறார். சின்னத் தப்பு நேர்ந்தாலும் எல்லாரிடமும் சத்தம் போடுகிற மாதிரியே என்னிடமும் நடந்து கொள்கிறார். அருள்ராஜ் தான் எனக்கு எல்லாம் கற்றுத்தர வேண்டும் என்று ஏற்பாடு. அவன் என்னை விரட்டு விரட்டு என்று விரட்டுகிறான். என்னைக்கேட்டால் அப்பா என்னை வீட்டிலே சத்தம் போட்டுப் பேசித் திட்டினால் கூடப் பாதகமில்லை; ஆபீஸிலே எனக்கு மரியாதை கொடுத்து, நல்ல பதவியில் வைத்துக் கௌரவமா நடத்தணும்னு விரும்பறேன்.''

''உங்க வேதனை எனக்குப் புரியறது'' என்றாள் பிரமீளா. ''ஆனால் அதே நேரத்தில் உங்க அப்பாவின் போக்கு முழுக்க முழுக்கத் தவறு என்றும் என்னால் எண்ண முடியவில்லை. நீங்கள் எல்லாம் நல்லதுக்குத்தான் என்று எண்ணித் தைரியமாக இருக்கணும்.''

''என் கதை இருக்கட்டும்'' என்றான் சத்யா. ''நீ உன்னைப்பற்றிச் சொல்லு. கிராமத்தில் சோஷியல் சர்வீஸ் காம்பிலே என்ன பிரசாரம் பண்ணினே? உன்னோட பெல்பாட்டையும், ஷர்ட்டையும், ஸ்கார்ஃபையும், கோகோ கிளாஸையும் பார்க்கும்போது இவளாவது சமூகத் தொண்டாற்றவாவது என்று தான் எவருக்கும் தோன்றும். கிரிஸ்டியன் டயார் ஸெண்ட் வேறு கமகமக்கிறதே!''

''எனக்கு மாடர்னு உடுத்திக்கப் பிடிக்கும். அதற்கு வசதியும் இருக்கு. ஏன் உடுத்திக் கொள்ளக் கூடாது? அதே சமயம் நான் இந்தத் தேசத்தின் ஏழைப் பெண்களை, அறியாமையில் உழல்கின்றவர்களை எண்ணிப் பார்க்கிறேன். என்னால் முடிந்த வரை அவர்களுக்கு உதவ நினைக்கிறேன். இதில் என்ன முரண்பாட்டினைக் காண்கிறீர்கள்?''

''நான் எதையும் காணலே. கண்ணை மூடிக் கொண்டு விடுகிறேன். சரிதானா?'' என்றான். மறுபடி, ''கிராமத்தில் பெண்களிடம் என்ன சொன்னே? குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையா?'' என்று கேட்டான்.

''அதன் அவசியத்தை எடுத்துக் கூறியதோடு அறுவைச் சிகிச்சைக்கு உடன்பட வேண்டாம் என்றும் பெண்களைக் கேட்டுக் கொண்டேன்.''

''அழகுதான்! குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிற கதையாக இருக்கிறதே, நீ சொல்வது?''

''அப்படியில்லை சத்யா! கேளுங்கள். அறுவைச் சிகிச்சைக்கு உடன்படுகிற பெண்களில் நாலாயிரம்பேரில் ஒருவர் இறந்துவிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுகிற ஆண்களில் லட்சத்தில் ஒருவர்தான் இறந்து போவதற்கு வாய்ப்பு. அவ்வாறிருக்கும் போது ஏன் பெண்கள் இந்தக் கொடுமைக்கு உள்ளாக வேண்டும்? ஆண்களுக்கு நடக்கும் அறுவைச் சிகிச்சை மிகமிக எளிதானது. ஆனால் தாங்கள் ஆண்மை இழந்து விடுவோம் என்று அசட்டுத் தனமாக எண்ணிக் கொண்டு மனைவியரை வற்புறுத்துகின்றனர். இதுபெண்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதி என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.''

''ஆண்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மிக எளிதாகக் கெட்டுப் போய் விடுவார்கள் என்று பல பெண்கள் நம்புவதும் உண்டல்லவா? இதனால் கணவனை இதற்கு உட்பட வேண்டாம் என்று கூறி விட்டுத் தாங்களே அறுவைச் சிகிச்சைக்குத் தயாராகிற பெண்கள் இருக்கிறார்கள் இல்லையா?''

''இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் 'கணவன் கெட்டுப் போவதென்றால் எப்படியானாலும் கெட்டுப்போகத்தான் செய்வான். மனோதிடம் தான் முக்கியம். கணவ



னிடம் மனைவிடத்தை வளர்ப்பது போல் மனைவி நடந்து கொள்ளவேண்டும்'' என்று எடுத்துச் சொல்லி வருகிறேன்.''

''ஒப்புக் கொள்கிறார்களா?''.

''கிராமப்புறங்களில் எளிய பெண்கள் என் வாதத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பட்டணத்து நாகரிகம் பட்டுவிட்ட பலர் மிண்டலான குதர்க்க வாதம் பண்ணுவார்கள். 'உன் கழுத்திலே தாலியைக் காணோமே! உனக்கே கல்யாணமாகலே. நீ புருஷனை எப்படிக் கட்டிக் காக்கிறதுன்னு எங்கிட்டே பேச வந்துட்டியே' என்பார்கள்.''

''நியாயம்தானே? சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிடு, பிங்கி!''

''நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துச் சொல்லுங்கள்.''

''பார்த்து ரெடியா வைச்சிருக்கேன். காலம் கனிய வேண்டியதுதான்'' என்றான்.

இருவரும் ஒருவரையொருவர் பளபளக்கும் கண்களால் பார்த்துக் கொண்டார்கள். பார்வைகள் மருவி முயங்கிய போது ஏதோ இனம் புரியாததொரு ரசாயனச் சேர்க்கை ஏற்பட்டு அதனால் சூழ்நிலை தண்ணென்றாகி விட அவர்கள் சிலிர்ப்புடன் கதகதப்பு நாடி நெருங்கி வந்தனர்.

அத்தியாயம் 8

''ஸார்! ஸார்!'' என்று வீட்டு வாசலில் குரல் கேட்டபோது கலோசனுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. குரல் தீபக்கினுடையது என்பது அவனுக்குப் புரிந்ததுதான் காரணம். அடுத்த வினாடி உடம்பெல்லாம் ஒரு கிளுகிளுப்புப் பரவியது. ஒரு பக்கம் மனம் பதை பதைக்க இன்னொரு புறம் ஆனந்த பரவசமாகி ஓர் இரண்டுங் கெட்டான் நிலையில் ஓடிச் சென்று கதவைத் திறந்தான்.

''வாங்க, உட்காருங்க!'' என்றான்.

''அப்பா இருக்காரா?'' என்றான் புன்னகையுடன்.

''இருக்கிறார், குளிக்கிறார். இப்ப வந்துடு



முன் கதைச் சுருக்கம்

சத்தியா - பிரமீளா இளம் காதலர்கள். பெண்கள் சமுகத்திலும் பரிபூரண சுதந்திரம் பெற்றுச் செயல்பட வேண்டும் என்ற கோட்பாட்டினைக் கொண்ட உமன்ஸ் லிபரேஷன் இயக்கத்தில் பிரமீளா தீவிர நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருகிறவள். சத்யா கல்லூரிப் படிப்பிலிருந்து விடுதலை பெற்று ஏற்ற மிகு எதிர்காலத்தை எதிர்பார்க்கும் ஆவல் துடிப்புள்ள இளைஞன்.

சத்யாவின் தகப்பனார் வைத்தியலிங்கம் அகிலா எண்டர்பிரைஸஸ் என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் முதலாளி. அங்கு தொழிலாளர் தலைவராக விளங்கிய வைரவன் திடீரென்று இறந்து போனதில் அவர் வருத்தமும் நிறுவனத்தின் எதிர்காலம்பற்றிக் கவலையும் அடைந்திருக்கிறார். அங்கு நீண்டகாலமாக விசுவாசத்துடன் பணியாற்றி வந்துள்ள அருள்ராஜின் மகன் தீபக் பால் நாளடைவில் மருந்துகள் உற்பத்திப் பிரிவுக்குத் தலைமை ஏற்க, தம் மகன் நிர்வாகப் பொறுப்புக்களைப் படிப்படியாக ஏற்க வேண்டும் என்று அவர் திட்டம்.

சத்யாவுக்குத் தன் தகப்பனார் உருவாக்கிய கம்பெனியைக் கட்டிக் காப்பதில் சம்மதம்தான். ஆனால் அவர், மகனை எடுத்த எடுப்பிலேயே உயர்ந்த பதவியில் வைக்காமல் முதலில் தொழில் பழக அருள் ராஜுக்குக் கீழ் பணியாற்றச் சொல்லிக் குறைந்த ஊதியமும் தருகிறார். இது சத்யாவுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. தான் சிறுமைப் படுத்தப் பட்டதாக ஓர் எண்ணத்துடன் அவன் நண்பன் ஆனந்தைக் காணச் செல்கிறான். பெரும் செல்வந்தனான ஆனந்த் தனது பாச்லர் ஃபிளாட்டில் நித்யா எனும் ஒரு கால் கேர்ளுடன் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிறான்.

சத்யாவுக்கும் போலியான மகிழ்ச்சியை ஊட்டப் பார்க்கிறான் ஆனந்த். சத்யா வெறுப்படைந்து வெளியேறித் தன் காதலி பிங்கியைச் சந்திக்க முயல்கிறான். அவள் சமூகப் பணியாற்ற ஒரு கிராமத்துக்குப்போய் முகாமிட்டிருக்கிறாள் என அறிந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறான்.

சில தினங்களுக்குப் பிறகு காரியாலயத்தைப் பொறுத்த மட்டில் தனக்கு ஏற்பட்டு வரும் ஏமாற்றங்களை வீட்டில் தகப்பனாரிடமும் தாயாரிடமும் தங்கை சுலோசனாவிடமும் வெளியிடும் வாய்ப்பு கிடைக்கிறது சத்யாவுக்கு. அதே இரவு பிரமீளாவும் சமூகப்பணி முகாம் முடிந்து சென்னை திரும்பி அவனுடன் போனில் பேசுகிறாள். ஓரளவு மனப்பாரம் குறைந்து அவன் படுக்கச் செல்கையில் போன் மணி ஒலிக்கிறது. "அது எனக்குத் தான்" என்று கூவிக் கொண்டு ஓடி வருகிறாள் அவன் தங்கை சுலோ. ரிஸீவரை அவனிடம் தருகிறான். ஆனால் அதற்கு முன்பு மறுபுறம் ஒலித்த குரல் தீபக் பாலினுடையது என்று அடையாளம் கண்டு கொள்கிறான் சத்யா. வேற்று மதத்தவனை அதிலும் அந்தஸ்தில் சாமானியனான அருள்ராஜின் மகனைத் தன் தங்கை காதலிப்பதால் ஏற்படக்கூடிய பிரச்னைகளை அசை போடுகிறது சத்யாவின் மனம்.

◆◆◆

வார்" என்றாள் சுலோசனா. "ஏதாவது விசேஷம் உண்டா, கவலைப்படும்படியாக?" என்று அவள் கண்களே அவனைக் கேட்டன.

"பயப்படவேண்டாம்" என்றும் அமைதி காக்குமாறும் தீபக் பாலின் கண்கள் அபயம் அளித்தன.

"இதோ காப்பி கொண்டு வருகிறேன்" என்று கூறிச் சென்ற சுலோசனா திரும்பி வந்த போது, வைத்தியலிங்கம் தீபக் பாலிடம் பேச ஆரம்பித்திருந்தார். "என்னப்பா தீபக்! உன் மனசை மாத்திக்கிட்டையா இல்லையா?" என்று கேட்டார்.

"ஸாரி ஸார்! நான் அந்த விஷயமாப் பேச வரலே. அப்பாவிடம் ஏதோ முக்கிய ஃபைல் ஸ்டடி பண்ணணும். 'அப்டு டேட் பண்ணிக் காலையில் சீக்கிரமா அனுப்பி வை' என்று சொன்னீங்களாம். அதைத்தான் எடுத்து வந்தேன்."

"ஓ! அந்த அலைட் கெமிகல் டிஸ்டிரிபியூட்டர்ஸ் சமாசாரமா? கரெக்ட். இங்கே வைச்சுடு. நான் ஆபீஸுக்கு வரும்போதே ஒரு நோட்டம் பாத்துட்டு வந்துட்டேன்னா அவங்க வரும்போது பேசச் சௌகரியமா இருக்கும்."

"ஓகே ஸார், நான் வரட்டுமா?"

"காப்பி காப்பி!" என்று ஞாபகப்படுத்தினாள் சுலோசனா. குரலில் தொனித்த ஒரு பதற்றத்தை வைத்தியலிங்கம் கவனிக்கத் தவறவில்லை.

"ஆமாம், காப்பி!" என்று தயங்கினான் தீபக்.

"சாப்பிடுப்பா, சாப்பிடு! இவ போடற காப்பி என் கம்பெனியிலே தயாராகிற பினாயிலை விட ருசியாத் தான் இருக்கும்" என்றார் வைத்தியலிங்கம்.

"நான் ஒண்ணும் போடலே, அம்மாதான் கலந்து கொடுத்தா" என்றாள் சுலோசனா கோபமாக.

தீபக் கண்களை மூடிக்கொண்டு ஒரே மூச்சில் 'மடக்மடக்' கென்று குடித்துவிட்டுக் கப்-ஸாஸரை மேஜை மேல் வைத்தான். "ஒரேயடியா பயமுறுத்திட்டீங்க ஸார்! காப்பி நல்ல டேஸ்டா இருக்கு. நிதானமா சாப்பிட்டிருப்பேன்" என்றான்.

வைத்தியலிங்கம் சுலோசனா பக்கம் திரும்பி, "இப்ப சொல்லு, காப்பி போட்டது யார்? நீயா? அம்மாவா?" என்றார். அவள் முகம் ஜிவ்வென்று சூடேறிச் சிவந்ததை ரசித்தார். பிறகு தீபக் பக்கம் திரும்பி, "எப்பவாவது உன் மனசு மாறித்துன்னா என் நிறுவனத்துலே உனக்கு வேலை தயாராகக் காத்திருக்கு. ஞாபகம் வைச்சுக்க" என்றார்.

"ரொம்ப நன்றி, ஸார்!"

"எதுக்கு நன்றி? தீபக்! உன் அப்பாவுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன். இன்று என் நிறுவனம் பெரிசா வளர்ந்து போச்சு. ஆனா ஆரம்ப நாளிலே இராப்பகலா அவர் என்னோடு சேர்ந்து உழைச்சிருக்கார். அப்போதெல்லாம் மருந்து தயாரிக்கிறதும் நாங்கதான், டெஸ்ட் பண்ணறதும் நாங்கதான்! பாக்கிங்கும் நாங்கதான், கடை கடையா கொண்டுபோய் விநியோகித்ததும் நாங்க இருவரேதான். அப்படி உழைச்சிருக்கோம். அது சரி, நீ ஏன் என்னிடம் வேலை ஏற்றுக் கொள்ளத் தயங்கறே? சம்பளம் போறாதுன்னா? எடுத்த எடுப்பிலேயே உன்னைப் பெரிய நிலையில் வைத்தால் வீண் பொறாமை வளரும். இப்போதைக்குச் சேர்ந்துடு. மானிபாக்சரிங் ஸைட்லே சீக்கிரமே டாப் பொஸிஷனுக்கு நீ உயர்ந்துடலாம்."


ராஜூவின் வலிமை
ராஜூவும் சங்கரும் மலையேறும் போது...
டேய் பொட்டை, போ வேகமா
ராஜூவை அடிக்கடி உதைக்கிறான் சங்கர்.
ஆ! போதும், விடுடா பாவி.
சாப்பிட அமருகின்றனர்
மறக்கவே கூடாது நியுட்ராமுல்
ராஜூவை, வெட்டித் தள்ள முயலும் சங்கர் சரிந்து விழுகிறான்
பத்திரம்
ஐயோ! காப்பாத்து!
பிடியை விடாதே. தூக்கி விடறேன்.
வெட்கித் தலை குனிகிறான் சங்கர்
தாங்க்ஸ்! ஏதுடா இத்தனை பலம் உனக்கு?
இந்தா ஒரு கப் நியுட்ராமுல்.
ராஜூவின் பாடு குஷி. வேளாவேளை நியுட்ராமுல். ஆரோக்கியமான இன்சுவைப் பானம். அமுல் படைப்பான நியுட்ராமுல். ஆடைமயமான பால், அசல் கோக்கோ, மால்ட், சர்க்கரை... நாலும் கலந்த போஷாக்குக் கலவை. விலையோ அதிசயம், மலிவோ மலிவு! 500 கிராம் நியுட்ராமுல் ரூ. 12.21 தான், தல வரிகள், மத்திய விற்பனை வரி, சரக்குக் கட்டணம் யாவும் தனி.
ராஜூ, சங்கர் போல் நாடெங்கும் ஆயிரமாயிரம் பேர் ரசிக்கும் அன்றாடப் பானம் நியுட்ராமுல்.
அமுல் படைப்பு
நியுட்ராமுல்
பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்!
daCunha/N 3R TAM

அரசியல் புதுமொழிகள்

1. பேசத் தெரியாத அரசியல்வாதி மைக் ஒட்டை என்றானும்!

2. பொதுத் தேர்தலில் ஜெயிக்காதவன் இடைத் தேர்தலில்தான் ஜெயிக்கப் போறானுக்கும்!

3. ஆளுங்கட்சி தேய்ந்து எதிர்க்கட்சி ஆளும் போல.

4. எட்டாத பதவிக்குக் கொட்டாவி விட்டாப்பலே.

5. கட்சியிலே ஒரு கால், கவர்மென்ட்லே ஒரு கால். - கே. ஆர். எம்.

''ஸார்! என்னை மன்னிக்கணும். நீங்க இவ்வளவு அன்பா பேசும்போது மறுப்ப தற்கே எனக்கு வெட்கமாயிருக்கு! ஆனா...''

''எனக்குப் புரியுது, புரியுது! எனக்குக் கீழே வேலை செய்ய உனக்கு இஷ்டம்தான். ஆனால் எத்தனை நாளைக்குன்னு யோசிக்கறே. சீக்கிரமே சத்யா என் நிலைக்கு வந்துடுவான். நான் ரிடையர் ஆயிடுவேன். அப்போ அவன் கீழ் நீ வேலை செய்யும்படி இருக்கும். அது சரிப்பட்டு வருமான்னு யோசிக்கறே!''

''ஐ ஆம் ஸாரி ஸார். எனக்குப் பொய் பேச வராது. பாதி காரணத்தைக் கரெக்டா கண்டு பிடிச்சுட்டீங்க.''

''அப்பா! நீங்க என்ன ஜோதிட சாஸ்திரம் படிச்சிருக்கீங்களா? இல்லே, நீங்க மைண்ட் ரீடரா?'' என்று கவோசனு கேட்டான்.

''இப்ப உன் மனசிலே என்னை நினைச்சுக் கிட்டு இருக்கே சொல்லட்டுமா? பாதி கார ணத்தைத் தீபக் சொன்னான். பாக்கி பாதிக் காரணம் உன் மனசிலே இருக்கு! அதைச் சொல்லட்டுமா?'' என்று வைத்தியலிங்கம் கேட்கச் கலோ திடுக்கிட்டுத் தயங்கினான்.

அதற்குள், ''ஐயோ! வேண்டாம், வேண் டாம்!'' என்று தீபக் குறுக்கிட்டான்.

''இவ மனசிலே இருக்கிறதை நான் கண்டு பிடிக்கிறேன்னு சொன்னா அதுக்கு நீ ஏம்பா இப்படிப் பயப்படறே?'' என்றார் வைத்திய லிங்கம்.

''பயம் ஒண்ணுமில்லே ஸார். நீங்க அப்பா வும் பொண்ணும் தனியே இருக்கும்போது பேசிக்கலாமே. மூன்றாவது மனுஷன் ஒருத்தன் எதிரே மனம் விட்டுப் பேசுவானேன் என்று தான்.''

''நீ இப்படி சொல்றதுக்காக நான் ரொம்ப வருத்தப்படறேன் தீபக். உன் அப்பா வையோ உன்னையோ நான் எப்போதுமே வேற்று மனுஷங்களா நினைத்ததில்லே. அத னால் இப்பவும் மனம் விட்டுச் சொல்றேன். கேட்டுக்க. என் மகன் சத்யாவுக்கு நான் ரொம்பவும் செல்லம் கொடுத்து வளர்த்துட் டேன். இப்போ அதற்காக வருத்தப்பட றேன். அவனிடம் பொறுப்புணர்ச்சியை வளர்க்க ஆசைப்படறேன். எதிர்காலத்திலே அகர்னி எண்டர்பிரைஸஸ்ஸைக் கட்டிக் காக்கவேண்டியவன் அவன்தானே? அதனாலே உன் அப்பாவிடம் அவனை டிரெய்னிங்குக்கு விட்டிருக்கேன். நீயும் வந்து சேர்ந்துண்டா எனக்கு எதிர்காலம் பற்றிய கவலையே இல்லாதிருக்கும். தப்பித் தவறி சத்யா தவ றான வழியில் போனால் நீ கவனிச்சுத் திருத் தலாம் இல்லையா?''

''நான் திருத்தினால் அவன் அதைச் சரியான விதத்திலே எடுத்துக்கணுமே ஸார்?''

''எடுத்துப்பான். அடிப்படையிலே அவன் ரொம்ப நல்லவன்தான். அதனாலேயே அவன் கண்ட கண்டவர்கள் யோசனைகளைக் கேட்டு வீணாகிவிடாதிருக்க வேண்டுமே என்று எனக் குக் கவலையா இருக்கு. அவன் ரொம்ப நல்ல வன்கிறதினாலே அவனிடம் ஒரு பாதிப்பைச் சுலபமா ஏற்படுத்தலாம். அப்படி பாதிப்பை ஏற்படுத்தறவங்க சரியான ஆசாமியா இல் லாத போனா ரொம்ப ஆபத்துத்தான்.''

இச்சமயம் உள்ளேயிருந்து வரவேற்பு அறைக்குள் நுழைந்தான் சத்யா. அவன் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந் தானா, இல்லையா என்பதை அவன் முகத்தைப் பார்த்து அனுமானிக்கமுடியவில்லை. ''அப்பா! நீங்க இன்னும் ஆபீஸுக்குக் கிளம்பலியா? மணி எட்டே முக்கால். லேட் பண்ணாதீங்க. நாம் மற்றவங்களுக்கு ஒரு முன் உதாரணமா நடந்துக்கணும்'' என்றான். இதை அவன் நல்ல மனத்துடன் இயல்பாகச் சொன்னானா, அல்லது தன் அப்பாவையே மறைமுகமாய்க் கிண்டல் பண்ணுகிற நோக்கில் சொன்னானா என்பதையும் கணிக்க முடியவில்லை.

ஷூவை மாட்டிக்கொண்டு, ''போயிட்டு வரேன்'' என்று கூறியவன், அப்போதுதான் தீபக்கைப் பார்த்ததுபோல் சட்டென்று நின் றான். ''அடேடே தீபக்! நானே உன்னைப் பார்க்க வரலாம்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்! உன்னைத் தனிமையில் சந்திச்சுப் புத்தி சொல் லரம்னு இருந்தேன். இங்கேயே நீ வந் திருக்கே. சரி, இப்ப அதுக்கு டயம் இல்லே. சாயந்திரமோ நாளைக்கோ மீட் பண்ணலாம். உன்னுடைய நண்பன் என்கிற முறையிலே உன்னுடைய நலனுக்காக உனக்குப் புத்திமதி சொல்லி நான் எச்சரிக்கணும். அது என் கடமை'' என்று கூறிவிட்டுப் படியிறங்கி ஸ்கூட்டரைக் கிளப்பினான். ஸ்கூட்டர் போட்ட ஓசையையும் மீறிய ஒரு கனத்த நிசப்தம் வரவேற்பு அறையில் ஓங்கி ஒலித்தது! (தொடரும்)

உடலில் ஸ்வெட்டர், தலையில் முண்டாசு, கையில் குறுந்தடி. 'எப்படி வேஷம்?' கேட்டது ராஜன்.

''கூர்க்கா தோற்றுன் போங்கள்!'' மனைவியின் நொடிப்பு.

''சரி பெட்ரோலிங் டியூட்டி போகுமுன் வயிற்றுக்கும் சிறிது பெட்ரோல் சப்ளை பண்ணு!''

''சமோட்டும் வேலைக்கு வேறு கேடு. திருடனைப் பிடிக்கிறீங்களோ இல்லையோ குடம் மட காலியாகிறது.''

''மனிதன் ரோந்து சுற்றி 'சா'கிறுன். ஒரு தரம் 'சா' கேட்டால் இத்தனை பூசலா?''

''அடியே மல்லிகா, ஊரெல்லாம் கெட்டுக் கிடக்கிறது. தினம் டெகாயிட்டித் தொல்லை. நாளைக்கு நம்ப வீட்டு நகையெல்லாம் கொண்டு போய் ஒரு பாங்கு லாக்கரில் வைத்துவிட்டு வா...''

''கோஹினூர் தட்டுக் கெட்டுப் போகிறது...''

''உன் கல்யாணத்துக்கென்று வைத்திருக்கிற நகை, ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டாமோ?'' — அம்மாவின் கவலை.

பாங்கு ஹாலின் மூலையில் கண்ணாடி அறை.

''மானேஜர் ஸார், எனக்கு ஒரு லாக்கர் வேண்டும்!'' மல்லிகாவின் கவர்ச்சிக் குரல் அவரது கண்களை லெட்ஜரின் எண்களிலிருந்து நிமிர்த்தியது.

''லாக்கரா? இனி மேக்கர் வந்தால்தான் முடியும்?''

''என்ன ஸார் ஜோக்கரா?''

''இல்லையம்மா ஊரெல்லாம் திருட்டுப் பயம். லாக்கர்களுக்கு அடித்தது யோகம்; போட்டி போட்டுக் கொண்டு க்யூவில் நின்று எடுத்துக் கொண்டு விட்டனர்.''

''நான் நான்கு வருஷமாக இங்கு எஸ். பி அக்கவுண்ட் வைத்திருக்கும் க்ளையண்ட்...''

''ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒவ்வொருவர் ஐயாயிரம், பத்தாயிரம் ஃபிக்ஸட் டெபாஸிட் தருகிறேன் என்று முன்வந்து எடுத்துக் கொண்டு விட்டனர்...''

''ஓஹோ இதிலே கூட லஞ்சமா?''

''நாங்கள் கேட்கவில்லை, அவர்கள் தருகிறார்கள். நீ முன்னால் வந்திருந்தால் உனக்கும் தந்திருப்போம்.''

''சினிமாத் தியேட்டரில் போடுவது போல லாக்கர் ப்றி 'ஹவுஸ் ஃபுல்' போர்டு போடுவதுதானே?'' மல்லிகா வெடித்தாள்.



''இந்த ஹாஸ்யத்தை நான் ரஸிக்கிறேன்'' என்று அக்கவுண்டெண்ட் மோகன் அருகில் வந்தான். கரன்ஸி நோட்டு எண்ணும் காஷியர் போல அவளது அழகை அளந்தன அவனது கண்கள். மல்லிகா திரும்பி வந்த செக் மாதிரி துவண்டு திரும்பினாள்.

''மிஸ் உங்களைமாதிரி நளினமான ஒரு கிளையண்ட் திரும்பிப் போவதை நாங்கள் விரும்பவில்லை. ஸார், லாக்கர் 808 சாவி தொலைந்து உடைத்தோம் அல்லவா? அது ரிப்பேர் ஆகி புதுச்சாவி வந்துவிட்டது. இவங்களுக்கு அலாட் பண்ணலாமே?''

அவளது கண்கள் ஆயிரம் நன்றிகள் கூறின.

''நான் வேண்டுமானால் ஐயாயிரம் ரூபாய் எப். டி. போடுகிறேன். எனது கல்யாணத்துக்காக வரதட்சிணைக்குச் சேமித்தது...''

''நாங்கள் வற்புறுத்தவில்லை. உங்கள் இஷ்டம். ஆனால் வரதட்சிணை செலுத்தித்தான் உங்கள் திருமணம் ஆகவேண்டும் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை...''

''மிஸ்டர், முடியாவிட்டால் டைஜஷனுக்கு ஏதாவது மருந்து சாப்பிடுங்கள். அதிகப் பேச்சு வேண்டாம்.'' அவளது கண்கள் மைனஸ் என்ட்ரி போலச் சிவந்தன.

லாக்கர் சாவி கைமாறியது. ஆனால் அவள் எழில் முகம் பேரேட்டில் பதிந்தது போல, அவனது உள்ளத்தில் தங்கிவிட்டது.

''அடியே மங்களா இன்று பெண் பார்க்க வருகிறார்கள். ஆபீஸிலிருந்து பர்மிஷன் வாங்கிக் கொண்டு வரும்போது லாக்கரிலிருந்து நகைகளை எடுத்துவா...''

அம்மாவின் கட்டளைக்கு இணங்கத் திரும்புகையில் மல்லிகா வங்கியை நெருங்கினாள்.

டோக்கன் சிரிப்புடன் மோகன் அவளை வரவேற்றான்.

''என்ன ஸார் எல்லாரும் வெளியே கூட்டமா நிக்கிறீங்க...''

''அதுவா, இன்னைக்கு பாங்கில இரண்டு மணி நேரம் வெளி நடப்புச் செய்து இருக்கிறோம்...''

''அடகடவுளே; எனக்கு லாக்கர் திறக்க வேண்டுமே?''

''நோ டிரான்ஸாக்ஷன்ஸ்; இரண்டு மணி கழித்து வாருங்கள்.''

''முடியாது ஸார்; எனக்கு அவசரமாக எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைய வேண்டும். திடீர் ஸ்டிரைக் செய்து வாடிக்கையாளரை வருத்தப்பட வைக்கிறீர்களே?''

''மிஸ், மன்னித்துக் கொள்ளுங்கள். லாக்கர் சாவிகள் இருக்கிற பீரோவைப் பூட்டிக் கொண்டு கிளார்க் வெளியே வந்துவிட்டார்.''

''ரெடிகுலஸ். அவரை லாக்கர் அறையில் வைத்துப் பூட்ட! இப்போது என்ன ஸார் செய்வது? என்னைப் பெண் பார்க்க யாரோ வருகிறார்கள். வெறுங் கழுத்துடன் நிற்க முடியுமா?''

''உண்மையிலேயே வருந்துகிறேன். ஆனால் நகைகள் இல்லை என்பதற்காக உங்கள் அழகு குறையப் போவதில்லை. யாரே அழகுக்கு அணி செய்வார்...''

''மிஸ்டர்! ஷட் அப். உங்கள் விமரிசனம் நேயர் விருப்பமல்ல!'' ரெகரிங் டெபாஸிட்டில் பணம் கூடுவது போல, கோபத்திலும் அவளது அழகு அதிகமாயிற்று.

'இதற்கு தேசிய மயம்வேறு' என்று சபித்துவிட்டுச் சலிப்புடன் மல்லிகா நடந்தாள். பாங்கில் பணம் கட்டச் சென்ற வியாபாரி பையைப் பறிகொடுத்துப் பரிதவிப்பதுபோல், அவள் மனம் உளைந்து போனாள்.

''ஸார்!''

கதவைத் திறந்த மல்லிகா மோகனைக் கண்டு கணம் திகைத்தாலும் முறுவலித்து நின்றாள். 'கிப்ட் செக்' பெற்ற மணமகள் போல் முகத்தில் மகிழ்ச்சி. எழுதிய செக்கில் கையெழுத்துப் போட மறந்த கதையாக, 'வாருங்கள்!' சொல்ல நினைவின்றி 'அப்பா' என்று உள்ளே ஓடினாள்.

''யாரது?'' என்று வந்த ராஜனும் மோகனைக் கண்டு பிரமித்து நின்றார். பிறகு சமாளித்தபடி ''அடேடே நம்ம ரோந்துப் பிரண்டு.. வாங்க ஸார்'' என்று வரவேற்றார். ஓ. டி. பெற்ற வியாபாரியைப் போல் சந்தோஷம் குரலில் கலந்திருந்தது.

''இவர்தான் அப்பா லாக்கர் தந்தவர்; நேற்று வாக்கவுட் செய்தவர்.''

''அதற்கு மன்னிப்புக் கோரவே வந்தேன். உங்களுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம்!''

''அதுவும் நல்லதாகப் போயிற்று. இவன் நேற்றுத் திரும்பும்போது ஒரு ஜேப்படித்

நாம் இழைக்கும் துன்பங்களும்
நமக்கு இழைக்கப் படும் துன்பங்களும்
ஒரே தராசில் நிறுக்கப்படுவதில்லை!

— கிரீஸ் பழமொழி

— சக்திகமலை



திருடன் இவளது கைப்பையைக் கீறி பர்ஸ் எடுத்து விட்டான். நகை எடுக்காமல் வந்தது நல்ல காலம்.''

டார்ஜட் டெபாஸிட் சேர்த்துவிட்ட பாங்கு மானேஜர் போல் மோகன் பெரு மூச்சு விட்டான்.

''பிள்ளையைப் பெற்றவர்கள் கழுத்தையும் காதையும் பார்த்தார்கள். விஷயத்தை விளக்கியபோது சகுனமாகவில்லை என்று போய் விட்டார்கள்.''

''கவலைப்படாதீர்கள். நான் வேண்டுமானால் வேறு வரன்கள் கூறுகிறேன். எங்கள் பாங்கு காலேஜில் டிரெயினிங்கிற்குப் பிரும்மச்சாரிகள் வருகிறார்களே...''

காப்பியைக் கொண்டு வைத்து விட்டு மல்லிகா கதவோரம் நளினத்துடன் நின்றாள். புதுமாப்பிள்ளையின் தோரணையுடன் மோகன் நோக்கினான். அவளும் நோக்கினாள். நகை எதற்கு, புன்னகை போதாதா? பதுமை உண்டியலைத் திறந்த குழந்தையின் ஒப்பற்ற சந்தோஷத்தைப் போல அவ்விரண்டு உள்ளத்திலும் மகிழ்ச்சி பரவியது.

''என்ன இங்கு வாங்கோ?''

வழக்கத்துக்கு அடிமைப்பட்டு ராஜன் உள்ளே நகர்ந்தார்.

''ரோந்து பிரண்டு அது இது என்கிறீர்களே, பாங்கில் வேலையாக இருக்கிறான், மரியாதை தெரிந்த பிள்ளை. கையிலே காஷ் வைத்துக் கொண்டு பாங்கு லோன் போடுவார்களா? சும்மா நிற்கிறேனே, குலம், கோத்திரம், விசாரியுங்கள். நீங்க ரோந்து சுத்தத்தான் லாயக்கு. திருடனைப் பிடிக்காவிட்டாலும் மாப்பிள்ளையைப் பிடியுங்கோ..'' அவரை வார்த்தைகளால் ஒரு பிடி பிடித்து விட்டாள்.

அதற்குப் பிறகு அந்த ஹாலில் எத்தனையோ சம்பாஷணை; கலகலப்பு. மோகனின் தகப்பனார் ராஜனுக்குப் பால்ய சிநேகிதர்! ஷார்ட்டேஜ் பணம் கண்டுபிடித்த காஷியர் போல அவர் முகத்தில் குதூகலம். மல்லிகா வெட்கம் தாங்காமல், கணக்கர் பெட்டிக்குள் அடங்கிய கரன்ஸிக் கத்தைபோல், உள்ளே சென்று அமைதியாக நின்றாள்.

ஒரு மாதத்தில் கல்யாணம் குதிர்ந்து விட்டது. திருட்டுப் பயமும் நீங்கி விட்டது. லாக்கரிலிருந்து நகையைப் போட்டுக் கொண்டு மல்லிகா மணப்பெண்ணாக வளைய வந்தாள்.

''மாப்பிள்ளே, பிக்ஸட் டெபாஸிட் எவ்வளவு போட வேண்டும்?''

''பெண்ணையே என்னிடம் நிரந்தர டெபாஸிட்டு செய்து விட்டபிறகு எப். டி. எதற்கு ஸார்...?''

அதற்குப் பிறகு மல்லிகா பாதுகாப்பு பெட்டகத்தைத் தேடவில்லை. அவளே அவனது காதல் பெட்டகம். 'டாலி'யான லெட்ஜர் போல அவர்கள் மனம் ஒருமித்து நின்றது.

''கிராஸ்டு டிமாண்ட் டிராப்டு போல ஒரு காபிடல் மாப்பிள்ளையைப் பிடித்து இருக்கிறீர்களே ராஜன், எப்படி?'' என்று ஒரு நண்பர் பாராட்டினார்.


''அதுவா? லாக்கரில் விளைந்த 'வெட்-லாக்' இது!'' என்று அகமகிழ்ந்தார் ராஜன்!

கிரிக்கெட் கற்கலாம்! 20

கோச்:
கே. சந்திரசேகர்

படம்: ராஜ்.. தயாரிப்பு: குண்டுமணி

ஆரம்ப பந்து வீச்சாளர்கள் சுருள் அல்லது வேகப்பந்து வீச்சுக்கு முதலிலேயே இறங்கக் கூடாது. இதனால் ஆரம்ப நிலையிலேயே பல தவறுகள் இழைக்கக் கூடும்.



வாலிபத்தின் பார்வைகள்

வாஸந்தி



அவனுக்கு இலேசாக எரிச்சல் வந்தது.

''எதுக்குத் துருவித் துருவிக் கேக்கறேள்? உங்களுக்கு என்மேலே நம்பிக்கையில்லையா?'' அவன் குரலில் அவனுடைய எரிச்சல் தொனித்தது.

அப்பா வாயிலிருந்த சிகரெட்டை எடுத்துச் சாவதானமாக ஆஷ் ட்ரேயில் ஒரு தட்டுத் தட்டினார்.

''ஆமாம் எனக்குத் தெரிஞ்சாகணும். இந்த மாஸம் இது எத்தினியாவது சினிமா?''

அவன் பேசாமல் இருந்தான். மனசுக்குள் ஆறுவது என்று சொல்லிக் கொண்டான்.

''ஏன் கேள்வி கேட்டா பதில்லே? இது நாலாவதா இல்லையா?''

அவன் எரிச்சலை அடக்கிக் கொண்டு ''ஆமாம்'' என்றான்.

''இப்படியே பார்த்துண்டிருந்தா படிப்பு என்ன ஆறது?''

''நான் படிப்பிலே சரியாத்தானே இருக்கேன்?''

''அது தலைகீழாப் போயிடும், இந்த மாதிரி சினிமாப் பார்த்தா.''

ஓர் அல்ப சினிமாவுக்காக இவரிடம் இப்படிக் கெஞ்ச வேண்டியிருக்கிறதே என்று அவனுள் ஓர் ஆத்திரம் ஏற்பட்டது.

''இந்த ஒரு சினிமாத்தான் இந்த மாஸம். இனிமே இல்லே.''

அப்பா நிர்தாட்சண்யமாகத் தலையை ஆட்டினார், சிகரெட்டை ஓர் இழுப்பு இழுத்துக் கொண்டே.

அவன் ஆத்திரத்துடன் அங்கிருந்து நகர்ந்தான். தன் அறைக்குப் போய் மேஜை மேலிருந்த புத்தகங்களை வேண்டுமென்றே சத்தத்துடன் நகர்த்தினான்.

எனக்குப் பதினேழு வயசு. 'ஐ ஆம் நாட் எ கிட்' என்று சொல்லிக் கொண்டான். டோன்ட் ட்ரீட் மீ லைக் எ கிட், டாமிட்!'

டெலிபோன் மணி ஒலித்தது. அவன் நகராமல் உட்கார்ந்திருந்தான்.

''ராமு! உனக்கு ஃபோன்!'' என்று அப்பா வரவேற்பறையிலிருந்து கத்தினார்.

அவன் எழுந்திருந்தான்.

''ஹல்லோ!''

''சேகர் ஹியர்!''

''சொல்லு!''

''ஏண்டா வரல்லியா?''

''இல்லே!''

''ஏன் பர்மிஷன் கிடைக்கல்லியா?''

''ஊஹூம்.''

''வாட் எ பிட்டி!''

''......''

''ஓ. கே. பேபி. பார்த்துட்டு வந்து கதை சொல்றேம். அழாதே.''

அவன் பேசாமல் ஒரு லேசான சீற்றத்துடன் ரிஸீவரை டக்கென்று வைத்துவிட்டுத் தன் அறைக்கு நடந்தான். அறைக்குள் நுழைந்து தாழ் போட்டுக் கொண்டான். சேகரின் குரலில் இருந்த பரிகாசம் நினைவில் நின்றது. அவனும் மற்றவர்களும் எப்படி நினைத்தபோது சினிமா கிளம்புகிறார்கள்? புஹாரியில் நினைத்ததைச் சாப்பிடுகிறார்கள். அவர்களுடைய அப்பா அம்மாக்கள் 'அண்டர் ஸ்டாண்டிங் டைப்'பாக இருக்க வேண்டும்... வாலிபம் என்பது சொற்ப காலம்தான் இருக்கும் என்று புரிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும்...

'யு ஹேவ் ஹேட் இனஃப்...!'

'அப்பா, நீங்க இப்படிச் சொல்லலாமா? உங்களுக்கு ஏதாவது உங்கள் தேவைகள் இனஃப் என்று தோன்றுகிறதா? போதும் என்கிற திருப்தி ஏற்படுகிறதா? இத்தனை சிகரெட்டுகள் தான் ஊதவேண்டும் என்கிற நியதி வைத்திருக்கிறீர்களா? சினிமா பார்ப்பதில் கணக்கு வைத்திருக்கிறீர்களா?' எண்ணங்கள் கட்டு



மீறிப் போகிறது என்று அவனே உணர்ந்தவனைப் பாடப் புத்தகங்களைப் பிரித்தான். வரிகள் நெளி நெளியாய் ஓடின. மனசு அதில் பதிய மறுத்தது. ஆத்திரத்தில் உருவான ஆயிரம் சிந்தனைகள். அவன் மறுபடியும் தன் சிந்தனைகளை இழுத்துப் பிடித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

'உன் படிப்பு தலைகீழாய்ப் போய்விடும்' என்று அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'ஆமாம் நீங்கள் இப்படி கட்டுப்பாடுகளை அதிகரித்துக் கொண்டே போனால் எல்லாமே தலைகீழாய்த்தான் போகும்' என்று நினைத்துக் கொண்டான்.

இரவு அம்மா சாப்பிடக் கூப்பிட்டதும் அவன் இயந்திரமாகச் சாப்பிடப் போனான். அப்பா சகஜமாக இருக்க முயன்றார். அவன் அதிகம் பேசாமலேயே சாப்பிட்டுவிட்டு எழுந்தான். சினிமாவுக்குப் போகாதது எப்பொழுதோ சமாதானமாகி விருந்தது. இருந்தும் சகஜமாகப் பேசி அதைக் காண்பித்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு வீம்பு தடுத்தது.

அவன் மறுபடியும் புத்தகங்களுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த போது அறை வாசலில் அம்மா வந்து நின்றாள். வெளியில் போகிற மாதிரி அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். இலேசாக பர்ஃப்யூம் நெடி வந்தது.

''நாங்க வெளியிலே போயிட்டு வரோம் ராமு'' என்றாள்.

இந்த நேரத்தில் வெளியிலே என்றால் சினிமா. நைட்ஷோ. அவன் பேசாமல் இருந்தான்.

''வெளியிலே பூட்டிண்டு போறோம். நீ படிச்சப்புறம் படுத்துண்டு தூங்கு.''

அவன் பதில் சொல்லவில்லை.

''என்ன சரியா?''

''சரி.''

வெளியில் பூட்டுப் போடப்படும் சத்தமும் கேட்டது.

அவனுக்கு இனம் புரியாத ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டன. தன்னைப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டு இவர்கள் கிளம்புவது கொஞ்சமும் நியாயமில்லை என்று தோன்றிற்று. அவன் புத்தகங்களை மூடினான். பாட்டி வீட்டில் இருக்கிறாள் என்கிற உணர்வோடு கதவைத் தாழிட்டுக் கொண்டான். அலமாரியில் புத்தகங்களுக்கு அடியில் ஒளித்து வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு உறிஞ்சினான். ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டான். புகை வளையங்கள் மேலே மேலே எழும்பு கையில் அப்பாவைப் பழி தீர்த்துக் கொண்ட திருப்தி ஏற்பட்டது. 'நீங்கள் என்னை அடக்க அடக்க நான் திமிறிக் கொண்டு தான் போவேன். உங்களுக்குத் தனி ரூல்ஸோ?' என்று மனசு பொருமிற்று. அவன் சிகரெட் குடித்த பின் அதன் நுனியைப் பத்திரமாக ஒரு காகிதத்தில் சுருட்டி ஜன்னல் வழியே எறிந்தான்.

மறுநாள் காலேஜில் நுழையும்போதே சேகரும் மற்றவர்களும் பிடித்துக் கொண்டார்கள்.

அன்று மாலை அவன் வீட்டுக்கு வந்தபோது அம்மா வீட்டில் இல்லை. கடைக்குப் போயிருந்தாள். பாட்டி கொடுத்த டிபனை வாசல் வராந்தாவுக்கே எடுத்துக்கொண்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான். அவனுக்குக் காப்பியைக் கலந்து கொடுத்துப் பாட்டியும் வாசல் குறட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஏண்டாப்பா, நன்னா படிச்சிண்டிருக்கியோல்லியோ?''

அவன் ஒருவித அசிரத்தையுடன் ஒரு பத்திரிகையில் முகத்தைப் பதித்தபடி 'உம்உம்' என்று பாட்டிக்குப் பதில் சொன்னான்.


அவன் அசிரத்தையைப் பாட்டி லட்சியம் செய்யவில்லை.

''நன்னா படிடாப்பா... உங்கப்பாவாலேதான் பெரிய படிப்பு படிக்க முடியல்லே. அது அவனுக்குப் பெரிய குறை...''

அவன் சற்றே பத்திரிகையைத் தாழ்த்திப் பாட்டியைப் பார்த்தான். வற்றின அந்தச் சிவந்த உடம்பில் கண்கள் மட்டும் தீர்க்கமாய் இருந்த மாதிரி இருந்தது. நெற்றியில் ஒரு கீற்று திருநீறு. பழைய சின்னாளம்பட்டிப் புடவை. தனக்காக டிரெஸ் செய்து கொள்ளும் அப்பாவின் அம்மா இது என்று நம்ப முடியவில்லை.

பாட்டி பேசிக் கொண்டே போனாள், சுவரைப் பார்த்து... தெருவில் வருவோர் போவோரைப் பார்த்து.

''அவனுக்குச் சரியா பதினேழு வயசு, அவன் அப்பா செத்துப்போறபோது. அவன்தான் மூத்த பிள்ளே. பி. எஸ்ஸி. சேர்ந்திருக்கான். இவருக்கு மாரடைப்பு வந்துடுத்து. சாகற



''நீ குடியிருக்கிற வீட்டுக்கு உங்கப்பா மாத வாடகை நூறு தருகிறார். ஒரு வருஷத்திற்கு எவ்வளவு தருவார்?''
''முந்நூறு ரூபாய்''
''என்னடாது உனக்குக் கணக்குத் தெரியலையே?''
''எங்கப்பாவைப் பற்றி உங்களுக்குத் தெரியலையே சார்!''

துக்கு முன்னாலே இவன் கையைப் புடிச்சுண்டு அவர் அழுதார். 'என்னடா கிருஷ்ணா உங்கிட்ட இவனையும், நாலு பெண்கள், மூணு பிள்ளைகளையும் ஒப்படைச்சுட்டுப் போறேனே! நான் என்ன பண்ணட்டும்'னு அழுதார். 'நான் இருக்கேம்ப்பா. நீங்க கவலைப்படாதேங்கோ'ன்னான் குழந்தை. இப்ப கண்ணெதிர்க்க நிக்கறது நேக்கு...''

பாட்டி முப்பது வருஷத்து நினைவில் அமிழ்ந்து கண்ணீர் விட்டாள்.

''படிப்புப் பாதியிலேயே நின்னு போச்சு. சொன்ன சொல்லை எப்படியாவது நிறைவேத்தணும்கற வெறியிலே என்னென்னவோ வேலை பார்த்தான். ஆண்டவனோட அருளும் சேர்ந்தது. படிப்படியா வேலை உசந்தது. அத்தனை தங்கைகள் தம்பிகளையும் படிக்க வெச்சுக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான். நா ஒண்ணுமே செய்யலியேங்கிறமாதிரி சிரிச்சுண்டு இப்ப நிக்கறான்...''


பத்திரிகையில் கவனம் போகாமல் அவன் பாட்டியின் பேச்சைக் கேட்டபடி உட்கார்ந்திருந்தான். பாட்டியின் கண்கள் பளபளத்தன. முகத்தில் மந்தஹாஸம் தெரிந்தது.

''இப்ப சிகரெட் குடிக்கறானே இவ்வளவு சினிமாப் போறானேன்னு பாக்காதே. கடமையை முடிச்ச திருப்தியிலே அவன் இப்போ சித்தே நிம்மதியா இருக்கான். நீ நன்னா தலையெடுக்கணும். அவன் படிக்க முடியாத பெரிய படிப்பைப் படிச்சுப் பாஸ் பண்ணணும். அப்பத்தான் அவனுக்குப் பூரண நிம்மதி.''

பாட்டி இதையெல்லாம் யதேச்சையாகச் சொன்னாளா எதையேனும் அனுமானித்துச் சொன்னாளா என்று புரியாமல் அவன் வெகு நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

அன்று இரவு டி. வி. பார்க்கையில் அவன் அப்பாவைக் கவனித்தான். கண்களில் சிரிப்பு இருந்தாலும் முகத்தில் கோடுகள் தெரிந்தன. அனுபவக் கோடுகள்... அடிபட்ட கோடுகள். சாயம் பூசியிருந்த மயிரில் பின்புறம் சொட்டை தெரிந்தது.

வாஸ்தவத்தில் இவர் வாலிபத்தையே அனுபவித்ததில்லை என்று தோன்றிற்று. அதை ஒரு வேள்விக்கு அர்ப்பணித்தவர் என்று தோன்றிற்று. இழந்த வாலிபத்தை இப்போது நினைவுபடுத்திப் பார்க்கிறார் என்றும் புரிந்தது. அறையின் இலேசான இருட்டில் அவர் இரகஸியமாக அம்மாவின் கைகளை வருடியபடி ஏதோ பேசுவதை அவன் கவனிக்காத மாதிரி உட்கார்ந்திருந்தான். ஒன்பது மணிக்கு அவன் அறையைத் தாளிட்டுக் கொண்டபோது இவர் மேல் கோபப்படவோ அசூயைப் படவோ தனக்கு ஏதும் அருகதையில்லை என்கிற உணர்வு தாக்குகையில் அவன் ஒருவித நிச்சலனத்தோடு பாடப் புத்தகங்களைப் பிரித்து வைத்துக் கொண்டான்.



நன்கு புலர்ந்தது காலை — கதிர்
நின்று சிரித்தது மேலே!
ஒன்றும் புரிந்திட வில்லை — எங்கும்
சென்று வலம்வரும் காற்றே

வற்றி இருந்தது முன்பு — பின்னர்
சுற்றி அடித்தது! ஆகா!...
வெற்றி அடைந்தவர் போலே — மரம்
இற்றுக் கழன்றது மேலே!

எங்கும் பறவைகள் ஓசை — எழும்
கன்றுக் கதிரவன் தன்னை

மங்கும் முகிலினம் மெல்ல — வந்து
பங்கு பிரித்திடும் நேரம்!

அந்திப் பொழுதினைப் போலே — இருள்
வந்து கவிழ்ந்தது எங்கும்!
'சிந்து படித்திடும் தவளை' — அந்தச்
சந்தக் கவிதையைக் கேட்டு

வெட்டிப் பிளந்தது மின்னல் — இடி
தட்டி மகிழ்ந்தது வானம்!
கொட்டிக் களித்தது தூறல் — மழைப்
பட்டுக் குளிர்ந்தது பூமி!

கவிஞர் நா.வீ.பா. கட்டபொம்மன்


கண்களில் மை, மங்களமாய் நெற்றிக்
குங்குமம், பின்னிய கூந்தலில் செவ்வந்தி;
பேரழகு மேனிக்கோ பொர்க்கினி சிற்றுடை, விமல் சீர்வரிசை...
விமல் படைப்பு:
பொர்க்கினி
கோவார்டினேட்ஸ்
VIMAL
A RELIANCE PRODUCT
பொர்க்கினி
கோவார்டினேட்ஸ்
கண்ணுக்குக் கவர்ச்சி,
கட்டழகு மலர்ச்சி!

மினி மர்மத் தொடர்கதை

நரிக்கொம்பு

④

கிருஷ்ணவேணி

சாதலனின் மறைவினால் உணர்ச்சி வசப்பட்டுக் குபீரென்று பொங்கி வழிந்த அழுகையை, அதேபோலச் சடேரென்று சமாளித்து நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் நந்தினி. அழுகையினால் அடைபட்ட நாசியைச் சின்னக் கைக்குட்டையால் துடைத்து நேராக்கிக்கொண்டாள். ''சாரி!... ஐ யாம் ஆல் ரைட் நௌ!'' என்று ஹரியிடம் கூறினாள். ஹரி அந்த இளமை கொழிக்கும் எழிலுருவை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ரமேஷுடன் எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று காத்திருந்தவள் இந்த நந்தினி? இந்த இழப்பை எந்தப் பெண்ணால்தான் தாங்க முடியும்?

நந்தினியின் விரல் மேஜைமீது கோலமிட்டது. குனிந்தபடியே கூறினாள். ''ஹரி... என்னால் நம்பவே முடியவில்லை — ரமேஷின் விதவை மனைவியைப் பற்றி.''

அவளிடமிருந்து இந்தக் கேள்விக்காகத்தான் காத்திருந்தான் ஹரி.

''இதில் நம்பிக்கைப் படாததற்கு ஏதுமே இல்லை. கல்கத்தா அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்து விட்டேன். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் அநீதாவை மணந்து கொண்டானாம் ரமேஷ். ரயில் பிரயாணத்தின்போது அவளும் உடன் இருந்திருக்கிறாள்.''

பளீரென்று அடிபட்டவள் போல அதிர்ந்து போய் நிமிர்ந்தாள். ''எனக்கெழுதிய ஒரு கடிதத்திலாவது ரமேஷ் அநீதாவைப் பற்றிக் குறிப்பிடவில்லையே'' என்றாள்.

''எனக்கும்தான் ஏதும் எழுதவில்லை இவளைப்பற்றி.''

''என்னையே மணந்து கொள்ளுவதாக வாக்களித்திருந்தார் ரமேஷ்.'' ஹரியைப் பார்க்காமலேயே இதை அவள் கூறினாள். ஆனால் ஹரி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இருபது வயதில் இத்தனை எழிலும் இளமையும் ஏற்றமுமாக எவள் இருப்பாள்?' என்று எண்ணமிட்டது அவன் மனம்.

''ஹரி... அந்தப் பெண் அநீதாவை ரமேஷ் மணந்து கொண்டிருப்பார் என்பதை நம்புகிறீர்களா நீங்கள்?''

''ஒருமுறைக்கு இரு முறையாக இவ்விஷயத்தை விசாரித்து உறுதி செய்து கொண்டேன். அநீதா அவன் மனைவியானது உண்மை என்பது உறுதியான பிறகு நம்பித்தானே ஆக வேண்டும்?''

''உண்மைகள்... உறுதி! நாம் அறிந்த நம்மால் நேசிக்கப்பட்ட ஒருவருக்குப் பொருந்தாத உணர்வுகள் இவ்வித உண்மைகள்...''

சர்வர் சிற்றுண்டிகளைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான். நந்தினி அதைப் புசிக்கும் நிலையில் இல்லை. ''ரமேஷ் அநீதாவை மணந்து கொண்டிருப்பாரானால் அது பலவந்தத் திருமணமாகத்தானிருக்க வேண்டும்'' என்றாள். அவள் உள்ளத் தவிப்பு உதட்டின் துடிப்பில் தெரிந்தது.

''துப்பாக்கி முனையில் நடந்திருக்கும் திருமணம் என்கிறாயா?''

நந்தினியின் முகம் சிவந்தது. ''நான் அப்படிச் சொல்லவில்லை. துப்பாக்கி இல்லாமல் வேறு முறைகளுமிருக்கிறதே பலவந்தத்துக்கு'' என்றாள்.

''அது விஷயமாகவும் நான் விசாரித்து விட்டேன் நந்தினி. இது பதிவுத்திருமணம். ரிஜிஸ்தரார் முன்னிலையில் இவர்களைத் தவிர வேறு யாருமே கிடையாது போதுமா?''

நந்தினி ஹரியைத் துளைப்பது போலப் பார்த்தாள். ''ஹரி, நீங்கள் என்னைச் சின்னக் குழந்தையாகவே நினைக்கிறீர்கள் இல்லையா? நீங்களும் உங்கள் விசாரிப்புக்களும் அவை தந்த உண்மைகளும், ரமேஷின் மணமும்—'' மேலே பேச முடியாமல் உணர்ச்சிவசப்பட்டுத் தடுமாறினாள். ''என்னால் ருசுப்பிக்க முடியாமலிருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும். ரமேஷ் என்னிடம் உயிரையே வைத்திருந்தார். என்னையே மணந்து கொள்ளுவதாக இருந்தார். இது வெறுமே வார்த்தைகளாலான உறுதி மொழியல்ல. காதல் வயப்பட்ட உள்ளங்களால்தான் அந்த உறுதியின் தன்மையை உணர முடியும்.''

''உண்மைதான்...'' அவள் உணர்ச்சிகளை ஆமோதித்தான் ஹரி.

''உங்கள் ஆமோதிப்புத் தேவையில்லை!'' அந்தச் சிங்காரியின் முகம் ஜிவுஜிவுத்தது. முன்னாலிருந்த உணவுத் தட்டை நகர்த்தி விட்டு விருட்டென்று எழுந்தாள் நந்தினி. அதே வேகத்துடன் வெளியேறினாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் ஹரி. தன் பேச்சு அவளை ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கலாம். உள்ளமெல்லாம் நிறைந்தவனை இழந்த வேதனையை அந்த ஆத்திரம் தணிக்குமானால் நல்லது தானே. நந்தினியைச் சமாதானப்படுத்த அவனால் முடியாது. அவளைத் தவிர வேறு எவராலுமே முடியாது.

அந்தத் தந்தியை அடுத்து விவரமான கடிதம் ஒன்று வந்திருந்தது ஹரிக்கு. அநீதாவும் அவள் சித்தப்பாவும் எப்போது வருகிறார்கள், எங்கே சந்திக்க வேண்டும் என்ற தகவல்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன்படி ஹரி அவர்களைச் சந்திக்கக் கிளம்பினான். அவர்கள் தங்கி இருந்த ஹோட்டல் அறையின் கதவை முஷ்டியாக்கிய தனது விரல்களினால் தட்டியபோது ''யாரது?'' என்ற குரல் உள்ளிருந்து கேட்டது. மிருதுவான ஆண்குரல்.

''என் பெயர் ஹரிஹர். ரமேஷின் நண்பன்.''

கதவு திறந்தது. அங்கே சிறுகூடாகக் குழந்தை முகத்துடன் ஒருவர் நின்று

கொண்டிருந்தார். வட்ட முகம். குட்டை யான உருவம்.

''உள்ளே வாருங்கள்'' என்று வரவேற்றார். நான்தான் அநீதாவின் சித்தப்பா'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஹரி உள்ளே நுழைந்தான். அங்கே, கூடத் தில் ஒரு பெண் ஸோபாவின் கைப்பிடியில் முகம் கவிழ்ந்தபடி அமர்ந்திருந்தாள். பேச்சுக் குரல் கேட்டுத் தலைநிமிரவில்லை. சந்தனக் கட்டையில் கடைந்தெடுத்த கவர்ச்சிக் கன் னியைப் போன்றிருந்தாள் அந்தப்பெண். நாகரீகமாகத் தலைமுடியைக் குட்டையாகக் கத்தரித்து விட்டிருந்தாள். சற்றே செம்மை யிட்டிருந்தது குழல். விந்தெடிக் ஃபைபரினு லான ஆடை அந்த உடலினால் அழகுபெற்றது. இடையில் வங்காளிகள் வழக்கப்படி சிங்கார வேலைப்பாடு செய்யப்பட்ட சாவிக் கொத்துப் போன்றதோர் அணியைச் செருகிக் கொண் டிருந்தாள். அது தங்கத்தினால் செய்து உயர்ந்த கற்களைக் கொண்டு இழைக்கப்பட் டிருந்தது.

ஹரியின் பின்னாலேயே தொடர்ந்துவந்த அந்தப் பெரியவர் முகம் கவிழ்ந்து படுத் திருக்கும் பெண்ணைப் பார்த்துக் கைகளைப் பரத்தி ''ரொம்பப் பரிதாபம், ரொம்பப் பரி தாபம்!'' என்றார்.

ஹரி அவரைத் திரும்பிப் பார்த்தான். அவள்தான் அநீதாவாக இருக்க வேண்டும். அவள் சித்தப்பாவான அந்தச் சின்னமனி தரின் கண்களைப் பார்த்தான். அவர் குரலைப் போலவே அவர் விழிகள் மிருதுவாக ஆனால் ஒருவித ஜ்வலிப்புடன் பளபளத்தன. மியூசி யத்தில் பாடம் செய்யப்பட்டு வைத்திருக்கும் குள்ள நரியின் கண்களைப் போன்றிருந்தது. நரியின் முகம் நினைவுக்கு வருவானேன்?... நரை முடி கலந்த அடர்த்தி இல்லாத தலை முடி. ஆனால் அதற்கு நேர்மாறாகப் புருவங் களில் கருகருவென்று அடர்த்தியான மயிர். தாமிர வண்ண உடல். எத்தனை வயது என் பதை நிர்ணயிக்க முடியாத கட்டுமஸ்தான தேகம் அவருடையது.

''அந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது நீங்களும் ரமேஷுடன் பிரயாணம் செய்தீர்களா?'' என்று கேட்டான் ஹரி.

ஜ்வலிக்கும் உருண்டைக் கண்களை மூடித் திறந்த அவர் ''ஆமாம்... ரொம்பப் பரி தாபம், ரொம்பப் பரிதாபம்!'' என்றார்.

ஹரி சட்டென்று அந்தப் பெண்ணினரு கில்போய் ''நீங்கள்தானே அநீதா?'' என்றான்.

''ஆமாம்.''

அவள் அழுது கொண்டிருந்ததாக எண் ணினான் ஹரி. ஆனால் அவள் குரல் கம்ம லின்றிக் கணீரென்று ஒலித்தது. தலையை நிமிர்த்தவில்லை அவள்.

''நான் ரமேஷின் உயிர்த்தோழன். நானும் அவனும் சேர்ந்துதான் வசித்து வந்தோம்.''

இதற்கு அவள் எவ்விதப்பதிலும் கூறவில்லை.

''நானும் ரமேஷும் சிறுவயதுமுதலே ஒன்றாக...''

''தெரியும் அவர் சொல்லி இருக்கிறார்'' நிதானமாகக் கூறினாள் அநீதா. அதேசமயம் அவள் சித்தப்பாவின் குரல் ''ரொம்பப் பரி தாபம், ரொம்பப் பரிதாபம்!'' என்று கிளிப் பிள்ளைப்போல ஒலித்தது.

ஹரிக்கு எரிச்சலாக இருந்தது. ''ஸ்ரீமதி ரமேஷுடன் நான் கொஞ்சம் பேச விரும்பு கிறேன். அனுமதிப்பீர்களா?'' என்றான்.

''ஓ தாராளமாக, தாராளமாக!... பேசுங் களேன்'' என்றார் அந்த மனிதர்.

''அதாவது அவருடன் தனிமையாக!''

அந்த மனிதரின் குழந்தை முகத்தில் வியப்புப் பரவியது. ''குழந்தை அநீதா இந்த நிலையில்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற போது ஹரி ''நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன்'' என்றான்.

சிலவிநாடிகள் மௌனத்திற்குப் பிறகுஅவர் நிதானமாகக் கூறினார் - ''அநீதாவை எடுத்து வளர்த்ததெல்லாம் நான்தான். அவளுடைய எல்லாப் பொறுப்புக்களையும் நான்தான் கவ னித்துக் கொள்ளுகிறேன். என்னிலிருந்து பிரிக்கப்பட முடியாதவள் அநீதா.''

''அப்படியா? அவள் விவாகத்தின்போது நீங்கள் கூட இல்லை போலிருக்கிறதே'' என்றான் ஹரி.

(தொடரும்)





கொசுக்களை விரட்டும்...நிம்மதியான உறக்கம் கிட்டும்.

ஓடோமாஸ் ஒரு பாதுகாப்பு அரண். உங்களை கொசுக்கள் தீண்ட விடாமல் தடுக்கிறது. ஆதலால் இரவு முழுவதும் நீங்கள் தொல்லையின்றி நிம்மதியாக உறங்குகிறீர்கள்! ஓடோமாஸ் உங்கள் சருமத்திற்கும் பாதுகாப்பானது.



நீடித்த
பாதுகாப்புக்கு
மிகவும்
நவீனமான
கோசு விரட்டி.

கொசுக்களின் பகைவன்-பல்சாரா அளிக்கும்

ஓடோமாஸ்

BALSARA பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

CHAITRA-BLS-243 TAM



மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜ உடையார் குடும்பத்துக்கு இன்னமும் சலாம் வைத்துக் கொண்டிருக்கிற பௌஜ் தாராகத்தானே இருந்திருக்க முடியும்?

20. கசையடிகள்

இரவு நடுநிசி மௌனத்துவம் புரிகிறது...

காற்று 'சோ'வென்று வீசுகிறது...

சுற்றிலுமாக இருந்த கூடாரங்களுள் எங்கோ சிலவற்றுள் விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருக்கின்றன! நடுவே நடப்பட்டிருந்த நீண்ட கம்பத்தில் பெரிதான தீவட்டி விளக்கு நன்றாகவே ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கிறது.

இராப்பறவைகளின் கோஷங்கள் அவ்வப்போது ஆனந்தமாகவும், அவலமாகவும் ஒலிக்கின்றன.

வழக்கத்துக்கு மாறாகக் காவல் வீரர்கள், மிகவும் குறைந்து காணப்படுகிறார்கள்...

உக்காவை மனம் துய்க்கும் மட்டும் இழுத்துப் புகைத்துவிட்டு வெளியே வந்து, உடம்பை ஒரு முறுக்கு முறுக்கி நிறுத்தி, நின்று கவனிக்கிறார் ஹைதர் அலிகான். வலக்கரத்தின் ஆள்காட்டி விரலால் மூக்கைத் தேய்த்துக் கொண்டே கருநீலப் போர்வையுடன் காணப்பட்ட வானத்தை அண்ணாந்து கவனிக்கிறார்...

குரூரமாக ஆணையிட்ட தமது செயல், எவ்வளவு பவித்திரமற்றது, பரிதாபத்துக்குரியது என்பது அவருக்குப் புரியாமலா இருக்கிறது? ஆயினும் ஒரு தேசநலனை உத்தேசித்து, அரசியல் கட்டுப்பாட்டை எண்ணிச் சிலபல சூதுவாதுகளைச் செய்வதும் அதனதன் பார்வையில், அதனதன் உத்தேசத்தில், அதனதன் பாவ புண்ணியங்களை ஒரு தருமத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயித்துக் கொள்வதாகிறது என்பதை அனுபவரீதியாக — முற்றுமாக உணர்ந்தவராயிற்றே ஹைதர் அலி! அப்படிப் பார்த்திருந்தால், அவர் ரங்கநாயகி விஷயமாக, ஸ்ரீரங்கப் பட்டினத்து அரண்மனையில் என்னவெல்லாம் நடந்திருக்கிறது, நடக்கப் போகிறது என்பதை நினைக்க நினைக்க அவருக்கு மூக்குச் சிவந்து கொண்டிருந்தது. இதனால் அவரது சுதந்திரப் பிரதட்சணத்துக்கே மாசு கண்டு, ஆட்டம் கண்டுவிடுமோ என்றும் அஞ்சினார். அஞ்சுவதற்கே அஞ்சியது அந்த அரிமா!

வானத்திலிருந்து பிரமை போலச் சில சொற்கள் எதிரொலிப்பன போலக் கேட்கின்றன:

'ஆபத்துக்கு அஞ்சாமல் இருப்பது தான் ஆபத்தைக் கடப்பது...'

இரு தினங்களுக்கு முன், ரங்கநாயகி சொன்ன வாசகம்...

ஞான வாசகமோ? அஞ்ஞான வாசகமோ?

அதுகுறித்து அசை போட இதுவல்ல நேரம்...

அவளது வாசகம் இப்போது அவளுக்கே ஆபத்தையுண்டுபண்ணியது.

''அவளது வாசகத்தை அவளிடமே திருப்பித் தந்துவிட்டேன்!'' என்று மனத்துள் முணகியவாறு பின்னங்கை கட்டிக் கொண்டு நடக்கிறார் ஹைதர்அலி.

வெகுதூரம் நடந்தபிறகு ஒருமருங்கே தனித்திருந்த கூடாரத்துள் நுழைகிறார்...

அங்கே...

இன்னொரு ஹைதர்அலி யுருவம் அமர்ந்து அதுவரை நடந்த நிகழ்ச்சிகளின் மேடுபள்ளங்களிலிருந்த பாவ புண்ணியங்களை ஆராய்ந்து கொண்டிருந்தது..

''யாகின்...!''

—ஹைதர்அலியின் கம்பீரக் குரல்!

ஆலோசனையிலிருந்து விடுபட்ட யாகின் கான், அலறியடித்துக் கொண்டு எழுந்து நின்று...

''ஹுஸூர்! நானே அங்கு வரலாம் என்றிருந்தேன்!'' என்று கூறி, மரியாதை நிறைந்த 'சலாம்' இடுகிறான்...

அருகே இருந்த ஆசனமொன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார் ஹைதர் அலி. யாகின்கான் நின்று கொண்டே இருந்தான்.

''யாகின்கான்! ராஜாக்கானிடம் சொல்லி அனுப்பிய ஏற்பாடுகளை எவ்வாறு முடித்தாய் என்பதையறிய, காலைவரை என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அதனால்தான் இந்தப் பாதிராத்திரி வேளையில் செய்தியறிய இங்கே வந்தேன். ஆளையனுப்பி உன்னை அழைத்திருக்கலாம். ஆனால் இந்த ரகசியத்தில் நீயும் சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்பது பின்னால் சந்தேகத்துக்கு இடம் வைத்து விடக்கூடாது. எதையும் நானே தாங்கிக் கொள்வது என்ற முடிவுடன் இந்தக் காரியத்தில் இறங்கி இருப்பதால் நானே வர வேண்டியதாய்விட்டது. என்றுமே அஞ்சியறியாத எனது மனம் இதுபற்றியதில் ரொம்பவும் அலைமோதுகிறது. இப்புகல்தான் என்கிற கர்ஜனை, இந்தத் தென்னகத்தை மட்டும் பயமுறுத்தி வருகிறது. இப்போது என்னையே அது பயமுறுத்தத் தொடங்கிவிட்டது. ஆகவே, காரியத்தை நீயும் ராஜாக்கானுமாகச் சேர்ந்து எப்படி முடித்தீர்கள்? விளக்கமாகச்சொல்! சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டிய விஷயம் இது!''

ஆ! ஹைதர் அலியே இது குறித்து நடு நடுங்குகிறாரே...

அதுவரை அச்செயலை ஒரு கண்டைக் காயை உருட்டுவதுபோல் என்று உணர்ந்து மூன்றிடம் சூட்டியனுப்பி வைத்த யாகின்கான், இப்போது உண்மையிலேயே அதிர்ச்சி கண்டான். இப்புகல்தான் என்கிற வீரநாமதேயம், அவனது பிடரியில் கை வைத்து வியர்வையைத் துடைக்கச் செய்தது.

அவன் மெல்ல விளக்கினான்:

''ஹுஸூர்! என்னுடன் தங்கியிருந்த பசவராஜைக் கட்டிப் போட எனக்குப் பிரமாதமாகத் தெரியவில்லை. அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது, சுருக்குக் கயிற்றால், பின்னி, வாயில் துணிபுதைத்துச் சாரட்டில் கொண்டு போய்ப் போட்டு விட்டோம். ஆனால் மதில்சுவர் போலக் காவலுக்குள்ளிருந்த அந்த ரங்கநாயகியை அழைத்து வரத்தான் வெகுநேரம் யோசிக்க வேண்டியதாய் விட்டது. பிறகுதான் — உங்களைப் போலவே அமைந்த எனதுருவம் நினைவுக்கு வந்தது. உங்களை மாதிரியே அலங்காரம் செய்து கொண்டு ரங்கநாயகி கூடாரம் நோக்கி நானே சென்றேன். காவலர்கள் உங்களுக்குத் தரவேண்டிய மரியாதையை எனக்குத் தந்தார்கள். ரங்கநாயகியும் நம்பி விட்டாள்.''

''நம்'' த்தானே ஆகவேண்டும்? நீ என்னை மாதிரியும் பேசி நடிப்பாயே!''

''உண்மைதான் மகாகல்தான்! முதலில் 'நீங்கள் மகாகல்தானா? அவரது நண்பரா?' என்று எடுத்த எடுப்பில் ரங்கநாயகி கேட்டதும், ஒரு நிமிஷம் அயர்ந்து போனேன். பிறகுதான் உங்களுக்கே உரிய திமிரல் பார்வையில் தோளையசைத்து, தாடியைத் தடவி, ஓர் உறுமலுடன், 'நீ எனது குமாரனின் காதலியானதால் இவ்வாறு கேட்டதற்காக மன்னிக்க நேர்ந்தது. என்னுடன் புறப்படு! என்னை மாதிரியே உருவத்தால் ஒத்திருக்கும் அந்த யாகின்கானை நீ சரியாகக் கவனிக்கவில்லை. ஆகையால் வித்தியாசத்தை உன்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதையும் அறிந்து கொள்ளலாம், அத்துடன் என்னையும் புரிந்து கொள்ளலாம்! எனது குமாரன் விவகாரமாக நிறையப் பேச வேண்டியிருக்கிறது. அங்கேதானே பசவராஜும் இருக்கிறான். அவனுடனும் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது. புறப்படு ரங்கநாயகி!' என்று ஒரு போடு போட்டேன்.''


''பேஷ்! இங்கே அழைத்து வந்ததும் சந்தடி செய்யாமல் கட்டுப்போட்டு அனுப்பி விட்டாய்! இல்லையா?''

''ஆமாம், ஹுஸூர்! இருவரையுமே கட்டிப் போட்டு வாயுள் துணி புதைத்துச் சாரட்டில் அமர்த்தித் தக்க பக்க பாதுகாவலுடன் ரகசியமாகப் பேடனூருக்கு அனுப்பி வைத்து விட்டேன்.''

''பேடனூரல்ல, ஹைதர் நகர்!''

''மன்னிக்கவும் மகாகல்தான்!''

''ராஜாக்கான் எங்கே?''



''கொஞ்சதூரம் வரையில் கூடவே சென்று வழிகாட்டிவிட்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டுச் சென்றிருக்கிறான்.''

''எத்தனை வீரர்களையனுப்பி இருக்கிறாய்?''

''மொத்தம் இருபத்தொரு வீரர்கள். ஒரு மாஜலாஞ்சனையை (முத்திரை மோதிரம்) கொடுத்து அனுப்பியிருக்கிறேன். இவர்களில் பதினெட்டுப் பேர்களை ஹைதர் நகரிலேயே சிறை வைத்துவிட்டு, சாரட்டை ஓட்டிச் சென்றவனும், இரண்டு கபேதார்களும் இங்கு திரும்புவார்கள். அவர்களை நான்

இங்கு தீர்த்துக் கட்ட யுத்தகளம் இருக்கிறது. ஆக இந்த ரகசியம் உங்களுக்கும் எனக்கும், ராஜாக்கானுக்கும் தவிர வேறு யாருக்கும் தெரிய, எங்கும் பரவக் காரணமே இல்லை.''

''சபாஷ், யாகின்கான்! சபாஷ்! உண்மையில் நீ ஒரு ராஜ தந்திரியே! ஒப்புக் கொள்கிறேன். அதற்காக ராஜாக்கானையும் தீர்த்துக் கட்டிவிடப் போகிறாய்!'' என்று குறும்பாகச் சிரித்துக்கொண்டே ஹைதர்அலி கூறுகிறபோது, அவரது குரலில் தொனித்த ராஜதந்திரத்தை ஒருவாறு யாகின்கானால் புரிந்து கொள்ள முடிந்தது.

பேரம்பாக்கத்திலிருந்து வேகமாகப் புறப்பட்ட அந்தச் சாரட்டைப் பின் தொடர்ந்து வெகுதூரம் வரை புரவியில் சென்று கொண்டிருந்தான் ராஜாக்கான் ஏறத்தாழ ஐந்து காவத தூரத்துக்கு; மேலேயே அவன் சென்றிருப்பான். அவ்விதம் அவன் செல்லக் காரணமே இல்லை. அவனது கடமை, சாரட்டை ரகசியப் பாதுகாப்புடன் அனுப்பி வைத்ததோடு முடிந்து விட்டது. ஆனால் கறுவிக் கொண்டிருந்த அவனது நெஞ்சில், வஞ்சம் விஷப்பாம்பாய்ப் புரண்டு கொண்டிருக்கிறதே...

என்ன திமிர் இருந்தால், வருகிறபோது வழியில்-கிருஷ்ணகிரியில் அந்த வசந்தி பால் தொடர்பு கொண்டவனுக்குக் கசையடி கொடுக்கத் தன்னைத் தேர்ந்தெடுத்து அழைத்திருப்பான் இந்தப் பசவராஜ்...

நெஞ்சில் புரண்ட விஷப்பாம்பு, நெளிவதைவிட்டு நிமிர்ந்து படம் எடுக்கிறது...

''ஏய், சாரட்டை நிறுத்து!''

பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ராஜாக்கான் இரைகிறான்...

அவனது குரல் கேட்டு, முன்னே சென்று கொண்டிருந்த சிப்பாய்கள், சத்தமிட, அது அவர்களுக்கும் முன்னே



சென்று கொண்டிருந்தவர்களுடைய காதுகளில் மோத, அவர்கள் தங்கள் குதிரைகளின் லகான்களைப் பற்றி இழுத்துத் திரும்பிச் சமிக்ஞை செய்ய.

சாரட்டும் ஒரு குலுங்கு குலுங்கி நிற்கிறது.

நட்ட நடுக்காடு. மரங்களை விழுங்கிய இருளின் அடர்த்திகளுக்கு நடுவே வளைந்து செல்லும் அந்தச் செம்மண் பாதையில் சாரட்டு நிற்பதைக்கண்டு, ஒன்றுமே புரியாது பசவராஜும் ரங்கநாயகியும் ஒருவரையொருவர் பார்க்க முயலுகின்றனர். அந்தக் கன்னங் கரேலென்றிருந்த இருட்டில், அவர்களது கண்கள் எதையும் பார்க்க முடியவில்லை, எதையுமே உணர்ந்து கொள்ளவும் முடியவில்லை. வாயைத் துணியால் அடைத்திருந்ததால் வார்த்தைகள் சிறைப்பட்டிருந்தன. மூக்கு வழியாகச் சுவாசிக்க ரங்கநாயகி திணறிப்போனாள்.

முன்னே வழிப்பாதை சரியாக இருக்கிறதா என்று கவனிக்கத் தீப்பந்தத்தை ஏந்திக் கொண்டு தொலைதூரத்தில் நின்று கொண்டிருந்தவனை நோக்கிய ராஜாக்கான், ''ஏய், அமீர்! தீப்பந்தத்தை இப்படி எடுத்துக் கொண்டு, வா!'' என்று எரிச்சலுடன் ஆணையிட்டுக் கத்தினான்.

சற்றைக்கெல்லாம் தீப்பந்தம் அருகில் வந்தது. அதன் வெளிச்சத்தில் சாரட்டுக்குள்ளிருந்த பசவராஜை மிகவும் குரூரமாகக் கவனிக்கிறான் ராஜாக்கான்.

ரங்கநாயகி தலைகுனிந்து கொள்கிறாள். அவளது கண்களில் நாணம் வேதனையோடமர்ந்து மேனியைப் பறித்துத் தின்கிறது...

பசவராஜின் கண்களில் மட்டும் தீப்பந்தம் குடியேறி, செவ்வொளிப் பிழம்பாய்த் தெறிக்கிறது.

ஒருகணம் அந்த வெளிச்சத்தில் அவர்கள் இருவரும் — எதிரும் புதிருமாக அமர்ந்திருந்த ரங்கநாயகியும் பசவராஜும் நோக்கிக் கொள்கின்றனர். என்ன இட்டத்தின் கீழ் எங்கு தங்களை இவ்விதம் கொடுமைப்படுத்தி அழைத்துச் செல்கிறார்கள் என்பதே அவர்களுக்குப் புரியவில்லை. இவ்விதமாகக் கட்டளை பிறப்பித்தவர்கள் யாராக இருக்க முடியும் என்று அந்த ஒரு கணத்து நோக்கில் அவர்கள் மௌனமாய்ப் பேசி மருளுகின்றனர். ஆ! திப்புசுல்தானுக்குத் தெரியாமல் தங்களைச் சூழ்ந்து ஒரு சதியே உருவாகியிருக்கிறது என்பது மட்டும் திண்ணமாகப் புரிகிறது.

ராஜாக்கான் இரைந்து சொன்னான்:

''இந்தப் பசவராஜ் நாயைக் கீழே இறக்குங்கள்!''

பசவராஜின் நரம்புகளெல்லாம் புடைத்துப் படபடக்கின்றன. இந்தக் கால்களிலும் கைகளிலும் இருக்கிற கட்டுக்கள், ஒரு சித்து மந்திரம் மாதிரி அறுபடாதா? என்று பிரார்த்திக்கிறான்... அவ்வாறு மட்டும் அறுபட்டு விடுமேயானால்...

ராஜாக்கானை நார் உரித்து விடுவானே.:

நான்கு வீரர்கள் முன்னே வந்து பசவராஜைப்பிடித்திழுத்து இறக்கமுயல்கின்றனர். அவர்களைப் பசவராஜ் பார்த்த பார்வை...

முன்கதைச் சுருக்கம்

வெள்ளைக் கும்பினியனை இந்தத் தேசத்திலிருந்து விரட்டியடிக்க விடுதலைப் போர்முரசு கொட்டிய மாவீரன் ஹைதர் அலியின் புகழும் அவன் மகன் திப்பு சுல்தானின் கீர்த்தியும் திக்கெட்டும் பரவிய காலம். ஸ்ரீரங்கப்பட்டினத்தின் பாதுகாப்பைத் திப்புவிடம் ஒப்படைத்துவிட்டுப் போருக்குச் செல்கிறான் ஹைதர் அலி.

திப்பு, ரங்கநாயகி என்ற வைணவப் பெண் மீது காதல் கொள்கிறான். அவளும் அக்காதலின் எதிரொலியைத் தன் மனத்தில் காண்கிறாள். பல மனைவியரைத் தவிர அந்தப்புரத்தில் எழில் பதுமைகள் எத்தனையோ பேரை வைத்து அழகு பார்க்கும் திப்பு, ரங்கநாயகியிடம் மட்டும் பயபக்தியுடன் நடந்து கொள்கிறான். அவளிடம் தான் கொண்ட காதலைப் புனிதமாகக் கருதி அக்காதல் தெய்வீகமான ஒரு நிறைவை அடையும் நாளை எதிர்பார்த்திருக்கிறான்.

பசவராஜ் திப்புவின் ஆருயிர் நண்பன். ரங்கநாயகி மீது அருளையும், மாற்று மதத்தவளைக் காதலிக்கிறானே என்பதால் கோபமும் கொண்ட பலரிடமிருந்து அவளைக் காப்பாற்றும் மெய்க்காவலனாக பசவராஜ் விளங்குகிறான்.

அதற்கும் மேலே பெரிய பதவிகளை அவனுக்கு அளிக்க விரும்பிய திப்பு, அவன் ஆற்றலை அனைவருக்கும் உணர்த்த எண்ணி வாட்போர் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறான். திப்பு ஒருவனைத் தவிர அனைவரையும் வெல்லும் பசவராஜ், திப்புவின் உருவம் பொறித்த பதக்கத்தை அணியும் தகுதி பெறுகிறான். இதனால் பசவராஜ் மீது சிலருக்கு ஏற்கெனவே இருந்த பொறாமையும் அச்சமும் மேலும் அதிகரிக்கின்றன. ரங்கநாயகியுடன் சேர்த்து அவனையும் தீர்த்துக் கட்டுகிற தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

போருக்குச் சென்ற ஹைதர் அலிக்கு ஆபத்து என்று செய்தி வருகிறது. படை திரட்டித் தந்தைக்குத் துணை போகிறான் மைந்தன். கடைசி வினாடியில் ரங்கநாயகியை விட்டுப் போவது ஆபத்து என்று தோன்றவே அவளையும் உடனழைத்துச் செல்வதென முடிவு செய்கிறான். தந்தை ஹைதருடன் ரங்கநாயகி நேரில் பேசினால் திருமணத்துக்குச் சம்மதம் கிடைக்கும் என்ற ஆசையும் திப்புவுக்கு இருக்கிறது. பசவராஜுக்குப் படைகாப்பதுடன் திப்புவைக் காக்கும் பொறுப்பும் அவர் காதலியைக் காக்கும் பொறுப்பும் சேருகின்றன.

அவர்கள் அறியாமல் ஒரு தூதனும் உடன்வந்து ஹைதரிடம் ஒரு லிகிதத்தைச் சேர்ப்பிக்கிறான். அதைப் படித்த பிறகு தேசநலன் கருதி, ரங்கநாயகியையும் பசவராஜையும் திப்பு சுல்தானிடமிருந்து பிரித்துவிட வேண்டும் என்று ஹைதர் அலிக்கும் தோன்றுகிறது. ஓலை கொண்டு வந்தவன் மர்மமான விதத்தில் இறந்து விடுகிறான்.

ரங்கநாயகியை ஒரு பெரிய கருநாகப்பாம்பு உருவத்தில் பேராபத்து அணுகுகிறது. திப்பு தக்க சமயத்தில் காப்பாற்றுகிறான். அடுத்து தன் தந்தையின் உத்தரவை ஏற்றுத் திப்பு போர்முனைக்குச் செல்கிறான். பசவராஜையும் ரங்கநாயகியையும் ரகசியமாக ஒரு கோட்டையில் சிறைவைக்கத் திட்டமிடுகிறான் ஹைதர். அவர்கள் உயிரையே பறித்துவிட ஹைதருக்குச் சம்மதம்தான். ஆனால் திப்புவிடம் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகள் எப்படி இருக்குமோ அதனால் நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படுமோ என்பதால் தயங்குகிறான். ரகசியமாகச் சிறை வைத்துத் திப்புவிடம் ஏற்படும் எதிர்விளைவுகளை ஆராய்ந்து பிறகு உசிதமானால் அவர்களைச் சிறை வைத்திருக்கும் கோட்டையிலேயே அவர்கள் உயிரைப் பறித்து விடவும் திட்டமிடுகிறான்.


வெண்மை ஒளிவீசிப்
பளிச்சிடும்
பார்த்தவரெல்லாம் கூறுவர்...
இது
டெட்
டிடர்ஜெண்ட்
கட்டியின்
சலவை
Supreme
det
detergent washing cake
Shilpi DM 35A/78 Tam

சுய வேலை வாய்ப்புக்கள்

வேலையில்லாத் திண்டாட்டம் என்ற இமாலயப் பிரச்னையை ஒரு சவாலோடு எதிர்த்துப் போராட இடைவிடாத முயற்சிகள் தேவை. 1978ம் வருஷம் ஆகஸ்டு 15ந் தேதி விசேஷ வேலை வாய்ப்புத் திட்டத்துக்காக ஆந்திரப் பிரதேசத்தில் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி, பட்டதாரி வேலையில்லாதோருக்குப் பயிற்சியளிக்கும் வசதியாகும்.

1976-77ம் ஆண்டில் இந்த ராஜ்யத்தில் முழு மொத்தமாக வேலை வாய்ப்பு நிலையை உற்று நோக்கினல் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதைக் காணலாம். முந்தின ஆண்டைவிட இவ்வாண்டில் வேலைவாய்ப்பு நிலையங்களில் பதிவானவை 52876 விண்ணப்பங்களாகும். அதாவது 34 சதவிகிதம் முந்திய வருஷத்தைவிட அதிகமாகும்.

சிறு விவசாயி அபிவிருத்தி கழகம் (எஸ். எப். டீ. ஏ.) நடுத்தர விவசாயிகள் விவசாயத் தொழிலாளிகள் திட்டம் (எம். எப். ஏ. எல்) வறட்சி நில நிவாரணத் திட்டம் (டி. பி. ஏ. பி.) கால்நடை அபிவிருத்தித் திட்டம் (எல்.பி.பி.) ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இவ்வகை செயல் திறன் மிக்க ஸ்தாபனங்கள் இயங்கும் பகுதிகளிலுள்ள பதினைந்து லட்சம் சிறிய, நடுத்தர விவசாயிகளில் 6.58 லட்சம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வகை நிதி ஸ்தாபனங்களுக்கு உதவித் தொகை அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. இரண்டரை ஏக்கர் பாசனமுள்ள நிலம் படைத்த சிறு விவசாயிகளுக்கும் ஐந்து ஏக்கர் அளவுள்ள தரிசல் நிலங்களுக்கும் நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

DG. I & P.R. 31-78-79

எட்டுக் கரங்களும் நடுங்குகின்றன என்பதைப் பிடித்த பிடியிலிருந்து உணர்ந்து கொண்ட பசவராஜ், ''பாவம், இவர்கள்! வெறும் ஏவலர்கள்! இட்ட பணியைச் செய்து முடிக்கிற கூலிகள்!'' என்று மனத்துள் முனகிக் கொண்டான். அவன் அமைதியாகவே அவர்களது பிடிக்குக் கட்டுப்பட்டான். கீழே இறக்கிய பசவராஜை நடுப்பாதையில் நிறுத்தினர்.

கால்கட்டும் கைகட்டுமாக நின்று கொண்டிருந்த பசவராஜை, சாரட்டுக் குள்ளிருந்து கவனித்த ரங்கநாயகியின் மருண்ட நயனங்களிலிருந்து நீர் மாலைமாலையாக வழிந்தது.

ஒருவேளை இருவரையும் இங்கேயே கொலை செய்து போட்டு விடுமாறு ஹைதர்அலி ஆணையிட்டு இருப்பாரோ? அவரைத் தவிர வேறு யாருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது? அவர் தானே தன்னை வந்து அழைத்துச் சென்றார்!—ரங்கநாயகியின் மன அரங்கில் எழுந்த புயலுக்கு மத்தியில் வார்த்தைகள் மௌனமாய்ச் சிதறுகின்றன...

ராஜாக்கான் என்னமோ பேசுகிறான்...

புயலை அமர்த்திக் கூர்ந்து கவனிக்கிறாள் ரங்கநாயகி.

''பசவராஜ்! வருகிற வழியில் —கிருஷ்ணகிரியில் தவறு செய்த குடியானவனுக்குக் கசையடி கொடுக்க நானா கிடைத்தேன்? ஒரு சாதாரணச் சிப்பாய் செய்திருப்பானே அந்தக் காரியத்தை! என் மீதிருந்த வஞ்சம் — பொறாமையை, உனக்குச் செல்வாக்குக் கிடைத்தபோது பயன்படுத்தித் தீர்த்துக் கொண்டாய்! இப்போது எனக்குச் செல்வாக்குக் கிடைத்திருக்கிறது!'' என்று கூறிக் கொண்டே குதிரையிலிருந்து மூர்க்கத்தனமாகக் குதித்தான் ராஜாக்கான்.

தயாராகக் கொண்டு வந்த கசையை எடுத்து, ஒரு பயங்கரப் பார்வை — பயங்கர உறுமலுடன் ''எண்ணிக்கொள்!'' என்று மிருந்த வெறியுடன் கூறி, அரக்கத்தனமாகச் 'சுரீர், சுரீர், சுரீர்' என்று அடிக்கிறபோது...

ரங்கநாயகி வாயற்றுக் கேவுகிறாள். வாயுள்ள ஏனையவர்களோ, 'இதன் பின் விளைவு என்னாகுமோ?' என்று அஞ்சி வாளாவிருந்து கவனிக்கின்றனர்.

பதினெட்டு முறை அடித்து ஓய்ந்த ராஜாக்கான், மூச்சு வாங்க பசவராஜைக் கவனிக்கிறான்... அவனது கண்களில் தீப்பந்தங்கள் எரிகின்றன.



''டேய்...நீ மாட்டுக் கொம்புகளுக்குச் சாயம் அடிக்கிறதுக்கு முன்னாலே இந்த ஊரிலே எந்த ஆஸ்பத்திரி நல்ல ஆஸ்பத்திரின்னு கேட்டுத் தெரிஞ்சுக்கோ!''

பசவராஜ் சுருண்டு கீழே விழுந்து கிடக்கிறான். அவனது வாயில் அடைபட்டிருந்த துணி அப்போதுதான் நழுவி மண்ணில் விழுந்து கிடந்தது.

''இந்த நாயைச் சாரட்டுக்குள் எடுத்துப் போட்டுக் கொண்டு புறப்படுங்கள். வழிமுறைகளை நான் எச்சரித்தது போலச் செயல்படுத்த வேண்டும். ராஜலாஞ்சனையை (முத்திரை மோதிரம்) பத்திரமாகக் கொண்டு வந்து யாகின்கான் அவர்களிடம் சேர்க்க வேண்டும். ஜாக்கிரதை!'' என்று சத்தமிட்டுக் கூறிய ராஜாக்கான், ஒருமுறை கீழே விழுந்து கிடந்த பசவராஜை, பழி வாங்கிக் கொண்ட ராட்சஸனைப்போலக் கவனித்துவிட்டு, அடுத்து, சாரட்டுக்குள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பூஞ்சையான ரங்கநாயகியை ஏளனமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தனது புரவியில் தாவி ஏறி அமர்ந்து தட்டி விட்டான்.

புரவி, பேரம்பாக்கத்தை நோக்கி அலறிப் புடைத்துக் கொண்டோடியது.

பசவராஜைத் தூக்கிச் சாரட்டுக்குள் போட்டனர் சிப்பாய்கள். ஆனால் வாயை அடைக்க வேண்டிய துணியை மண்ணிலிருந்து எடுக்க மறந்து போயினரோ? ஒரு வேளை அதற்கு அவசியமில்லை என்று உணர்ந்து விட்டு விட்டனரோ?

சாரட்டு ஹைதர் நகரை நோக்கி மிகுந்த வேகத்துடன் பறந்தது. (தொடரும்)



தன்னைப் பற்றியே அதிகமாகப் பேசுபவன் அந்த அளவுக்குப் பிறரைப் பற்றிப் பேசுவதைக் கேட்க விரும்புவதில்லை.

— லவேட்டர்

— சக்திகமலே

அன்று காலையில் இரண்டு தடவைக்கு மேல் வாந்தி எடுத்த 'கரகம்' சந்திரமதி 'தலைசுற்றுகிறது' என்றவாறு அப்படியே கட்டிலில் படுத்து விட்டாள்.

உறுமி மேளத்தின் இரு பக்கங்களையும் இணைத்திருந்த தோல்வரை இழுத்துக் கட்டிக் கொண்டிருந்த ஏழுமலை 'என்னமோ ஏதோவென்று' பயந்துபோய்ப் பக்கத்துத் தெருவிலிருக்கும் வைத்தியரைக் கூட்டிவர ஓடினான். நல்லவேளையாக வைத்தியர் வீட்டில் இருந்தார். ஏதோ ஒருசில வேர்களைக் கைஉரலில் போட்டு இடித்துக் கொண்டிருந்த வைத்தியர் ஏழுமலையைப் பார்த்ததும், ''வாய்யா ஏழுமலை! என்ன... மேளம் அடிக்கும்போது கை சுளுக்கிடுச்சா!... மயில் கால் தைலம் தயாரிச்சு வைச்சுருக்கேன். வேணுமா?'' என்று கேட்டார்.

''மயில்கால் தைலமும் வேண்டாம்! குயில் கால் தைலமும் வேண்டாம். நான் நல்லாத்தான் இருக்கேன். வீட்டுக்காரி சந்திரமதிதான் எப்படியோ யிருக்கா தலைசுத்துதாம். ரெண்டு மூணு தடவை வாயால வேறு எடுத்துட்டா. அதுதான் உங்களைக் கூட்டிப் போக வந்தேன்'' என்றான் ஏழுமலை.

''என்னய்யா ஆச்சரியமாயிருக்கு! கரக ஆட்டம் சந்திரமதிக்குத் தலைசுத்துதா? கரகச் செம்பைத் தலையிலே வைச்சுக்கிட்டுச் சும்மா பம்பரமா சுத்துவாளே! அவளுக்கு எப்படி தலை சுத்தல் வந்துச்சு?'' என்றவர் மூலையில் வைத்திருந்த மருந்துப் பெட்டியை எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு ஏழுமலையுடன் புறப்பட்டார்.

சந்திரமதியின் நாடித் துடிப்பைச் சோதித்த வைத்தியர் குறும்புச் சிரிப்போடு ஏதோ கேட்டார். அவள் நாணத்தோடு தரையைப் பார்த்தவாறு தலையை மாத்திரம் ஆட்டினாள்.

''கெட்டிக்காரப் பொண்ணு நீ, நல்லாயிருக்கணும்'' என்றவர் ஏழுமலையின் பக்கம் திரும்பி ''ஏழுமலை, ஒரு நல்ல சேதி! நீ, அப்பாவாகப் போறே!... அட, பொண்டாட்டி உண்டாயிருக்கான்னு சொன்னதும் சந்தோஷத்தைப் பாரு... அதுசரி, இனிமே அவ உடம்பைக் கவனமாப் பார்த்துக்கோ. கரகச் செம்பைத் தலையில தூக்கி வைச்சு ஆடச் சொன்னே அவ்வளவுதான். வயத்துப் புள்ளை நிக்காது. புள்ள பொறக்கிற வரைக்கும் கரகம் ஆடக்கூடாது. ஜாக்கிரதை. நான் போயிட்டு நாளைக்கு வரேன். நீ சாயந்திரம் வீட்டுப் பக்கம் வா. ஒரு கஷாயம் காய்ச்சித் தாரேன் கொடு... சந்திரமதி, போயிட்டு வர்றேம்மா! வர்றேன் ஏழுமலை'' என்றவர் மருந்துப் பெட்டியை இடுக்கிக்கொண்டு அங்கிருந்து சென்றார்.

வைத்தியர் சென்றவுடன் கட்டிலில் கொடி போலத் துவண்டு கிடந்த சந்திரமதியின் அருகில் அமர்ந்தான் ஏழுமலை. பரிவோடு அவள் முதுகைத் தடவிவிட்டுக் கொண்டு ''சந்திரமதி'' – என்று மெல்ல அழைத்தான்.



கரக ஆட்டம்

''என்னங்க'' என்றவள் மெல்ல எழுந்து உட்கார முயன்றாள்.

''எழுந்திருக்க வேண்டாம்மா, படுத்துக்கோ. வைத்தியர் சொன்னதைக் கேட்டியா. நீ, கரகம் ஆடக் கூடாதுன்னு சொல்லிட்டாரு. அவரு சொல்றதும் சரிதான். வயத்துலே புள்ளையைச் சுமந்துட்டு 'திங்கு திங்கு'ன்னு ஆடினா புள்ளை என்னத்துக் காகும்? நீ, இனிமே ஆட்டத்துக்குப் போக வேண்டாம். நான் மாத்திரம் மேளம் அடிக்கப் போயிட்டு வர்றேன்'' என்றான்.

''அதுசரிங்க. அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை சிங்கம்பட்டி அம்மன் கோயிலிலே கரக ஆட்டம் இருக்கே! 'அட்வான்சு'ப்பணம் முந்நூறு வாங்கிச் செலவாக்கிட்டமே. இப்ப என்ன செய்யறது? ஆட்டத்துக்குப் போகலேன்னு கைநீட்டி வாங்கின அட்வான்ஸ் பணத்தைத் திருப்பித் தரணுமே!'' என்ற அதிர்ச்சியான செய்தியைத் தெரிவித்தாள்.

அப்பொழுதுதான் ஏழுமலைக்குச் சிங்கம்பட்டி அம்மன் கோயில் திருவிழா நினைவிற்கு வந்தது. கோயில் திருவிழாவில் கரகம்ஆட ஒப்புக்கொண்டு, அட்வான்ஸ் பணம் முந்நூறு வாங்கி ஒரு பழைய கடனை வட்டியும் முதலுமாய்த் தீர்த்துவிட்டான். கோயில் வழக்கப்படி குறிப்பிட்ட நாளில் வந்து ஆடாவிட்டால் வாங்கின பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும். சந்திரமதி இதை நினைவு படுத்தியதும் ஏழுமலை அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

இப்படி ஏதாவது தீர்க்க முடியாத பிரச்னைகள் தலைதூக்கினால், ஏழுமலை, காளிதாஸ் பிள்ளையிடம் போய் யோசனை கேட்பான்.



காளிதாஸ் பிள்ளை பொய்க்கால் குதிரையாட்டத்தில் கொடிகட்டிப் (ஒரு காலத்தில்) பறந்தவர். ஒரு தடவை குடியரசுதின அணிவகுப்பில் நடந்த பொய்க்கால் குதிரை ஆட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கவர்னரின் பாராட்டைப் பெற்ற பெருமையும் உண்டு. அரிதாரம் பூசி, ராஜா வேடத்தில் பொய்க்கால் குதிரையாட ஆரம்பித்தாரென்றால் அவர் காலில் கட்டிய சலங்கையொலி மேளத்தின் ஓசையை அமுக்கும். அப்படியொரு வேகம்! அப்படியொரு லாகவம்! இவ்வளவு திறமையுள்ளவரின் வலதுகால் திடீரென்று செயலிழந்து விட்டது. எங்கெல்லாமோ சென்று வைத்தியம் செய்தும் சரியான பலன் கிடைக்கவில்லை.

காளிதாஸ் பிள்ளையின் வீட்டை ஏழுமலை அடையும்பொழுது அவர் திண்ணையில் படுத்திருந்தார். அவரது வலது காலில் ஏதோ ஒரு பச்சிலையை வைத்துக் கட்டியிருந்தார். பச்சிலை நெடி ஏழுமலையின் மூக்கைத் தாக்கியது.

ஏழுமலையைப் பார்த்ததும் காளிதாஸ் பிள்ளையின் முகம் மலர்ந்தது. ''வா, மாப்ளே! சந்திரமதி சுகமா இருக்காளா? என்ன ரொம்ப நாளா இந்தப் பக்கம் காணலியேன்னு இப்பத்தான் நெனைச்சேன். நீயே வந்துட்டே. போன வெள்ளிக்கிழமை திருப்புத்தூர் திருவிழாவுல நம்ம சந்திரமதி பிரமாதமா ஆடினாளாமே! ஒத்து ரங்கசாமி சொன்னான். நீகூட புதுக்கோட்டை, 'ரெட்டைமேளம்' முத்துராக்கைத் தண்ணி வாங்கிட்டயாமே'' – காளிதாஸ் பிள்ளை இப்படித்தான், பேச ஆரம்பித்தாரென்றால் அடுத்தவனுக்கு வாய்ப்பே தரமாட்டார்.

ஏழுமலை சிரித்துக் கொண்டே திண்ணையில் ஓர் ஓரமாக உட்கார்ந்தான். ''மாமா! காலு எப்படியிருக்கு? ஏதோ பச்சிலை வைச்சுக் கட்டியிருக்கீக!'' – பேச்சைத் திசை திருப்பினான் ஏழுமலை.

''ஆமாம் மாப்ளே, பாவநாசம் மலைசிலிருந்து ஒரு வைத்தியர் வந்தார். என்னமோ சஞ்சீவி மலையிலே பறிச்ச பச்சிலையாம்! அரைச்சு வைச்சு ஒரு மாசம் கட்டினா காலு சும்மா இரும்பு மாதிரி பழைய நெலைக்கு வந்துடுமாம்!'' – காலில் மொய்த்த ஈக்களை விரட்டிவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டார் காளிதாஸ் பிள்ளை.

''என்னமோ மாமா, உங்களுக்கு இப்படியெல்லாம் வரக் கூடாது'' என்று வருத்தத்தோடு சொன்னவன் எழுந்து அவர் அருகில் நெருங்கி உட்கார்ந்து ''மாமா ஒரு முக்கிய விஷயத்துலே குழம்பிப்போயிருக்கேன். நீங்கதான் நல்ல யோசனை சொல்லணும்'' என்றான்.

''ஒனக்கு என்ன மாப்ளே நான் யோசனை சொல்லப் போறேன்! சரி விஷயத்தைச் சொல்லு!'' என்றார் அவர்.

''மாமா, சந்திரமதி முழுகாமலிருக்கா. இனிமே கரகம் ஆடக்கூடாதுன்னு வைத்தியர் சொல்லிட்டாரு. ஆனு

வெள்ளிக் கிழமை, சிங்கம்பட்டி அம்மன் கோயிலிலே அவ ஆட்டம் இருக்கு. 'அட்வான்ஸ்' பணம் முந்நூறு வாங்கி ஒரு கடனை அடைச்சுட்டோம். பணத்தைத் திருப்பித் தரவும் வழியில்லே. இப்ப என்ன செய்யுறதுன்னு புரியலே. அதுதான் உங்களைப் பாக்க ஓடியாந்தேன்'' என்றான் ஏழுமலை.

காளிதாஸ் பிள்ளை சிறிதுநேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

''வயத்துப் பிள்ளைக்காரியை ஆடச் சொன்னா ஒன்னு கிடக்க ஒன்னு ஆயிடும். அது தப்பு. இந்த ஊருலே நம்மளை நம்பி ஒருத்தனும் அவ்வளவு பெரிய தொகையைக் கடனாத் தர மாட்டான். நம்ம பொழைப்பு... அப்படி!... நீ, ஒன்னு செய்யேன். நேரா சிங்கம்பட்டி போ. பெரிய பண்ணையார் செந்தூர்ப் பாண்டித் தேவருட்டே விவரத்தைச் சொல்லு... தேவரு ஒருமாதிரி ஆளுதான். இருந்தாலும் இரக்கப்பட்டுப் பெரிய மனசு பண்ணினாலும் பண்ணுவார். அதைத் தவிர வேறு வழியே தெரியல'' என்றார் காளிதாஸ் பிள்ளை.

ஏழுமலைக்கு உதவ முடியவில்லையே என்ற வேதனை அவர் முகத்தில் தெரிந்தது.

''சரி, மாமா, நான் நாளைக்கே சிங்கம்பட்டி போயி செந்தூர்ப் பாண்டித் தேவருட்டே விஷயத்தைச் சொல்லுறேன். நீங்க பச்சிலையை விடாம அரைச்சுப் பத்துப் போடுங்க. எல்லாம் நம்ம கஷ்ட காலம்'' என்றவன் அங்கிருந்து புறப்பட்டான்.

மறுநாள் சிங்கம்பட்டிப் பெரிய பண்ணையார் செந்தூர்ப் பாண்டித் தேவரின் பண்ணையை ஏழுமலை அடையும்பொழுது அவர், வில்வண்டிக் காளைகளுக்கு லாடம் அடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தோளில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு செந்தூர்ப் பாண்டித் தேவரைப் பார்த்துப் பணிவோடு வணக்கம் தெரிவித்தான் ஏழுமலை.

''என்னப்பா என்ன சேதி?'' என்று தேவர் கேட்டதும் ஏழுமலை சுற்றிவளைக்காமல் வந்த விவரத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

தரையில் கிடந்த ஒரு சிறிய குச்சியை எடுத்துப் பற்களின் இடையிலிருந்த வெற்றிலைத் துகள்களைச் சுரண்டியவாறு ஏழுமலை சொன்னதைக் கவனமாகக் கேட்டார் செந்தூர் பாண்டித்தேவர். பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியொன்று நெஞ்சுக்குள் ரகசியமாய்ப் புதைந்து கிடந்தது அவரது மனக்கண்முன் தோன்றியது.

அந்த வருடம்தான் முதன்முதலாகச் சிங்கம்பட்டி அம்மன் கோயில் திருவிழாவில் கரகம் ஆடச் சந்திரமதி வந்திருந்தாள். திருமணமாகாத பருவக்குமரி. தளதளவென்று எலுமிச்சை நிறத்தில் இளமையின் செழிப்போடு பேரழகியாய் நின்ற சந்திரமதியைப் பார்க்கப் பார்க்கத் தேவருக்கு எப்படியோ வந்தது!

'கேவலம் கரக ஆட்டக்காரி! பணத்தைத் தூக்கி எறிந்தால் வராமலா போய்விடுவாள்!' என்று நினைத்த செந்தூர் பாண்டித் தேவர், கரக ஆட்டம் முடிந்ததும் அவள் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று தம் எண்ணத்தைத் தெரிவித்தார்.

அவ்வளவுதான்! எரிமலையாக வெடித்த சந்திரமதி ''கரக ஆட்டக்காரின்னு யாரு கூப்பிட்டாலும் போயிடுவாங்கிற நெனைப்பு, இல்லேயா? எங்களுக்கும் மானம் மரியாதை எல்லாம் உண்டு. வீட்டிலே பொண்டாட்டியை வைச்சுட்டு ஏன்தான் இப்படி ஊரு மேய விரும்புறீங்களோ...? தயவுசெய்து யாரும் வரதுக்கு முன்னே இங்கிருந்து போயிடுங்க'' என்று முகத்தில் அடித்ததுமாதிரி பேசிவிட்டாள்.

மறுவருடம் சிங்கம்பட்டி அம்மன் கோயில் திருவிழாவில் கரகம் ஆடச் சந்திரமதியை அழைக்கக்கூடாது என்று செந்தூர்ப்பாண்டித் தேவர் எவ்வளவோ முயன்றும் ஊர்மக்கள் 'அவள் ஆட்டம்தான் வேண்டும்' என்று தீர்மானமாகக் கூறிவிட்டனர். அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் திருவிழாவில் கரகம் ஆடச் சந்திரமதி அழைக்கப்பட்டாள். இதற்கிடையில் நையாண்டி மேளம் அடிப்பதில் கெட்டிக்காரனான ஏழுமலையையும் மணந்து கொண்டாள்.

சந்திரமதி நடந்தவற்றை மறந்துவிட்ட போதிலும் செந்தூர்ப் பாண்டித் தேவரால் மறக்க முடியவில்லை. பட்ட அவமானம் நெஞ்சில் பசுமரத்தாணியாய்ப் பதிந்துவிட்டது. ஒரு நீண்ட பெருமூச்சோடு பழைய நினைவுகளிலிருந்து விடுபட்ட தேவர் ஏழுமலையைப் பார்த்து, ''ஏழுமலை, உனக்குத் தெரியாத விஷயமா! கோயில் முறைப்படி பணம் வாங்கிட்டாக் கண்டிப்பா ஆடித்தீரணும். இல்லேன்னா பணத்தை அப்படியே திருப்பித் தந்துடணும். எனக்கும் மனசு சங்கடமாத்தான் இருக்கு. பிள்ளையுண்டாகி இருக்கிறவளை ஆடச் சொல்லுறது நல்லாயில்லே! இருந்தாலும் என்ன செய்யுறது? என் கையிலே பணம் காசு இருந்தாக் கொடுத்துடுவேன். விதைப்புச் சமயம் பாரு. கையிலே பைசாக் கிடையாது... நான் வயலுக்குப் போகணும்.




காரைக்குடியில் ஆண்டு தோறும் நடக்கும் கம்பராமாயணப் பட்டி மன்றத்தில் பேசும் பேச்சாளர்கள் குறிப்பிட்ட காலத்திற்குமேல் பேச கட்டாயம் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்ததும் மேடையில் சிவப்பு விளக்கு எரியும். பேச்சாளர்கள் உடனே பேச்சை நிறுத்தி விடுவார்கள்.

ஓர் ஆண்டு ஒரு பிரபல பேச்சாளர் சிவப்பு விளக்கு எரிந்தும் கூட நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனார். கூட்டமும் மெய்மறந்து அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தது. அவர் தானாகவே பேச்சை முடித்த பின்னர் கம்பன் கழக நிர்வாகி திரு சா. கணேசன் கூறியது:

''இவருக்குச் சிவப்பு விளக்கை எரியவைத்தது என் தவறுதான். சிவப்பு நிறத்தைக் கண்டவுடன் அவர் மேலும் ரசமாகப் பேச ஆரம்பித்துவிட்டார்!''

இதைக் கேட்டுக் கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். காரணம் அந்தப் பேச்சாளர் கம்யூனிஸ்ட் தலைவர் பி. ஜீவானந்தம்!

தகவல்: ''சங்கர்புத்திரன்''



சென்னை நகரத் தியேட்டர்களுள் கொட்டகை நிறைந்த ஒரு காட்சிக்கு அதிக வசூல்தரும் தியேட்டர் அலங்கார்தான். ரூ. 2961.40 பைசா. இதில் 1242 இருக்கைகள் உள்ளன. இரண்டாவது அதிக வசூல் தரும் தியேட்டர் சத்யம். வசூல் ரூ. 1859.72 பைசா. இருக்கைகள் 1255. மூன்றாவதுதான் தேவி பாரடைஸ்.
ஆதாரம்: பிலிம் சேம்பர் பத்திரிகை.
தகவல்: குரு

நீ போயிட்டு வா'' என்றவர் அங்கிருந்து வேகமாகச் சென்றுவிட்டார்.

குடிசைக்கு வெளியே முற்றத்தில் எதிர்வீட்டுக்காரியோடு தாயம் ஆடிக்கொண்டிருந்த சந்திரமதி, முகத்தைச் சோகமாய் வைத்து வந்து கொண்டிருந்த ஏழுமலையைப் பார்த்ததும், ''பொன்னம்மா, அவுக வந்துட்டாக. நாளைக்கு ஆடலாம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தாள். குடிசைக்குள் நுழைந்த ஏழுமலை தோளில் கிடந்த துண்டைக் கொடியில் போட்டுவிட்டுக் கட்டிலில் சோர்வோடு அமர்ந்தான்.

''என்னங்க, சிங்கம்பட்டி பெரிய பண்ணையார் செந்தூர்ப்பாண்டித் தேவர் மூஞ்சியிலே அறைஞ்சது மாதிரி பதில் சொல்லிட்டாரா! நீங்க போகும் போதே எனக்குத் தெரியும். உங்க ஆசையை எதுக்குக் கெடுக்கணும்னு சும்மா இருந்துட்டேன். செந்தூர்ப் பாண்டித் தேவரைப் பற்றி எனக்கில்லே தெரியும். சரி சரி, கவலைப்படாம சாப்பிட வாங்க'' என்றாள் சந்திரமதி.

''கவலைப்படாம எப்படிச் சந்திரமதி இருக்க முடியும்? தேவரும் கையை விரிச்சுட்டாரு. இப்ப என்ன செய்யறது?'' என்றான் விசனத்தோடு.

''இதோ பாருங்க, நான் சிங்கம்பட்டி அம்மன் கோயில் திருவிழாவுல ஆடுறதா முடிவு செஞ்சிட்டேன். அந்த அம்மன் என் வயித்துலே வளர்ற பிள்ளையைக் காப்பாத்த நெனைச்சாக் காப்பாத்தட்டும். இல்லேன்னா எப்படியும் போகட்டும்'' என்றாள் ஆவேசத்துடன்.

அன்று சிங்கம்பட்டி அம்மன் கோயில் திருவிழா! ஊரெங்கும் வேப்பிலைத் தோரணங்கள், மாலையில் முளைப்பாரி எடுத்த பெண்கள் வரிசை வரிசையாக அம்மன் பாடல்களைப் பாடியவாறு கோயிலை நோக்கி வந்து கொண்டிருந்தனர். மாவிளக்கு, பொங்கல் படையல் போன்ற சடங்குகள் சரிவர நடந்து கொண்டிருந்தன.

கோயில் வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த செந்தூர்ப் பாண்டித் தேவரின் காதில், 'கரகம் சந்திரமதி வந்தாச்சு' என்ற செய்தி விழுந்தது.

'அட துணிஞ்சு வந்துட்டாளே!' என்று தமக்குள் நினைத்துக் கொண்ட தேவரிடமிருந்து நீண்ட பெருமூச்சு வந்தது.

வழக்கமாகத் தங்கும் அந்தப் பெரிய சத்திரத்தில் வந்திறங்கியிருந்தது சந்திரமதியின் கோஷ்டி. வெளித் தாழ்வாரத்தில் நாதஸ்வரக்காரப் பெருமாள், ஒத்து ரங்கசாமி, இரட்டைமேளம் செல்லச்சாமி எல்லோரும் அமர்ந்திருந்தனர்.

உள்ளேயிருந்த அறையில் விரித்திருந்த ஜமுக்காளத்தில் சந்திரமதி அமர்ந்திருந்தாள். அவள் பக்கத்திலிருந்த கரகச் செம்பைக் கதம்ப மலர்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தான் ஏழுமலை.

இருவர் மனத்திலும் வேதனை குடிபுகுந்திருந்தது. கரக அலங்காரம் முடிந்ததும், ''சந்திரமதி நேரமாகுது. நான் போயி எல்லாருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துட்டு வந்துடறேன்'' என்றவன் வெளியே சென்றுவிட்டான்.

ஏழுமலை சென்றவுடன், கதவை உட்பக்கமாகத் தாழிட்ட சந்திரமதி உடைகளைக் களைந்து விட்டு ஜிகினை பளபளக்கும் இருக்கமான உடைகளை அணிந்து கொண்டாள். அவள் கொண்டுவந்த பெட்டியின் மேல் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்து மண்டியிட்டு அமர்ந்தவள் ''ரோஸ்'' பவுடரை எடுத்து முகத்தில் சீராக அப்பிக் கொண்டாள். கண்மை டப்பியிலுள்ள கண்மையை ஒரு குச்சியில் எடுத்துக் கண் இமையில் தடவி, ஓரங்களில் இழுத்து விட்டுக் கொண்டாள். வலது கன்னத்தின் செழுமையில் ஒரு கறுப்புப் புள்ளியை வைத்தாள். 'இமிடேஷன்' கற்கள் பதித்த ஒட்டு மூக்குத்தியை மூக்கில் பொருத்தி, மூக்கைப் பல கோணங்களில் களித்துச் சரியாகப் பொருந்தியிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள். பெட்டிக்கடியிலிருந்த காற்சலங்கைப் பட்டையை எடுத்துக் கால்களில் கட்டிக்கொண்டு, கரகச் செம்பின் முன் வணங்கி எழுந்துவிட்டுக் கதவைத் திறந்து வெளித் தாழ்வாரத்துக்கு வந்தாள்.

''சந்திரமதி ரெடியாயாச்சு! ஆனா மழை வர்றது மாதிரித் தெரியறது... இன்னிக்கு

ஏழை மனிதனுக்காக நாம் எதையும் செய்வோம். ஆனால் அவன் முதுகை விட்டுக் கீழே இறங்க மாட்டோம்! —டால்ஸ்டாய்

இரா. மோகன்

மத்தியானம் அடித்த வெய்யிலுக்கு மழை கண்டிப்பா வந்துடும்!'' என்றான் செல்லச்சாமி.

''மழையா!'' என்ற சந்திரமதி விற்புருவங்கள் வியப்போடு மேலேற வானத்தை நோக்கினாள். மதியம் நிர்மலமாய்த் துடைத்துவிட்டதுபோல நீலக்கலரில் காட்சியளித்த வானத்தில் கருமேகக் கூட்டங்கள் பொதி பொதியாய்க் குவிந்து உறுமிக் கொண்டிருந்தன. வாடைக்காற்று வேறு ஜில்லென்று வீசியது.

இதற்குள் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்போன ஏழுமலை வந்து, ''சாப்பாடு இங்கேயே வர்றது. எல்லோரும் சாப்பிட்டுட்டுக் கோயில் மைதா[illegible]த்திற்குப் போகணுமாம். போன வருஷத்தைவிட இந்தத் தடவை என்ன கூட்டம்! என்ன கூட்டம்!'' என்றான்.

''போவ் கூட்டம் இருக்கட்டும். வானத்தைப் பாரும். மழை வர்றது மாதிரி தெரியுது'' என்றான் செல்லச்சாமி.

''மழையும் வராது இழையும் வராது'' என்று ஏழுமலை சொல்லி முடிப்பதற்குள் தடித்த மழைத் துளிகள் தாழ்வாரத்துத் தகரத்தின் மேல் விழுந்து ஒலித்தன. முதலில் தூறலாக ஆரம்பித்தது அ[illegible]ரை மணி நேரத்துக்குள் வானத்துக்கும் பூமிக்கும் கம்பி கட்டியது போல் பலத்த மழையாய்ப் பெய்ய ஆரம்பித்துவிட்டது.

திருவிழாவில் நடக்கும் வேடிக்கை விளையாட்டுக்களைப் பார்க்க வந்த ஆண்மக்கள் மழை பலத்ததும், சாக்கைக் கொங்காணியாய்த் தலையில் போட்டுக் கொண்டு மண்வெட்டியோடு வரப்பைச் சரிசெய்ய வயலை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

''என்னப்பா இது அதிசயமாயிருக்கு! எந்த வருஷமும் திருவிழா நடக்கும்போது பெய்யாத மழை இந்த வருஷம் கம்மா கொட்டோ கொட்டுன்னு கொட்டுது!'' என்றார் ஒத்து ரங்கசாமி. வயதானவராதலால் குளிர்வேறு அவரை வாட்ட ஆரம்பித்தது.

''அதுசரி, ஆட்டம் நடக்கல்லேன்னு வாங்கின 'அட்வான்ச' பணத்தைத் திருப்பித் தரணுமோ!'' என்று புதுச் சந்தேகத்தைக் கிளப்பினார் நாதஸ்வரக்காரப் பெருமாள்.

''நல்லா ஆளுய்யா! நாமளா தவுல் உறைக்குள்ளாற ஒளிச்சு வைச்சு மழையைக் கொண்டாந்து சிங்கம்பட்டிலே விட்டோம். மழை பெய்தாலோ அல்லது எதிர்பாராத காரணமாகத் திருவிழா நின்னு போயிட்டாலோ முழுத்தொகையையும் கோயில்காரங்க தந்துடணும். இதுவிதி!'' என்றான் செல்லச்சாமி.

சிங்கம்பட்டி சரியான கரிசல் மண்பூமி. லேசாகத் தூரல் விழுந்தாலே களிமண் காலில் அடையாய் ஒட்டிக்கொள்ளும். இப்படிக் கொட்டும் மழையில், தெருவெங்கும் நிறைந்தோடும் தண்ணீரில் கரக ஆட்டம் எப்படி நடக்கும்!

பின்னிரவு நேரத்தில் சத்திரத்திற்கு வந்த கோயில் கணக்குப் பிள்ளை, ''என்னய்யா செய்யுறது, உங்களுக்குச் சாப்பாடு கொண்டுவரக் கூட ஒருத்தனும் இல்லை. எல்லாப் பயல்களும் வயலைப் பார்க்கவும், தோட்டத்தைக் கவனிக்கவும் போயிட்டானுக. எந்த வருஷமும் இப்படி நடந்தது கிடையாது! சரிசரி, எல்லாம் அந்த ஆத்தாவோட வேலை!'' என்றவர் மடியிலிருந்த பணத்தை எல்லோருக்கும் பட்டுவாடா செய்துவிட்டு ''ஆட்டம் நடக்காமலேயே முழுப்பணமும் உங்களுக்குச் சேரணும்னு அவ நெனைச்சுட்டா பார்த்தீங்களா!'' என்றார்.

''தாயே, திரிசூலி, லோகமாதா!... இந்த ஏழை வயத்துல வளர்ற சிசுவைக் காக்க மழையை வரவழைச்சு, உனக்கு நடக்கிற கொண்டாட்டங்களை நிறுத்திட்டயே அம்மா! அடுத்தவருஷம் என் கைக்குழந்தையோடு உன் சன்னதிக்கு வந்து என் காலுலே சக்தியிருக்கிறவரைக்கும் ஆடுவேன் இது சத்தியம்!'' என்று சந்திரமதி பிரார்த்தித்துக் கொண்டாள்.


அதிர்ச்சி தரும் ஹிட்ச்காக்!

பிரபல டைரக்டர் ஆல்ஃபிரட்ஹிட்ச்காக் வீட்டு ஃபிரிட்ஜும் கவி பாடுகிறது. தம்முடைய மண்டையைப் போன்ற உருவம் ஒன்றை ஃபிரிட்ஜுக்குள் வைத்துள்ளார் ஹிட்ச்காக். வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் எதையாவது எடுத்துப் பருகலாம் என்று ஃபிரிட்ஜைத் திறக்கிறார்கள். உள்ளே உள்ள உருவத்தைக் கண்டதும் மின்சாரம் தாக்கினாற்போல் அதிர்ச்சி அடைகிறார்கள்.

தகவல்: கன்னிசா.
ஆதாரம்: காரவன்



ஒரு மருத்துவர் தனது எல்லைகளை உணர்ந்திருக்க வேண்டும்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

சீதாராமன்: 'டோஸேஜ்' சம்பந்தமாகப் பேசும்போது ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். போதிய அளவுக்கு மருந்துகள் உட்கொள்ளாமை எங்களது சிஸ்டத்தில் பெருத்த தீய விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. டைபாய்ட் ஜுரத்திற்காக ஒரு நோயாளி 'குறிப்பிட்ட காப்ஸூலைக் குறிப்பிட்ட தினங்களுக்கு ஒருநாளைக்கு இத்தனை காப்ஸூல்கள் விதம் உட்கொள்ள வேண்டும்' என்று நாங்கள் எழுதிக் கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் டாக்டர் குறிப்பிட்டபடி அம்மருந்தை உட்கொண்டால்தான் நோய் பரிபூரணமாக நீங்கும். இரண்டு மூன்று தினங்கள் மருந்தை உட்கொண்டதும் ஜுரநிலை நார்மலுக்கு வந்து விட்டால் நிறையபேர் மருந்து சாப்பிட்டது போதும் என்று நிறுத்திவிடுகிறார்கள். இதனால் அவ்வியாதி 'அடிபட்ட புலி போன்று' அதிகத் தீவிரத்துடன் மறுபடி தாக்குகிறது. முதலில் கொடுத்த மருந்துக்கு இந்தத் தடவை வியாதி சீக்கிரமாகக் கட்டுப்படாது. இதனால் நோயாளிகள் இன்னும் கடுமையான சிகிச்சைக்கு உட்பட்டு அதிக தினங்கள் படுக்கையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. ஆகவே நோயாளிகள் டாக்டர் குறிப்பிட்டபடி மருந்துகளை அவர் நிறுத்தச் சொல்லும் வரை உட்கொள்வது மிகமிக அவசியம்...

அனந்த்: எங்கள் துறையில் இந்தத் தொல்லை இல்லை... ஒருமுறை குணமான வியாதி மறுமுறை வருவதில்லை...

சீதாராமன்: இன்னொன்றும் சொல்ல ஆசைப்படுகிறேன்... ஏதாவது நோய் வந்தால், மருத்துவரின் சிபாரிசு இன்றித் தானாக பார்மஸிகளுக்குப் போய் மருந்து வாங்கிச் சாப்பிடும் முறை பலரிடமும் தற்போது பரவி வருகிறது. இந்நிலை மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். இதனால் சில சமயங்களில் விபரீத விளைவுகள் கூட உண்டாகின்றன.

அனந்த்: எங்கள் துறையில் வியாபார நோக்கில் பெயர் சூட்டப்பட்ட மருந்துகள் என்று இல்லாததால் இம்மாதிரி நோயாளிகள் தாங்களாக வாங்கிச் சாப்பிட முடியாது... ஹோமியோபதி மருந்துகள் பெரும்பாலும் மூலிகைகள், காய்கறிகள், சிரகம் போன்றவைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. எங்கள் மருந்துகளை உட்கொள்வதால் ஆங்கில மருத்துவமுறை போன்று Side Effects கிடையாது.

சீதாராமன்: ஆங்கில மருத்துவமுறையில் சில மருந்துகள் Side Effects உண்டாக்கக் கூடிய வன்மை உள்ளவை என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் மிகத் தீவிரமான கட்டத்தில் நோயோடு வரும் நோயாளியை அதிவிரைவாகக் குணப்படுத்தக் கூடிய சக்தியை இம்மருந்துகள் பெற்றிருக்கின்றனவே... ஹோமியோபதியில் சிகிச்சையின் பலன் நிதானமாகத்தான் என்று சொல்லப்படுகிறதே...

அனந்த்: அப்படியெல்லாம் கிடையாது... அதி விரைவாகச் செயல்பட்டு வியாதியைக் குணப்படுத்தும் மருந்துகள் எங்கள் துறையிலும் உண்டு.

சீதாராமன்: தீவிரமான ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு ஒரு நோயாளி உங்களிடம் வருகிறான். உடனடியாக என்ன வைத்தியம் செய்வீர்கள்?

அனந்த்: உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் படிதான் அறிவுரை கூறுவேன்... நீங்கள் என்ன செய்வீர்கள்?

சீதாராமன்: நோயாளிக்கு 'ரெஸ்ட்' அளிக்கும் விதத்தில் மார்பியா, பெதடீன் போன்றதொரு இஞ்செக்‌ஷனைப் போட்டு விட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும் தீவிர கண்காணிப்புப் பகுதிக்கு (Intensive Coronary Unit) எடுத்துச் செல்லத்தான் நானும் கூறுவேன்.

அனந்த்: எந்த ஒரு மருத்துவனும் தன்னுடைய எல்லைகளை உணர்ந்து கொண்டு தான் சிகிச்சை செய்ய வேண்டும்... தன்னுடைய சக்திக்கு மீறினவற்றை வீம்புக்காக முயற்சி செய்து பார்ப்பது விபரீத விளைவுகளை உண்டாக்கும்!

சீதாராமன்: சரியாகச் சொன்னீர்கள்! மஞ்சள் காமாலைக்கு மருந்து கொடுத்து ஆறே மணி நேரத்தில் ஹோமியோபதி முறையில் குணப்படுத்திவிட முடியும் என்று சிலர் சொல்கிறார்களே... இது உண்மையா?

அனந்த்: நோ... ஐ டோண்ட் அக்ரீ வித் இட். மஞ்சள் காமாலையில் பதினெட்டு வகை உண்டு. எந்த வகையையும் அம்மாதிரி குணப்படுத்த முடியாது...

சீதாராமன்: 'லிவர்' பழுதடைவதால்தான் இந்நோய் உண்டாகிறது. எவ்வளவு வேகமாகப் பழுதடைகிறதோ அதே வேகத்தில் தானாகவே பழைய நிலைக்குத் திரும்பக்கூடிய சக்தி 'லிவ'ருக்கு உண்டு. மஞ்சள் காமாலை நோய்க்கு B-12, லிவர் எக்ஸ்ட்ராக்ட் போன்ற இன்செக்‌ஷன்கள் போட்டுக் கல்லீரல் குணமடைய நாங்கள் உதவி செய்கிறோம்... நீண்ட காலம் பிடிக்கும் முழுக்குணமடைய... 'லூகோ தெர்மா' வியாதிக்கு உங்கள் துறையில் மருந்துகள் உள்ளனவா?

அனந்த்: குறிப்பிட்ட நிலைவரை உள்ள இவ்வகை நோயாளிகளைக் குணப்படுத்த முடியும்... நானே குணப்படுத்தியும் இருக்கிறேன்... தீவிர நிலையில் உள்ள நோயாளிகளைக் குணப்படுத்த முடியாது...

சீதாராமன்: 'லூகோ தெர்மா' உள்ள ஒரு நோயாளி என்னிடம் வந்தான். தனது இந்த நோய்க்காக ஒரு டாக்டர், இவனது ரத்தத்தையும் B-12 மருந்தையும் இரண்டிரண்டு c. c. விகிதத்தில் கலந்து இன்செக்‌ஷன் போட்டு ஓரளவு குணப்படுத்தினார். அம்முறையில் தொடர்ந்து தனக்கு சிகிச்சை அளித்து உதவும்படி என்னிடம் கேட்டுக் கொண்டான். அவனுடைய கோரிக்கையின் அடிப்படையில் தீவிரமாகச் சிந்தித்து, எல்லாக் கோணங்களையும் ஆராய்ந்த பின்னர் அதனால் எதிர்மாறான விளைவுகள் உண்டாகாது என்று முடிவெடுத்து அம்மாதிரி சிகிச்சையைத் தொடர்ந்தேன். ஆச்சரியப் படத்தக்க விதமாக அவனது உடலின் வெண்மைப் படலங்கள் மறைந்து விட்டன. ஆனால் ட்ரீட்மெண்ட் நின்று இரண்டாண்டுகள் கழித்து மறுபடியும் தோன்றின... எங்கள் துறையிலும் இவ்வியாதியை ஆரம்பகாலத்தில் கட்டுப்படுத்த மருந்துகள் உள்ளனவே தவிர தீவிர நிலையில் பரிபூரணமாகக் குணப்படுத்தச் சரியான சிகிச்சை இல்லையென்று தான் சொல்ல வேண்டும்... அம்மை, போலியோ... போன்ற வியாதிகள் வராமல் தடுக்க குழந்தைகளுக்குப் போடப்படும் தடுப்பு ஊசி போன்று உங்கள் துறையில் தடுப்பு மருந்துகள் உண்டா?

அனந்த்: தடுப்பு மருந்துகள் எங்கள் துறையிலும் உள்ளன. ஆனால் சட்டப்படி நாங்கள் அவற்றைக் கொடுக்க முடியாது.

சீதாராமன்: சமீபத்தில் ஹோமியோபதி மருத்துவப் படிப்புக்காகக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டுள்ளதே...

அனந்த்: ஆமாம்... ஆனால் தமிழ் நாட்டுக்கு 22 சீட்டுகள்தான் இருக்கின்றன. இது உயர்த்தப் படவேண்டும்.

சீதாராமன்: ஆங்கில மருத்துவத்துறையைப் பொறுத்த மட்டில் டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

அனந்த்: ஆங்கில மருத்துவத் துறையின் முன்னேற்றம் ஒருபுறம் இருந்தாலும், ஹோமியோபதி மருத்துவத்துறையின் மூலம் வைத்தியம் செய்து கொள்பவர்களும் நிறையப்பேர் இருப்பதால் இந்தத் துறைக்கு மக்களும் அரசாங்கமும் மேலும் ஆதரவு அளித்தால் எங்களாலும் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும்...

உரையாடல் ஏற்பாடு: நாயகன்

புகைப்படம்: மன்னை மூர்த்தி

''பக்கத்து வீட்டுப் பார்வதியைப் பார்த்தியா? பொங்கல் எவ்வளவு பிரமாதமா செய்யறாளு!''

''நீங்களும் இருக்கீங்களே?''



"வஞ்சி மாநகரில் நின் தந்தை இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனின் அரசவையில் நீ இருந்தாய். அதுகாலே, அவையிலிருந்த நிமித்திகன் எழுந்து, 'தந்தைக்குப் பின் அரியணை ஏறும் அதிர்ஷ்டம் இளவலுக்குத்தான் உண்டு' என்று கூறினன். அவன்மேல் சினங்கொண்டு நிமித்திகன் கூற்றால் வருந்திய செங்குட்டுவனின்வருத்தத்தைநீக்குவான்வேண்டி, அரச பதவியை விரும்பாத மனப்போக்கினை நீ வெளிப்படுத்தினய். அத்துடனன்றி வஞ்சிக்கு மேற்றிசையிலுள்ள குணவாயிற் கோட்டத்தையடைந்து, அங்குள்ள முனிவர்கள் முன்பாகத் துறவு பூண்டனை! அதனல், முடிவில்லாத பேரின்ப அருளாட்சிக் குரிய வேந்தனுக ஆயினை!" என்று எனது வரலாற்றைக் கண்ணகி உரைத்தனள்."

இந்த நிகழ்ச்சிக்கு முன்வரை சிலப்பதிகாரக் கதை தமது காலத்தில்தான் நிகழ்ந்தது என்பதனை ஆசிரியர் இளங்கோ சூசகமாகக்கூடச் சொல்லவில்லை.

இராமாயணக் கதை தமது காலத்தில்தான் நிகழ்ந்தது என்பதனை வான்மீகியார், காப்பியத்தின் தொடக்கத்திலேயே கூறி விடுகிருர். அதுபோல, மகாபாரதம் படைத்த வியாசரும், அந்தக் காப்பியத்தின் பாத்திரங்களிலே தம்மையும் ஒரு பாத்திரமாக்கிக் கொண்டு பல்வேறு கட்டங்களில் தோன்றுகின்ருர். இளங்கோவடிகளோ, சிலப்பதிகாரக்கதை நடந்த காலத்தில் தாம் வாழ்ந்ததனை அக்கதை முடியும்வரை மறைபொருள்(சஸ்பென்ஸ்) ஆக்கி, கதையின் முடிவில் பத்தினிக் கோட்டத்தின் முன்பு தாம் தோன்றுவதின் மூலம் வெளிப்படுத்துகின்ருர். கண்ணகியின் வாழ்க்கை வரலாற்ருேடு பிணைந்த கதை இத்துடன் முடிகிறது.

கதையை முடித்து வைத்து "மல்லன் மாஞாலத்து வாழ்வீர்!" என்று உலகிலுள்ள மக்களையெல்லாம் அன்புக் குரல் கொடுத்து அழைத்து, "இதுகாறும் பத்தினிக் கண்ணகியின் கதையைக் கேட்ட நல்லவர்களே! என்னுடைய அறவுரை சிலவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள்" என்று முன்னுரை கூறி, — இளங்கோ மேலே சொல்லுகின்ருர்:

"பரிவும் இடுக்கணும்,
பாங்குற நீங்குமின்,
தெய்வம் தெளிமின்;
தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்;
புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்;
உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின்;
தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்;
தீ நட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்;
பொருள்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம்
அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்;
பிழையுயிர் ஓம்புமின்;
அரமனை காமின்;
அல்லவை கடிமின்;
கள்ளும், களவும்,
காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும்,
விரகினில் ஒழிமின்;
இளமையும், செல்வமும்
யாக்கையும், நிலையா;




உளநாள் வரையாது;
ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு
உறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து
வாழ்வீர் ஈங்கென்.

(முற்றும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600032. Editor: K. Rajendran





அமிர்தாஞ்சன்

**தலைவலி, ஜலதோஷம், உடல்வலி
இவை அனைத்தையும் போக்க இல்லந்தோறும்
இருக்கவேண்டிய நல்ல மருந்து**

தலைவலி, ஜலதோஷம், உடல்வலி ஆகியவற்றுக்கு சிறிதளவு அமிர்தாஞ்சன் தடவுங்கள். அதிலுள்ள அருமையான பத்து மருந்துப் பொருள்களின் கலவை, வியக்கத்தக்க வகையில் மிக விரைவில் நிவாரணம் அளிக்கும். சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் கைக்கு அடக்கமான சிறிய டப்பா மூன்று அளவுகளில் கிடைக்கிறது அமிர்தாஞ்சன்.



அமிர்தாஞ்சன் —
80 ஆண்டுகளுக்கு
மேலாக குடும்பங்களில்
பயன்பட்டு வரும்
நம்பகமான மருந்து.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

AM 1912

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால்செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு